
கல்கி
வைரவிழா ஆண்டு
KALKI
30.9.2001
ரூ. 5.00
வெள்ளித்திரையில்
இளையராணி!

"அம்மா உட்கார்ந்த நாற்காலியில் கூட பன்னீர் செல்வம் அமர மாட்டார். இப்போது இருக்கும் அறையிலேயே பணியைத் தொடர்வார். முதல்வர் அறையில் மறுபடி அம்மா நுழையும் வரை அதை மூடி வைத்து விடுவோம்" என்று வெறித்தனமாகச் சொன்னார் மத்திய சென்னை பிரமுகர் ஒருவர். கவர்னர் தமது அக்மார்க் சிரிப்புடன் பதவிப் பிரமாணம் செய்து வைக்க, கைகள் நடுங்க, கண்கள் கலங்க பொறுப்பேற்றுக் கொண்டார் பன்னீர் செல்வம்.

பன்னீர் செல்வத்துக்குச் செய்தி சொல்லப்பட்டபோது அவர் கண்கலங்கிப் போய் விட்டார். "அம்மா உட்கார்ந்த இடத்தில் நானா?" என்று



கண்ணீர் செல்வம்!

புலம்பினார் அவர். இதற்குள் தங்கள் ஆதங்கத்தை மறைத்துக் கொண்ட பொன்னையனும், தம்பிதுரையும் பன்னீர் செல்வத்தைத் தயார்ப்படுத்தினர். "இது ஒரு இடைக்கால ஏற்பாடு" என்று அவருக்குச் சொல்லி, ராயப்பேட்டை கட்சி அலுவலகத்துக்கு அழைத்து வந்தனர். அலுவலகத்தின் முன் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் குவிந்திருந்தனர். வாஜ்பாய் கொடும்பாவி கொளுத்தி அதை செருப்பால் அடித்தார்கள் தொண்டர்கள். கூட்ட முடிவில் பன்னீர் செல்வத்தின் பெயர் அறிவிக்கப்பட்டதும், பெரும்பாலான எம்.எல்.ஏக்களுக்கு அதிர்ச்சிதான்!

காலை முதலே படக், படக்குடன் இருந்த அமைச்சர்கள் ஒருவித டென்ஷனுடன்தான் அன்று கோட்டைக்குச் சென்றார்கள். சுமார் பத்தே முக்கால் மணி அளவில் செய்தி அவுட்டானவுடன் பல

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

அமைச்சர்களுக்குக் கண்ணீர்! உடனடியாக என்ன செய்வது என்று புரியாமல் பொன்னையன் அறைக்கு எல்லோரும் சென்றனர். பிறகு அனைவரும் கிளம்பி போயஸ் கார்டனுக்குச் செல்ல, அதற்குள் அம்மாவின் முக்கியமான ஆலோசகர்கள் அங்கே திரண்டு விட்டனர்.

• பதவியேற்பின்போது...



ஜெ. பதவி பறிபோன அதிர்ச்சி செய்தி ஒரு மணி நேரத்தில் நகரெங்கும் பரவி, ஓட்டமும், நடையுமாக கார்டன் முன் வந்து குவிந்தார்கள் தொண்டர்கள். குறிப்பாக மகளிர் கூட்டம் கண்ணீரும், கருணாநிதி அர்ச்சனையுமாக ஓடி வந்தது. முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவராக கார்டனுக்குள் நுழைந்தபோது, "நம்ம ஆட்சி தான் தொடரப் போகுது... அந்தாளை விடக் கூடாது அண்ணே" என்று வாஜ்பாய் – கருணாநிதியைத் தாக்கிக் கோஷம் போட்டது கூட்டம். அதற்குள் மற்றொரு தொண்டர், "சுப்ரீம் கோர்ட்டைக் கடுமையான சொற்களால் வசைபாட, "கோர்ட்டை தாக்காதப்பா... டி.வியில் காட்டிடப் போறாங்க" என்று டீஸண்டாக இருந்த ஒரு தொண்டர் அவரைக் கட்டுப்படுத்தினார்.

உள்ளே, பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமா... அல்லது தானாகவே ரத்தாகி விட்டதா என்று உரத்த சிந்தனை விவாதம் நடந்து கொண்டிருந்தது. கடைசியில், பதவி தானாக ரத்தாகி விட்டது என்று ஆலோசகர்கள் சொல்லி விட, புதிய நபரை முதல்வராகத் தேர்ந்தெடுப்பது பற்றி கவர்னரிடம் சொல்லக் கிளம்பினார் ஜெ.

தில்லியின் ஆலோசனைப்படி தீர்ப்புக்கு முதல் நாள் இரவே கவர்னர், சென்னைக்கு வந்து விட்டார். கோர்ட் தீர்ப்பு ஜெயலலிதாவுக்கு எதிராக அமைந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் மறுபடியும் ஜெயலலிதாவை முதல்வராகத் தேர்ந்தெடுத்து விட்டால், ஏற்படக் கூடிய சிக்கல்களைச் சமாளிக்கத் தயாராக இருந்தார் கவர்னர். கட்சி சார்பில்லாமல், அரசியல் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருப்பது பற்றி தமிழக உயர் அதிகாரிகளுக்கு தில்லி நயமாக எடுத்துச் சொல்லியிருந்தது. ஜெயலலிதா பதவி ரத்தானதைத் தொடர்ந்து, தமிழக அரசு நிர்வாகத்தில் ஓர் இடைவெளி ஏற்பட்டுள்ளதை எடுத்துக்காட்டிய கவர்னர், உடனடியாக புதிய நபரைத் தேர்ந்தெடுக்கும்படி அறிவுறுத்தினார்.

"ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரை முதல்வர் பொறுப்புக்

> **சசிகலா இனத்தைச் சேர்ந்தவர் என்பது பன்னீர் செல்வத்தின் கூடுதல் பலம். இவரது தேர்வின் மூலம், போயஸ் தோட்டத்தில் சசிகலா குடும்பத்தினர் செல்வாக்குக் கொஞ்சமும் குறையவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.**

குத் தேர்ந்தெடுப்பதே பொருத்தமாக இருக்கும்; கட்சியிலும் முணுமுணுப்பு இருக்காது'' என்ற கருத்தை ஜெ.விடம் தெரிவித்தனர் ஆலோசகர்கள். பல பெயர்களைப் பரிசீலித்த பிறகு, கடைசியில் அந்த யோசனை தினகரனிடமிருந்துதான் வந்ததாம். பெரியகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் வருவாய்த் துறை அமைச்சரும் நீண்ட காலமாக சசிகலா குடும்பத்துக்கு விசுவாசமாக இருப்பவருமான ஓ. பன்னீர் செல்வத்தை நியமிப்பது என்று முடிவாயிற்று. சசிகலா இனத்தைச் சேர்ந்தவர் என்பது பன்னீர் செல்வத்தின் கூடுதல் பலம். இவரது தேர்வின் மூலம், போயஸ் தோட்டத்தில் சசிகலா குடும்பத்தினர் செல்வாக்குக் கொஞ்சமும் குறையவில்லை என்பது மறுபடியும் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

''இப்போதுதான் தமிழ்நாட்டில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் முதல்வராகி இருக்கிறார்'' என்றார் ஒரு பிரமுகர். ''ஒரு கல்லில் இரண்டு மாங்காய். விசுவாசமான ஒருவரைப் போட்டிருக்கிறார் அம்மா. அதே சமயத்தில் வரும் உள்ளாட்சித் தேர்தலில் முக்குலத்தோர்களின் ஒருமித்த ஆதரவும் எங்களுக்குக் கிடைத்துவிடும்'' என்றார் மற்றொரு பிரமுகர்.

அக்டோபர் ஒன்றாம் தேதிக்குப் பிறகு டான்ஸி விசாரணை துவங்க இருக்கிறது. ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் அந்த வழக்கின் தீர்ப்பைப் பொறுத்து அமையும். பத்திரப் பதிவாளர் ஒருவரின் வாக்குமூலத்தை மறுபடி தனி நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, உயர்நீதிமன்றத்தில் நடக்கப் போகும் டான்ஸி விசாரணையைத் தலைகீழாக மாற்ற முயன்ற முயற்சியும் எடுபடவில்லை.

உயர்நீதிமன்ற வளாகத்தில் நீதிபதி தினகரைப் பற்றிப் பெருமையாகச் சொல்கிறார்கள். கிரிமினல் சட்ட நுணுக்கங்களில் வல்லவர் இவர். அப்பழுக்கற்ற நீதிபதியான கிருஷ்ணசாமி ரெட்டியாரின் உறவினர். எளிமையானவர். அதே சமயத்தில் உறுதியானவர்.

மூன்று மாத காலத்துக்குள் தம் மீதுள்ள குற்றச்சாட்டுக்களைத் துடைத்தெறிந்து விட்டு அம்மா மீண்டும் முதல்வராகி விடுவார் என்பது அ.தி.மு.க. தொண்டர்களின் நம்பிக்கை.

அ.தி.மு.க.வினர் உறுதியாக ஜெயலலிதாவின் பின்னால் அணிவகுத்து நிற்கும் சூழலில், இரட்டை இலைச் சின்னம் கைவசம் இருக்கும் நிலையில், அரசியல் ரீதியாக ஜெ. இன்னமும் அசைக்க முடியாதவராக இருக்கிறார்.

உள்ளாட்சித் தேர்தலில், ''கருணாநிதி செய்த சதி காரணமாகத்தான் முதல்வர் பொறுப்பு வகிக்க முடியவில்லை'' என்று அவர் பிரசாரம் செய்வார் என்பதையும் உணர்ந்தே இருக்கின்றனர் தி.மு.க.வினர். இந்தப் பிரசாரத்தை முறியடிப்பதில் தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் முனைப்பு காட்ட வேண்டும் என்கின்றனர் உடன்பிறப்புகள்!

— ப்ரியன்

உணவு ஸ்பெஷல்

அடுத்த இதழ்

புரட்ட புரட்ட நாவில் நீர் சுரக்கும்...

- 'கடுகு' மேட்டரிலிருந்து கோயில் பிரசாதம் வரை, எதையாவது விட்டு வைத்தால் தானே!
  – கம்ப்ளீட் ஃபுட் ஸ்பெஷல்

அதிக பக்கங்கள்; புத்தம் புதிய செய்திகள்

- 'புதுயுக யோகா'– வலிகளிலிருந்து விடுதலை!
  – டாக்டர் ஏ.எஸ். அசோக்குமார் பயிற்சி தருகிறார், வாரந்தோறும்.



- வாசகர்கள் கலக்கும் வைர விழா ஸ்பெஷல் போட்டி!

ஒரு பிடி பிடிக்க வேண்டிய இதழ்...! டோண்ட் மிஸ் இட்!



காஞ்சனா தாமோதரன்

எழுதும்

இக்கரையில்

அமெரிக்காவைப் பின்னணியாகக் கொண்ட இளமைத் தொடர்



பேப்பர் வெயிட்டாக ஜாகூப்!

சொகுசு கார்கள், உயர்தர வைரங்கள் என்றாலே நிஜாம் மன்னர்களின் கண்கள் மகிழ்ச்சியில் விரியும் என்று சொல்வார்கள். மற்ற விஷயங்களில் எப்படியோ? இவர்களது வைரங்களையும், நகைகளையும் ஒரு சேர டெல்லியில் உள்ள நேஷனல் மியூசியத்தில் கண்காட்சியாக வைத்திருப்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே கண்கொள்ளா காட்சியாகத் தானிருக்கிறது.

உப்புக்கல் வைரக்கல் ஆகுமா என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் உப்புக்கல் அளவுக்கான வைரங்கள் இங்கே ஜொலிக்கின்றன.


ஒவ்வொரு நகைக்கும் பின்னால் நேர்மை, அன்பளிப்பு, கௌரவம், துன்பம், அழிவு உணர்வுகள் என ஒவ்வொரு கதை உண்டு. வைரங்களைப் பட்டைத் தீட்டுவதற்கு முன்பே, வெட்டி எடுக்கப்பட்டவற்றை அப்படியே வாங்கி நகைகள் செய்யக் கொடுப்பதுண்டாம். அணிவதற்குத் தகுதியின்றி அதிக எடை இருந்தாலும் பரவாயில்லை என்றும் வாங்குவதுண்டு. அப்படி வாங்கப்பட்ட 185 காரட் ஜாகூப் வைரம், நிஜாம் மேஜையில் பேப்பர் வெயிட்டாக பயன்படுத்தப் பட்டதாம்!

வைரங்களையும் நகைகளையும் சேகரிக்கும் வழக்கம் இவர்களுக்கு ஔரங்கசிப் காலத்திலேயே துவங்கிவிட்டது. அவரது மதிப்பிற்குரியவராகத் திகழ்ந்த மிர் குமாருதீனை டெக்கன் சமஸ்தானத்திற்கு 1713 ஆம் ஆண்டு வைஸ்ராயாக நியமித்தார் ஔரங்கசிப். தென்னிந்தியாவைப் பொறுத்தவரைக் குமாருதீன் ஓர் அயல் நாட்டவர். இருப்பினும் அவரால் உருவாக்கப்பட்ட நிஜாம் பரம்பரை தான் அடுத்து 225 ஆண்டுகள் டெக்கன் சமஸ்தானத்தை அரசாண்டது. இவர்கள் செல்வம் என்பது எவ்வளவு முக்கியமென்பதையும் உணர்ந்திருந்தனர். தங்களைப் பார்க்க வருபவர்கள் யாராக இருந்தாலும் தங்களுடைய விசுவாசத்தைக் காண்பிக்க கொடுக்கப்படும் பரிசு வைரங்களாகத் தானிருக்க வேண்டுமென்று எழுதப்படாத சட்டமொன்றை கொண்டு வர, வருபவர்கள் தங்களை உயர்த்திக் காட்டிக் கொள்ள ஒருவருக்கொருவர் மிஞ்சும் வகையில் வைரங்களைப் பரிசாக அளித்தார்கள்.

தங்களுடைய குடும்பப் பெண்கள் விசேஷ காலங்களிலேயோ, முக்கிய நிகழ்ச்

சிகளிலேயோ மட்டுமே நகைகளை அணிய அனுமதித்தனர். நிகழ்ச்சிகள் முடிந்ததும் உடனடியாக நகைகளை கழற்றிக் கொடுத்து விட வேண்டுமாம்.

ஆறாவது நிஜாம் மெகபூப் அலி பாட்சா பதவியேற்றபோது உலகின்





பாதி நாடுகள் இஸ்லாமிய நாடுகளாகவும் மீதி நாடுகள் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளாகவும் மாறியிருந்தன. தனக்குக் கௌரவம் சேர்க்கும் வகையில் 1891 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க வைர வியாபாரி அலெக்சாந்தர் மால்கம் ஜாகூப் என்பவரிடமிருந்து வைரமொன்றை வாங்க மெகபூப் அலி முயற்சித்தபோது பேரம் சரிவர படியாமல் பிரச்னையாகி விசாரணை கமிஷன் முன் ஆஜராக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வழக்கு மன்றத்தைச் சந்தித்த முதல் நிஜாம் மன்னரும் இவர்தான்.

கடைசி மற்றும் ஏழாவது நிஜாம் மன்னரான மிர் உஸ்மான் அலிகான் காலத்தில் 'ஜாகூப் வைரம்' ஒரு வழியாக கைக்கு வந்தது. நிஜாம் பரம்பரையிலேயே இதுவரை வாங்கப்பட்ட வைரங்களிலேயே மிகப் பெரிய பெருமைக்குரிய வைரமாக இது கருதப்பட்டது.

நிஜாம்களின் பெரும்பாலான சொத்துக்களும் வைரங்களும் 1952 ஆம் ஆண்டு பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு டிரஸ்ட்களாக மாற்றப்பட்டன. 1971ஆம் ஆண்டில் நகைகளை விற்பனை செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டபோது மத்திய அரசின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது. 23 ஆண்டு கால நீதிமன்ற போராட்டத்திற்குப் பிறகு நிஜாம் நகைகளனைத்தையும் அரசாங்கம் சொந்தமாக்கிக் கொண்டபோது அவற்றின் மதிப்பு 135 மில்லியன் பவுண்டு என 1995 ஆம் ஆண்டு லண்டனில் உள்ள கிரிஸ்டி ஏல நிறுவனம் மதிப்பிட்டது. நிஜாம் ஜுவல்லரி டிரஸ்டிற்கு அனைத்து சேகரிப்புகளுக்காக மத்திய அரசு 218 கோடி ரூபாய் வழங்கியது.

ஆறாண்டுகளுக்குப் பிறகு நிஜாம் குடும்பத்தினருக்கும் மத்திய அரசுக்கும் இடையே இருந்த பிரச்னைகள் சட்டப்படி உச்சநீதிமன்றம் மூலம் தீர்வடைந்துவிட்டன. ஆனால் இப்போது ஆந்திர முதலமைச்சர் அந்தச் சொத்துகளனைத்தும் ஆந்திர மாநிலத்திற்குத்தான் சொந்தமென்பதால் தங்களிடம் ஒப்படைக்கும்படி வற்புறுத்தி வருகிறார்.

இந்த நகைகளைக் கண்காட்சி போல் வைப்பதற்கு முதலில் மொகல்லா அரண்மனையை ஆந்திர அரசு தேர்ந்தெடுத்தது. ஆனால் அது சார்மினார் பகுதிக்கு அருகில் ஜனசந்தடி மிகுந்த இடத்தில் இருப்பதால் பாதுகாப்பானது அல்ல என்று உசைன் சாகர் அருகே புதிய கட்டடமொன்றை கட்ட திட்டமிட்டனர். அதுவும் பின்னர் கைவிடப்பட்டது. நிஜாம் இருந்தபோது நஸ்ரிபாக் அரண்மனையில் அனைத்து நகைகளையும் வைரங்களையும் வைத்திருந்தார் என்பதால் அந்த அரண்மனையையே விலைக்கு வாங்கி நிரந்தரமான மியூசியம் ஒன்றை அமைத்தால் உலகத்தரம் வாய்ந்த பாதுகாப்பான இடமாக இருக்குமென்றும் யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசோ மாநில அரசோ யார் பொறுப்பில் இருந்தாலும் கோடிக்கணக்கான மதிப்புள்ள இந்த பொக்கிஷங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியம்தானே?

— அ.குமார்

முத்துக்கருப்பனா?



• ஆஷிஸ் வித்யார்த்தி

டேவிட் தவனின் புதிய இந்திப் படத்துக்காக, ஸ்டுடியோவில் 'ஷூட்' பண்ணிக் கொண்டிருந்தவரை நீங்கள் பார்த்திருந்தால், "அட.. நம்ம கமிஷனர் முத்துக்கருப்பன் சார் இங்கே யாரை ஷூட் பண்ண வந்திருக்கிறார்?" என்றுதான் அசந்திருப்பீர்கள்; ஆனால், 'தில்' படத்தின் மூலம் தமிழர்களின் 'தில்'லில் இடம் பெற்றுவிட்ட ஆஷிஷ் வித்யார்த்திதான் அவர்.

"வில்லன் என்பவர், ஹீரோவைவிட கொஞ்சம் வில்லத்தனம் அதிகமாகப் பெற்றிருப்பவர்; ஹீரோ என்பவர் வில்லனைக் காட்டிலும் சிறிதே ஹீரோத்தனம் தூக்கலாக உள்ளவர்" என்று அவரே உதிர்த்த பொன்மொழியின் அடிப்படையில், அன்று, கொஞ்சம் வில்லத்தனமான ஹீரோவைச் சந்தித்தோம்.

கலைத்துறையில் பிரவேசித்தது...?

பத்து வயதில், டில்லியில், சிவ்நிகேதனில் படித்துக் கொண்டிருந்தபோது, எலிசபெத் கோபா என்ற ஜெர்மானியப் பெண்மணி, உணர்ச்சிகளை வெளிக்காட்டுவது பற்றி அழகாகச் சொல்லிக் கொடுத்து, நாடகங்களில் நடிக்கப் பழக்கினார். அப்போது, நாடகத் துறையில் சிறந்து விளங்கிய ஹபீப் தன்வீர், என்னை, உஜ்ஜயினியில் பிரசித்தி பெற்ற காளிதாசர்

நாடக விழாவில், 'லவ'னாக நடிக்கத் தேர்ந்தெடுத்தார். அதுதான் பிள்ளையார் சுழி. அப்புறம் பாரதிய வித்யா பவனில் பயின்று, வருடந்தோறும் நாடகப் போட்டியில் கலந்து கொள்வேன். எட்டாவது படிக்கும்போது, என் அப்பா என்னை 'நேஷனல் ஸ்கூல் ஆஃப் ட்ராமா' வில் சேர்த்துவிட்டார். பிறகு ஹிந்துகாலேஜில் படித்த போதும், காலேஜ் விட்டதும் 'மண்டி ஹவுஸுக்கு' ஓடி வந்து, என்.எஸ்.டி.யிலிருந்து பாஸாகி வந்தவர்கள் போட்ட நாடகங்களிலெல்லாம் நடித்தேன். பண்டிட் சத்யதேவ் துவே என்பவர், நடிப்புக் கலையில் புதிய பரிமாணங்களை எனக்கு உணர்த்திய குரு.

மும்பையில் பிரவேசித்தது...?

1992ல், கேதன் மேத்தாவின் 'சர்தார் படேல்' படத்தில், வி.பி.மேனன் என்ற 56 வயது கதாபாத்திரமாக, தலையை ஒரு வருடம் மழித்துக் கொண்டு நடித்தேன். அடுத்து வந்த "துரோஹகால்', சிறந்த துணை நடிகனுக்கான தேசிய விருதை எனக்குப் பெற்றுத் தந்தது. மஹேஷ் பட், 'நாஜாயஸ'ில் சவாலான, காது கேளாத வாய் பேச முடியாத ரோலை அளித்தார். அதில் நஸிருதீன் ஷாவுடன் நடிக்கும் போதுதான், அவர் எப்படி ஆர்ட் மூவி, கமர்ஷியல் சினிமா இரண்டையும் பாலன்ஸ் செய்கிறார் என்பதை கற்றுக்கொண்டேன். அடுத்து கோவிந்த் நிஹலானி படம்... அப்புறம் வரிசையாக படங்கள், டீ.வி. ஸீரியல்கள் என வாய்ப்புகள் குவிந்தன.

'தில்' திடீரானதா?

ரொம்ப திடீர். ராமா ராவ் என்னைத் திடீரென்று கூப்பிட்டனுப்பி, 'நீ தமிழில் ஒரு படம் செய்கிறாய்' என்றார். அவர் மீதிருந்த மரியாதையாலும் மதிப்பாலும், என்ன 'ஸ்கிரிப்ட்' என்று கூடக் கேட்காமல் 'ஓகே' என்று விட்டேன். சென்னை சென்று இயக்குனரையும் நடிகர்களையும் சந்தித்தேன். விக்ரம் வெறும் நடிகராக மட்டுமில்லை. மனிதராகவும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டார். நெருப்பில் புடம் போடப் போட தங்கம் மின்னுவது போல், விக்ரம் ஒளிர்கிறார். அவருக்கு நான் தலை வணங்குகிறேன்.

முத்துக்கருப்பனைத் தெரியுமா?

ஐயோ ப்ளீஸ். எனக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமுமில்லை. அசப்பில் நான் அவரைப் போலிருப்பதாக எல்லோரும் சொல்கிறார்கள். கதைக்கும், 'தில்' சம்பவங்களுக்கும் இந்த ஜென்டில்மேனுக்கும் எந்த தொடர்புமில்லை. அப்படித் தோன்றினால் அது சந்தர்ப்ப சூழ்நிலையால் விளைந்ததுதான்.

(ஒருநாள் 'முதல்வன்' போல்) ஒரே நாள் போலீஸ் கமிஷனரானால்...?

முதலில் ஸ்கிரிப்ட் ரைட்டரையும், டைரக்டரையும் கூப்பிட்டு அனுப்புவேன். ஒரு நடிகனின் உயிர்ப்பே இவர்கள் கையில்தானே? நான் என்ன பேச வேண்டும் எதைச் செய்ய வேண்டும் என்று இவர்கள் சொல்லிக் கொடுத்தால்தானே என்னால் இயங்க முடியும்?

தமிழகத்தில் ரசித்தது?



''என்னை வடக்கத்தியன் என்றோ, தெற்கத்தியன் என்றோ முத்திரை, குத்துவது எனக்குப் பிடிக்காது. யாருக்கும் சொந்தமாகாமல் அனைத்திலும் வியாபித்திருக்க விரும்புகிறேன்''

மக்களின் எளிமை; அஜீத் பெரிய சூப்பர் ஸ்டார். ஆனால் எவ்வளவு எளிமையாகப் பழகுகிறார்? எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிறார்? 'சரண்' பார்த்தேன்; ரசித்தேன்; சங்கர், மணிரத்னம், கமல் ஹாசன் போன்றோர் பெயரைக் கேட்டே சிலிர்த்தேன். இத்துறையில் எவ்வளவு நூதனங்களைப் புகுத்தியுள்ளார்கள் என வியந்தேன்.

தமிழர்களின் தனிச் சிறப்பு.

நாலு மாதத்தில் ஒரு படத்தையே முடிப்பதென்பது இங்கே (ஹிந்தியில்) கனவிலும் நிகழாதது. தினமும் என் கண்ணுக்கருகில் ஒரு 'வடு'வுக்காக ஒரு மணி நேரம் மேக்கப் போடுவார்கள். இதனால் 18 மணி நேரம் கண்ணை இமைக்க முடியாது. வலி உயிர் போகும். மறுநாள் ஸ்பிரிட் தடவும் போது எரிச்சலாய் எரியும். 'பொறு, பூமி யாள்வாய்' என்பார் இயக்குனர். அப்படியே பலித்தது.

கல்கி – பி.எம். சில்க்ஸ் இணைந்து வழங்கும் பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 6 முடிவு :



• வைரப்பெண் ஹீரா

வைரப் பெண் யாரென்று கேட்டிருந்தோம். வந்து குவிந்த வாசகர்கள் கூப்பனிலிருந்து, குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகி.

**பி. பாலசண்முகதேவி,
242/2B, ஜார்ஜ் ரோடு,
தூத்துக்குடி – 628 003**

நினைத்தால் இனிப்பது?

'தில்' ஷூட்டிங்கின்போது, தமிழகத்தில் கிடைத்த அடையாளமின்மை. ஐ.ஐ.டி. பக்கத்தில், ஒரு 'டாபா'வுக்கெதிராக ஷூட்டிங். ரோட்டோரமாக நான் உட்கார்ந்திருக்க, இரண்டு ஐ.ஐ.டி. ஸ்டூடண்ட்ஸ் என்னிடம் வந்து, 'சார் உங்களுடன் நாங்க உட்காரலாமா?' என்றனர். நான் தலையாட்டினேன். அவர்கள் மெதுவாக, 'ஸாரி ஸார். உங்களை யாரும் இங்கே தெரிந்து கொள்ளவில்லை. நாங்கள் இந்தி ஸீரியல், சினிமா பார்ப்பவர்கள். அதனால் உங்களுக்குக் கம்பெனி கொடுக்க வந்துள்ளோம்' என்றார்கள். தமிழர்களிடமுள்ள இந்த நேச உணர்வை நினைத்தாலே இனிக்கிறது.

நினைத்தால் இனிக்காதது?

அந்த அடையாளமின்மை இப்போது போய்விட்டதே என்பது. இம்முறை சென்னை ஏர்போர்ட்டில் காலடி வைத்ததும் லக்கேஜை எடுத்தவர், 'தில்'ல நல்ல ரோல் சார்' என்று பிடித்துக் கொண்டு விட்டார். அப்புறம் இதே ரீதியில் வாழ்த்துக்கள். பாராட்டுக்கள். சுதந்திரம் போயே போச்.

மனசுக்குப் பிடித்தது..?

நிறைய பயணம் செய்வது. புதுப்புது மனிதர்களைச் சந்திப்பது, நிறைய சாப்பிடுவது - அவியலும் பிடிக்கும் 'கூடி' (மோர் குழம்பு)யும் ருசிக்கும். பிரியாணியிலும் மூழ்குவேன். இட்லி சாம்பாரிலும் நீந்துவேன்.

மனசுக்குப் பிடிக்காதது?

என்னை வடக்கத்தியன் என்றோ தெற்கத்தியன் என்றோ முத்திரை குத்துவது. என் அப்பா மலையாளி, அம்மா பெங்காலி. பிறந்து வளர்ந்தது 'இந்தி' பெல்ட்டில். பிழைக்க வந்தது மராத்திய, தமிழ், தெலுங்கு, கன்னட மாநிலங்களில். அதனால் யாருக்கும் சொந்தமாகாமல், அனைத்திலும் வியாபித்திருக்கும் நிலையை விரும்புகிறேன். வேண்டுமானால் தெற்காசிய நடிகன் என்று சொல்லிக் கொள்ளலாம்.

மனசை நெருடுவது..?

கூலான, 'லெவல் ஹெடட்' மனைவி வாய்த்திருப்பது. அவள் ஒரு வங்காளி. அவளுக்கு இரண்டு குழந்தைகள் *(ச்சொ.. ச்சொ... இவர் வாழ்வு கொடுத்திருக்கும் சோகக் கதைக்குத் தயாரானால்...)* முதல் குழந்தை நான்தான். *(ஓ.நோ.!)* ஸ்திரத்தன்மையும், புரிந்து கொள்ளுதலும் அவள் ப்ளஸ் பாயிண்டுகள். நிமிஷத்திற்கு நிமிஷம் 'மூடு' மாறுவது என் மைனஸ் பாயிண்ட். என் முதல் மனைவி பற்றியும் அவள் அலட்டிக் கொள்வதில்லை. *(ஐயோ.. அது வேறு கண்றாவியா...!)* நான் என் தொழிலைக் காதலித்து, கட்டிக் கொண்டு, கெட்டியாக மூணு முடிச்சைப் போட்டவன். *(கடிக்காதீங்கப்பா...)*

மனசைத் தொட்டது?

அண்மையில், சிவாஜி சாரின் மறைவுக்குப் பிறகு, அவர் வீட்டிற்குப் போயிருந்தேன். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அங்கே இருந்தேன். கேள்விகள் கேட்டுக் கொண்டு, வீட்டைச் சுற்றிப் பார்த்து, 'அம்மா'வுடன் அளவளாவி, பிரபுவுடன் பேசிக் கொண்டு... அவர்களது பாசமும் நேசமும் என்னை மிகவும் பாதித்துவிட்டது. அத்தகைய பொன்னான தருணங்களைப் பொக்கிஷமாகப் போற்றி, மனத்தின் அடித்தளத்தில் பாதுகாத்து வைத்துவிடுவேன்.


மனசைத் தொடாதது?

வெற்றியும், தோல்வியும். கைவசம் அர்ஜுனுடன் ஒரு தமிழ்ப் படம், மூன்று கன்னடம், ஒரு தெலுங்கு, ஏழு இந்திப் படங்கள் உள்ளன. எந்தப் படமும் வெற்றியும் பெறலாம். தோல்வியையும் தழுவலாம். ஆனால் படம் உருவாகும் போது, நேர்மையுடனும் உண்மையுடனும் உழைக்க வேண்டும். என் நடிப்பின் மூலம், என் தொழிலுக்கு மரியாதை சேர்ப்பதே என் இலட்சியம்.

— ஜெ.ஆர்.

பத்திரிகை அச்சிடுவதற்கு வேண்டிய காகிதம் மற்றும் இதர பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே போவதால் கல்கி இதழின் தனிப் பிரதி விலையை ரூ.6/- ஆக உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. வாசகர்கள் இந்த விலை உயர்வை பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த விலை உயர்வு அக்டோபர் 7ம் தேதி இதழிலிருந்து அமுலுக்கு வருகிறது.

பதிப்பாளர்
கல்கி



2001 செப்டெம்பர் 30
விஷு புரட்டாசி 14
மலர் : 60
இதழ் : 9

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



புஷ்க்கு வழிகாட்டும் பீமர்!


அமெரிக்க விமானங்களையும் பயணிகளையும் பாதுகாக்க சிறப்புக் காவலர்கள் (air marshals) நியமிக்கப்பட வேண்டும் என்று அந்நாட்டு அடார்னி ஜெனரல் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இந்த சிறப்புக் காவலர்கள் விமான பாதுகாப்புப் பணிக்கெனப் பிரத்யேகப் பயிற்சி பெற்றவர்களாக அமைவார்கள்.

ஆனால் வாஷிங்டனில் நாடாளுமன்றக் கட்டடம் தாக்கப்படாமல் காத்த பெருமைக்குரிய வீரர் எவ்வித பயிற்சியும் பெறாத இளைஞர். கம்ப்யூட்டர் நிறுவன அதிகாரியான முப்பத்திரண்டு வயது டாட் பீமர் (Todd Beamer).

கடத்தப்பட்ட விமானங்களுள் ஒன்றான போயிங் 757 (ஃபிளைட் 93)இல் இருந்தார் பீமர். கடத்தல்காரர்கள் கைவரிசையைக் காண்பிக்க ஆரம்பித்ததுமே இந்த இளைஞரும் வேறு மூன்று பேரும் அவர்களை எதிர்த்துப் போராட முடிவு செய்து, அவசரத் திட்டம் வகுத்துச் செயல்பட்டுள்ளனர்.

காரியத்தில் இறங்குமுன் பீமர் தொலைபேசி நிறுவனமொன்றை தமது செல்ஃபோன் மூலம் தொடர்பு கொண்டு தங்கள் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். தம்முடன் பேசிய டெலிபோன் ஆபரேட்டரிடம் நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொல்லி, 'எப்படியிருந்தாலும்



இந்த விமானத்திலுள்ள பயணிகள் 44 பேரும் சாகத்தான் போகிறோம். எனவே, பயங்கர வாதிகளின் சதியையாவது முறியடிக்கப் பார்ப்போம்' என்று கூறிவிட்டு, தமது மனைவிக்கும் குழந்தைகளுக்கும் தகவல் தரும்படி கூறியிருக்கிறார். மறுமுனையில் ஆபரேட்டர், 'மரணத்தின் நிழலில் நடந்தாலும் நான் அஞ்சவில்லை; நீ என்னுடன் இருக்கிறாய்' என்ற பைபிள் வாசகத்தை உச்சரித்ததும் சகாக்களுக்குச் சமிக்ஞை செய்துவிட்டு பீமர் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்.

பீமரின் துணிகரச் செயலால் விமானம் சோளக் கொல்லையில் விழுந்து நொறுங்கியது. வாஷிங்டனின் காபிடல் கட்டடம் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறது.


ஃபிளைட் 93ல் இருந்த பயணிகளுள் சிலருக்கு, உலக வர்த்தக மையம் தாக்கப்பட்ட செய்தி செல்போனில் உடனே கிடைத்திருக்கிறது. அதே சமயத்தில் தங்கள் விமானத்தை பயங்கரவாதிகள் கைப்பற்றவும், அதுவும் சதியின் ஒரு பகுதி என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

சதியை முறியடிக்க முதலில் அடி எடுத்து வைத்த வீரர்தான் பீமர். தமது மனைவிக்குக் கூட ஃபோன் செய்யாமல் தொலைபேசி நிறுவன ஆபரேட்டரை அழைத்து, பொறுப்புடன் விஷயத்தை விளக்கிவிட்டுச் செயல்பட்டிருக்கிறார். காபிடல் காப்பாற்றப்பட்டது. 44 பேரில் ஒருவராக பீமர் இறந்தார். அவர் மனைவியோ தமது கணவரின் வீரமே தமது எஞ்சிய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும் என்று வைரமொழி பேசியிருக்கிறார்.

பயங்கரவாதத்தை எப்படி அணுகவேண்டும் என்பதற்கான தலைசிறந்த உதாரணம் பீமரின் வீர முயற்சி. உணர்ச்சிவசப்பட்டு அவர் காரியத்தைக் கெடுக்கவில்லை; பயத்தில் செயலிழந்து நிற்கவுமில்லை. பயங்கரவாதிகளின் உள்நோக்கத்தைப் பளிச்சென்று புரிந்து கொண்டிருக்கிறார். அது நிறைவேறாமல் செய்வதில் வெற்றிகண்டிருக்கிறார்.

'ஒஸாமா பின்லேடனை உயிருடனோ உயிரின்றியோ கொண்டு வாருங்கள்!' என்று தடாலடி பேசும் அமெரிக்க அரசு, தங்கள் நாட்டுக்காக உயிரைத் தந்த பீமரை முன்னுதாரணமாகக் கொள்வது நல்லது.

'பின்லேடனை ஒழிப்போம்'.



'அவருக்கு அடைக்கலம் தரும் ஆஃப்கானிஸ்தானைத் தாக்கத் தயங்கமாட்டோம்.'

'பாகிஸ்தானில் படைகளை நிறுத்துவோம். ஆஃப்கானிஸ்தானை அச்சுறுத்துவோம்...' என்றெல்லாம் அமெரிக்க அரசு தரப்பிலிருந்து அறிக்கைகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

இவற்றால் ஏதேனும் பயனிருக்கிறதா என்று பார்த்தால், எதுவுமில்லை!

இடிந்துபோயிருக்கும் அமெரிக்கர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாகப் பேசவேண்டியது அவசியம்தான். ஆனால், பின்லேடனைத் தங்கத் தட்டில் வைத்து யாரும் அமெரிக்க அரசிடம் நீட்டப்போவதில்லை. ஆஃப்கானிஸ்தான், நிச்சயமாக அமெரிக்கா சொல்வதைக் கேட்கப் போவதில்லை. பாகிஸ்தான்கூட ஏதோ ஒத்துழைப்பதுபோல் பாவலாதான் காட்டுமேயொழிய, இந்த விஷயத்தில் நிச்சயமாக அமெரிக்காவுடன் ஒத்துழைக்காது. மாறாக, அமெரிக்க அச்சுறுத்தல்களால் அங்கே கிளம்பியிருக்கிற ஆஃப்கன் அகதிகள் பிரச்னை அமெரிக்க - பாக் நல்லுறவைத்தான் பாதிக்கும். அகதிகளோடு அகதிகளாக ஊடுருவும் பயங்கரவாதிகளால் இந்தியாவுக்கும் தொல்லைகள் அதிகரிக்கும்.

தனது பராக்கிரமத்தை உணர்த்துவதற்காகவோ அல்லது இத்தனை நடந்த பின்பும் சும்மாயிருக்கலாகாது என்றோ அமெரிக்கா, ஆஃப்கானிஸ்தானைத் தாக்க முடிவு செய்தால், அது உலகின் பார்வையில் மன்னிக்க முடியாத குற்றமாகிவிடும். அப்பாவி மக்கள்தான் கொன்று குவிக்கப்படுவார்களேயொழிய பின்லேடனோ அவரது குழுவினரோ அகப்படுவது துர்லபம். யாரும் சிந்தித்துப் பாராத இடத்துக்கு இந்நேரம் பின்லேடன் பெயர்ந்து போயிருப்பது உறுதி.

அமெரிக்க உளவுத்துறை காதும் காதும் வைத்தாற்போல் செயல்பட்டு, வீரம், சாகசம், நவீன தொழில்நுட்பம், நெஞ்சுறம் என்கிற கலவையில் ஒரு திட்டம் வகுத்துக் கொள்ளட்டும். அது குறித்துத் தமுக்கடிக்காமல் நிறைவேற்றிக்காட்டட்டும். பயங்கரவாதத்தின் பிரதான முடிச்சுகளைத் தாக்கி வெற்றிகொள்ளட்டும். ஒரு பாவமும் அறியாத உயிர்களைப் பலிகொள்ளும் இன்னொரு யுத்தத்துக்கோ, யுத்தம் போன்ற நிலைமைக்கோ இடமளிக்கலாகாது. ○





நில், கவனி, வெற்றிகொள்!

கல்கி ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

இணைந்து வழங்கும்

இளைஞர் திருவிழா!

சாதா வாழ்க்கையை, சுவாரசியமாக்குவதே 'கலை'தான்! கற்கால மனிதனை, தற்கால மனிதனாக்கியதில் பெரும்பங்கு கலைக்கு உண்டு. நல்ல ரசனைகள் மேம்பட மேம்பட, மனக் கசடுகள் அகன்று, ஜீவிதம் சிறக்கிறது. "கலையே, என் வாழ்க்கையின் நிலை மாற்றினாய்!" என்று பேச வருகிறார்கள் முக்கனி கலைஞர்கள்.

தலைப்பு	:	**கலை**
நாள்	:	30.9.2001 (ஞாயிறு)
நேரம்	:	மாலை 6 மணி
இடம்	:	மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் அரங்கம், ஆலிவர் சாலை, சென்னை-4
தலைமையுரை	:	மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன்
சிறப்புரை	:	ஏ. நடராசன் (சென்னை தொலைக்காட்சி முன்னாள் இயக்குனர்)
குயிலுரை	:	சுதா ரகுநாதன்

அனைவரும் வருக, வருக!

அனுமதி இலவசம்!

Heinz
Trust • Taste • Nutrition

இலவசம்



ஒரு ஜூஸர்*

ஒவ்வொரு ஃபாரெக்ஸ் பேக்குடன்

இப்போது ஃபாரெக்ஸிலிருந்து உங்கள் குழந்தை ஊட்டச்சத்தை மட்டும் பெறவில்லை. அதோடு கூட ஒரு கவர்ச்சியான ஜூஸரும் ஃபாரெக்ஸ் உடன் கிடைக்கிறது, இலவசமாக! உங்களின் பிரியமான குழந்தைக்கான உணவை நீங்கள் வாங்க இன்னும் ஒரு காரணம்!







Farex®
GROWING UP RIGHT

*இச்சலுகை சரக்கு உள்ள வரையே. இச்சலுகை தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் மட்டுமே. இச்சலுகை இல்லாத சரக்கும் கிடைக்கும்.

IMPORTANT NOTICE / महत्वपूर्ण सूचना: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

முக்கிய அறிவிப்பு: தாய்ப்பாலே உங்கள் குழந்தைக்கு சிறந்தது. குழந்தைக்கான உணவை அதற்கு 4 மாதமான பிறகே கொடுக்க ஆரம்பிக்கவும்.

தயவு செய்து, பேக்கின் வெளிப்புறமுள்ள ஆகாரம் கொடுக்கும் வழிமுறைகளை படிக்கவும்.


ஃபாரெக்ஸ் பேபி புக்லெட்டை இலவசமாகப் பெற கீழ்கண்ட விபரங்களுடன் எழுதுங்கள்:

குழந்தையின் பெயர்: ____________
பிறந்த தேதி: ____________
தாயின் பெயர்: ____________
முகவரி: ____________

எழுதவேண்டிய முகவரி: ஹெயின்ஸ் இந்தியா பி. லி. தி.பி.ஓ. எண். 1907, மும்பை 400 001.

CONTRACT.FRX.20921.TA


நடக்குமென்பார், நடக்கும்!




மேஷம்: கையைக் குடுங்க ஸார்! குரு பார்வை உங்க மேலே விழுதே! ரொம்ப சிறப்பான வாரமா அமையறதுக்கான சான்ஸ் இருக்கு. வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் ஆதாயம் கொண்டு வரும். கலைத் துறைக்காரங்களுக்கு ஆஹா, ஓஹோன்னு இல்லாவிட்டாலும், அளவான அனுகூலமுண்டு. பெண்களுக்கு மாமூல் பலன் தடைபடாது. வாரப் பிற்பகுதியில், புதிய முயற்சிகளில் ஈடுபடுவது அவ்வளவு நல்லதல்ல. கொடுக்கல் – வாங்கலில் கொஞ்சம் கவனமா இருக்கணும். இல்லாட்டி... அம்புடுதேன்!




ரிஷபம்: நீண்ட நெடுங்காலமா நீங்க எதிர்பார்த்த இனிப்பான செய்தி ஒண்ணு, இந்த வாரம் வந்து, உங்களை ஆனந்த நீச்சல்குளத்துல தள்ளப் போகுது. நண்பர்கள், உறவினர்கள், கேட்காமலேயே வந்து உதவுவார்கள். சுக்கிரன் 5ல் இருப்பதால், குடும்பத்தில் குதூகலம் கும்மாளமிடும். மாணவர்களின் உழைப்பும் திறமையும் தகுந்த பலன்கொண்டு வரும். விற்பனைப் பிரதிநிதிகள், தரகர்கள், கமிஷன் ஏஜெண்ட்டுகள் ஆகியோர் உற்சாகமான சூழ்நிலையைக் காண்பார்கள். ஜென்ம ராசியில் சனி இருப்பதால், சிறு சிறு பிரச்னைகள் ஏற்படும்.



மிதுனம்: ஆரம்பத்திலேயே சொல்லிட்டா, நீங்க ரொம்ப எதிர்பார்த்து, ஏமாறாம இருப்பீங்க இல்லியா? மிதுன ராசிக்காரங்களுக்கு ரொம்ப சாதாரணமான வாரம். அளவான பலன், சுமாரான பொருளாதாரம், வழக்கமான வாழ்க்கைனு அப்படியே ஓடிப் போயிடும். புதியவர்களிடம் பழகும்போது எச்சரிக்கை தேவை. பயணம் கூடாது. புதிய முயற்சிகள் வேண்டவே வேண்டாம். மனச் சஞ்சலம் இருந்தால், இறை வழிபாட்டில் ஈடுபடவும். நல்லதே நடக்கும்.




கடகம்: இன்டர்வியூவா, வாகனம் வாங்கப் போறீங்களா, பிஸினெஸ் சமாசாரமா... சிவப்பு, கருநீலம், கறுப்பு பொருள்கள் ஆதாயம் கொண்டு வரும். அதுக்கேத்தபடி, ராசியான வண்ணங்கள்ல அமைச்சுக் கிட்டீங்கன்னா, இந்த வாரம் முழுக்க 'ஓகோ' பலன்களை எதிர்பார்க்கலாம். தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் செழிப்பான சூழ்நிலை நிலவும். மனை, நிலம், வீடு வாங்குவதற்குப் பொருத்தமான காலம். ஏற்றுமதி–இறக்குமதி இனங்களில் எச்சரிக்கை அவசியம்... கொஞ்சம் ஏமாந்தாலும் கவிழ்ப்பு நிச்சயம்!




சிம்மம்: முக்கியமா, வேண்டிய விஷயம் இருக்குது! அதுதான் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். தேக ஆரோக்கியம் பலமா இருக்கறதனால, இந்த வாரத்தை சாதனை வாரமாகக் காட்டுவீங்க. நல்லவர்கள், வல்லவர்கள் புடை சூழ திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். நீங்களும் கரெக்டா 'கேட்ச்' பிடிச்சுப்பீங்க. தெய்வப் பணிகள், பிரார்த்தனைகள் நிறைவேறும். தான தருமம் செய்வதில் ஈடுபாடு அதிகமாகும். கணிதம், எழுத்து துறையைச் சேர்ந்தவர்கள் அனுகூலமான பலன் பெறுவார்கள்.




கன்னி: உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கும் சம்பவங்கள் நிகழும். அதனால் உங்கள் மதிப்பும் அந்தஸ்தும் ஏணி வைத்து ஏறும். வியாபாரிகள் வளர்ச்சி காண்பார்கள். தோல் பொருட்கள், ரசாயனம் போன்ற தொழில்கள் லாபம் கொண்டு வரும். கணவன் – மனைவி நிலை சீராக இருக்கும். மக்களால் அதிக அனுகூலமிராது.



துலாம்: "போட்டு வைத்த திட்டமெல்லாம் ஓ.கே கண்மணி'ன்னு ஜாலியா பாடப் போறீங்க. மனகலதுணிச்சலும், செஞ்சு முடிப்போம்ங்கிற தன்னம்பிக்கையும் வந்துடுச்சே! சாமர்த்தியமா பல விஷயங்களை, சொடுக்கு போட்டது போல முடிக்கப் போறீங்க. கோர்ட்டு, வழக்கு விவகாரங்கள்ல அனுகூலமான திருப்பங்கள் ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலையும், வேலையில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வும் கிடைக்கும். 8ல் சனி உலவுவதால், செலவினங்கள் கட்டுக்கடங்காமல் கபடி ஆடும்.



விருச்சிகம்: மனகல குழப்பம், பொருளாதாரத்துல ஏதோ இழுபறி, குடும்பத்துல, நிம்மதியின்மைனு சொல்ல முடியாத சங்கடம், முள்ளா உறுத்திக்கிட்டேயிருந்திருக்குமே! சூரியன், புதன், சுக்ரன் கிரக சஞ்சாரம் திருப்திகரமாக இருப்பதால, சஞ்சலமும், சலசலப்பும் குறையும். கணவன் – மனைவி உறவு நிலை அன்புடன் திகழும். ஓவியம், சிற்பம், பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குச் சுபிட்சம்! தொழிலாளர்கள் அதிகம் உழைக்க வேண்டியிருக்கும். சொந்தமாகத் தொழில் செய்பவர்கள் அனுகூலமான போக்கு காண்பார்கள்.




தனுசு: ராசிநாதன் குரு, ராசிக்கு 7ல் இருந்து, 3, 11ம் இடங்களைப் பார்ப்பது விசேஷமான பலன் தான்னு கையிலடிச்சு சத்தியம் பண்ணலாம். அதன் தொடர்பாக, மனதுக்கினிய நிகழ்ச்சிகள் நடக்கும். பணம் புரளும். உழைப்பும் திறமையும் வீண் போகாது. கலைத் துறைக்காரர்கள் கற்பனை வளம் உயரும். மகப்பேறு, மக்களால் நன்மைனு, புத்திர விஷயத்தில் அனுகூலம் உண்டாகும். நிர்வாகத் திறமை கூடும். மஹான் தரிசனம் கிடைக்கும். பயணத்தின்போது, கொஞ்சம் விழிப்பா இருக்கிறது நல்லது. காலம் கெட்டுக் கிடக்கே!




மகரம்: ஸாரிங்க, இந்த வாரம் கொஞ்சம் சங்கடமான வாரம் தான். பெற்றோர், வாழ்க்கைத் துணை, மக்கள் நலம் ஆகியவற்றில் நூறு சதவிகிதம் கவனம் தேவைப்படும். மருந்து, மாத்திரை, டாக்டர், ஊசின்னு ஏகப்பட்டது செலவாகும். மறதியால் அலுவலகத்தில் ஏதேனும் துன்பம் வந்து கடுப்படிக்கும். எதிலும் அலட்சியப் போக்குகூடாது. ராகு 6ல் இருப்பதால, எந்தப் பிரச்னை வந்தாலும், சமாளிக்கும் சக்தியைத் தந்துவிடுவார் என்பதால் கவலைப்படத் தேவையில்லை. பிரார்த்தனை பலன் தரும்.



மிதுன ராசிக்காரரான மிருதங்க வித்வான் அருண்பிரகாஷ் புதிய முயற்சிகளில் இறங்க வேண்டாமாம்!



கும்பம்: சிறப்பான வாரம் அமையப் பெற்றதற்காக வாழ்த்துக்கள். பேச்சாற்றல், செயல் திறன், எல்லாமே அதிகரிக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பக்தி மார்க்கம், ஞானமார்க்கத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் நிலை உயரப் பெறுவார்கள். பெண்களுக்கு மிகச் சாதாரணமான வாரம். கூட்டுத் தொழில் புரிபவர்கள் கண்டிப்பாக விழிப்புடன் இருக்க வேண்டும். கணவன் – மனைவிக்குள் கசமுசா நேரும். விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. கிரக வழிபாடு அமைதி சேர்க்கும்.



மீனம்: செவ்வாய், கேது 10ல் இருக்க, சனி 3ல் இருப்பதால் அரசு விவகாரங்களில் அளவான பலன்களைத்தான் எதிர்பார்க்க முடியும். உழைப்பு கூடும். திறமைக்குரிய பலன் கிடைக்கும் என்றாலும் சற்று தாமதமான வரவேற்பு வரும். இரும்பு, எஃகு, எண்ணெய் வகை லாபம் கொண்டு வரும். 4ல் குரு, ராகு உலவுவதால், அலைச்சல் உண்டாகும். உடல் நலனில் ஏமாளியாய் இருந்துடாதீங்க. பெண்களால் சிறு பிரச்னைகள் நேரிடலாம். ராகு ப்ரீதி செய்வது நல்லது. நல்லவர்கள் சகவாசம் நன்மை தரும்.

செப்டெம்பர் 26 முதல் அக்டோபர் 2 வரை

டான்ஸி வழக்கில் அரசு சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டிருக்கும் வெங்கடபதியை, 'கலக்கல்பதி' என்றுதான் சொல்கிறார்கள் கோர்ட் வட்டாரத்தில்!

ஒருநாள் மாலை அவரைச் சந்தித்தபோது, ரிலாக்ஸ்டாக தொலைக்காட்சியில் ஹாலிவுட் படம் பார்த்துக் கொண்டிருந்தார். "பிஸியாகவும், டென்ஷனாகவும் இருப்பீர்கள் என்று எதிர்பார்த்தோம்'' என்று சொன்னபோது, ஒரு சிரிப்பைப் பதிலாகத் தந்து விட்டு, "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே... என்ற கீதையின் பாதை எனக்குப் பிடித்தமானது. எந்த ஒரு வழக்கானாலும், என் கடமையை நிறைவாகச் செய்து விடுவேன். வெற்றி கண்டு



கலக்கல்பதி!

குதிப்பதுமில்லை. தோல்வி கண்டு துவளுவதுமில்லை'' என்றார்.

வெங்கடபதிக்கு வேர் செய்யாறு அருகே உள்ள கொறக்கை என்னும் கிராமம். "தாம்பரம் கிறிஸ்துவ கல்லூரியில் பியூஸி படித்துக் கொண்டிருந்தேன். அண்ணாவின் பேச்சும், எழுத்தும் பட்டிதொட்டியெங்கும் கலக்கிய காலம் அது. ஏராளமான கல்லூரி மாணவர்களைத் திராவிட இயக்கத்தின் பக்கம் திருப்பிய பெருமை அண்ணாவுக்குண்டு. அப்போது நடந்த தேர்தலில் தாம்பரம் தொகுதியில் தி.மு.க. சார்பில் நின்ற முனுஆதியை ஆதரித்து எங்கள் கல்லூரி மாணவர்கள் செய்த பிரசாரத்தில் நானும் தீவிரமாகக் கலந்து கொண்டேன். அது தான் என் அரசியல் ஆரம்பம்."

இன்று, தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளில் முன்னணியில் இருக்கும் பல பிரமுகர்கள் சட்டக்

கல்லூரியில் வெங்கடபதியோடு ஒன்றாகப் படித்தவர்கள். அல்லது சீனியர், ஜூனியர்கள். அப்போது நடந்த போராட்டங்களில் ஆக்டிவ்வாகப் பங்கேற்கவில்லையென்றாலும், பின்னணியில் பக்கபலமாக நின்றவர் வெங்கடபதி. "படிப்பை முடித்தவுடன் பிரபல வழக்கறிஞரும், பின்னாட்களில் தலைமை நீதிபதியாக உயர்ந்தவருமான கோகுலகிருஷ்ணனிடம் ஜூனியராக சேரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. "இந்தத் தொழிலில் இன்று நான் ஓரளவாவது பளிச்சிடுகிறேன் என்றால் அதற்கு அடித்தளம் போட்ட பெருமை கோகுலகிருஷ்ணனைத்தான் சாரும். பல வழக்குகளில் அவருக்கு உதவியாகச் செயல்பட்ட போதும் தனியாகவும் என்னைத் தொழில் செய்ய அனுமதித்த பண்பாளர் அவர்'' என்கிறார் வெங்கடபதி.

அண்ணாவின் நெருங்கிய நண்பர் கோகுலகிருஷ்ணன். எனவே அவர் அண்ணா வீட்டிற்கு அடிக்கடிச் செல்லும் வழக்கம் உண்டு. சீனியர் அவ்வாறு செல்லும் போதெல்லாம் பலமுறை உடன் செல்லும் வாய்ப்பு வெங்கடபதிக்குக் கிடைத்தது.

"அரசியலில் ஒரு நயத்தக்க நாகரிகத்தைக் கடைபிடித்தவர் என்றால் அது அண்ணாதான். 1967ல் தென்சென்னை பாராளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற அண்ணா, முதல்வர் பதவியை ஏற்க ராஜினாமா செய்தார். அப்போது அந்த இடத்திற்குத் தி.மு.க. சார்பாக மாறன் போட்டியிட்டார். அவரை எதிர்த்து, கிருஷ்ணமூர்த்தி என்பவர் போட்டியிட்டார். ஒருமுறை கிருஷ்ணமூர்த்தி, அண்ணா இருந்த தெரு வழியாகப் பிரசாரம் செய்தபோது, உள்ளே என் சீனியரிடம் பேசிக் கொண்டிருந்த அண்ணா, "பாவம்.. நல்ல மனிதர். தோற்கப் போகிறார்'' என்று சொன்னார். "அண்ணாவின் வீட்டில் வாடகைக்கு இருந்த எம்.ஏ.கட்டாலா என்ற வழக்கறிஞர், அண்ணா முதல்வர் ஆனதால் அவர் வீட்டில் ஏகப்பட்ட தலைவர்கள் தொண்டர்கள் வருவதைக் கண்டு, தமக்கு தொந்தரவாக நினைத்தார். இதனால் வீட்டைக் காலி செய்ய முடிவு செய்தார். உடனே அண்ணா அவரிடம் "உங்கள் வாடகையில் தான் ஓரளவு குடும்பம் நடத்த முடிகிறது. இந்த வாடகையில்லாவிட்டால் மிகவும் கஷ்டம்தான்'' என்றார். இப்போது இதுபோன்ற விஷயங்களை நினைத்துப் பெருமூச்சு மட்டுமே விட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்'' என்று ஏங்கிய குரலில் சொல்கிறார் வெங்கடபதி.

வெங்கடபதியுடன் தோள் உரசி பிராக்டீஸ் செய்த வழக்கறிஞர்கள் பலர் இன்று நீதிபதிகளாக இருக்கிறார்கள். இவருக்கும் இரண்டு முறை வாய்ப்பு வந்தது. ஆனால் சொந்தக் காரணங்களுக்காக அந்தப் பொறுப்பை ஏற்க முடியவில்லையாம். "நான் எந்தப் பொறுப்புக்காகவும் அரசியல்வாதிகளின் சிபாரிசைப் பிடித்ததில்லை. கடந்த தி.மு.க. ஆட்சியில் கூட நான் அட்வகேட் ஜெனரலாக இருந்தபோது முதல்வர், மற்றும் அமைச்சர்கள் கூப்பிட்டால் மட்டும் சென்று பார்ப்பேன். ஆனால் கலைஞரின் பேச்சும், எழுத்தும் எனக்குப் பிடிக்குமாதலால், அவரது பிறந்த நாளின்போது மட்டும் ஆசி பெறப் போவேன்'' என்று வெளிப்படையாகச் சொல்கிறார் வெங்கடபதி.

டான்ஸி, கொடைக்கானல் ப்ளஸன்ட் ஸ்டே ஓட்டல் வழக்குகளில் இவருக்கு உதவி செய்ய ஆறு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அக்டோபர் ஒன்றாம் தேதியிலிருந்து இந்த வழக்கு விசாரணை துவங்கப் போகிறது. எனவே வெங்கடபதியின் மீது வெளிச்சம் அதிகமாகவே விழப் போகிறது!

"டான்ஸி வழக்கு விவகாரத்தில் கோர்ட் என்னை அரசு வழக்கறிஞராக நியமித்து உத்தரவு போட்டு விட்டது. கோர்ட் உத்தரவை எந்தக் காரணம் கொண்டும் மறுக்கக் கூடாது. ஒருவேளை முன்கூட்டியே என்னிடம் ஒப்புதல் கேட்டிருந்தால் 'வேண்டாம்' என்று சொல்லியிருப்பேனோ என்னவோ'' என்கிறார்.

டான்ஸி வழக்கு விவகாரத்தில், முன்கூட்டியே என்னிடம் ஒப்புதல் கேட்டிருந்தால் வேண்டாம் என்று சொல்லியிருப்பேனோ என்னவோ...



சந்திப்பு : **ப்ரியன்**
படங்கள் : **ராஜன்**

74-ல் வெயில் 63-ல் மழை!



"படுத்தால் தூக்கம் வர மறுக்கிறது. கண்களை மூடினால், வேகமாய் பறந்துவரும் விமானம் என் நெஞ்சில் மோதிப் பிளப்பது போல உணருகிறேன்" என்கிறார் கேரி சிகல் (58). வாஷிங்டன் நகரில் உள்ள சிகல் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தின் சேர்மன். எழுபதுகளின் ஆரம்பத்தில், நியூயார்க் நகரில் உலக வர்த்தக மையக் கட்டிடம் கட்டப்பட்டபோது, இவர் அங்கே சூப்பர்வைசராகப் பணி புரிந்தவர்.

"மொத்தம் மூன்றரை வருட காலம், என் கண் எதிரே இந்தக் கட்டிடம் படிப்படியாக வளர்வதைப் பார்த்தவன் நான். வானுயர வளர்ந்து நின்ற உலக வர்த்தக மையக் கட்டிடத்தை ஒவ்வொரு நியூயார்க்வாசியும் பெருமையாக நினைப்பார்கள். ஆனால், எனக்கு மற்ற அனைவரையும்விட ஒருபடி அதிகப்படியான பெருமை!" என்று கூறும் சிகல், "அந்தக் காலத்தில், வேலைக்குச் செல்லும்போது, பல நாட்கள் என் தந்தையை கூட அழைத்துக் கொண்டு போயிருக்கிறேன். என் கீழ் பணியாற்றியவர்களுடன் வேலை நிமித்தம் பேசும் நேரத்தில், என் தந்தை, கட்டிடத்தின் மேலே இருந்து, நியூயார்க் நகரின் சுறுசுறுப்பையும், பரபரப்பையும், அழகையும் மெய்மறந்து ரசித்துக் கொண்டிருப்பார்." என்று பழைய நினைவுகளில் மூழ்கிப் போகிறார்.

"உலக வர்த்தக மையம் கட்டப்பட்டபோது, (உயரம் 1350 அடி) அதுதான் உலகின் மிக உயரமான கட்டிடமாக இருந்தது. மொத்த பரப்பளவு ஒரு கோடி சதுர அடி. ஒவ்வொரு மாடியும் சுமார் ஒரு ஏக்கர் விஸ்தாரமானது. இந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பித்தபோது, சுமார் ஒன்னே கால் மில்லியன் கன அடி மண் தோண்டி எடுக்கப்பட்டு, அதை ஹட்சன் ஆற்றுப் பகுதியில் பரப்பி, இருபத்து மூன்றரை ஏக்கர் பரப்பு கொண்ட பாட்டரி பார்க் சிட்டியே புதிதாய் உருவாக்கப்பட்டது என்பது பலருக்குத் தெரியாது."

"போயிங் 707 ரக விமானங்கள் மோதினாலும் தாங்கக் கூடிய அளவுக்கு, பலமாகத்தான் இக்கட்டிடத்தை வடிவமைத்துக் கட்டினோம். ஆனால் தீவிரவாதிகள் அதைவிட பெரிய 767 ரக ஜெட் விமானத்தை மோதி டவர்களைத் தகர்த்துவிட்டனர். அக்கிரமம்! ஒருவிதத்தில் இந்த டவர்கள் சற்று விசித்திரமானவை. எழுபத்து நாலாவது மாடியில் வெயில் அடித்துக் கொண்டிருக்கும். அதே நேரத்தில் அறுபத்தி மூணாவது மாடியில் நல்ல மழை பெய்து கொண்டிருக்கும். ஆம்! அந்த அளவுக்கு மேகக் கூட்டங்களையும் தாண்டி எழுந்து நின்ற டவர்கள் அவை."

"ஒரு பக்க டவரை விமானம் மோதித் தகர்த்தச் செய்திகேட்டு, அதிர்ச்சியடைந்த நான், இரண்டாவது விமானம், இன்னொரு டவரையும் தாக்கியபோது, நானே வெடித்துச் சிதறுவதுபோல உணர்ந்தேன். நான் மறைந்தாலும், இன்னும் பல தலைமுறையினருக்கு இந்த வானுயர் கட்டிடம் வியப்பும், பெருமையும் அளிக்கும் என்று நினைத்திருந்தேன். என் வாழ்நாள் முடியும் முன்பே, இப்படி ஒரு பரிதாபம் நிகழ்ந்துவிட்டதை நினைத்தால் மனம் ஆறவே இல்லை!" என்று கண் கலங்குகிறார் சிகல்!

- சி.எம்.

மனம், மனமறிய ஆவல்

25

சாமான்களைச் சரிபார்க்கும் சடங்கு முடிந்து விட்டது. விமானம் கிளம்ப இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. தடுப்புக்கு மறுபுறமிருந்து முகமெல்லாம் உற்சாகம் பொங்க நின்று கொண்டு கையசைத்தனர் வழியனுப்ப வந்திருந்த அனு க்ளினிக்கின் பெரும்பாலான ஊழியர்கள்.

பதிலுக்குக் கையசைத்து விட்டு நகர்ந்த ராம்ஷேகர் காத்திருப்புக் கூடத்தில் உட்கார்ந்து கொண்டார். மாநாட்டின் தலைமையுரையில் என்னென்ன பேச வேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொண்டாகி விட்டது. அவற்றை எந்த வரிசையில் பேச வேண்டுமென்பதையும் ஒருமுறை சரி பார்த்துக் கொள்ளலாமே. தனது கைப் பையைத் திறந்து அதிலிருந்த ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தை எடுக்க முயற்சி செய்தபோது அது அவ்வளவு சுலபமாக இல்லை. உள்ளே பல சாமான்கள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன– சிவப்ரியாவுக்கான ஆதரவு வெள்ளம் எங்கெங்கும் பொங்கி வழிந்ததைப் போல.

'க்ளினிக்கே களை இழந்துட்ட மாதிரியிருக்கு' என்பதே ஒட்டுமொத்தக் கருத்தாக இருந்தது. இந்தக் குறுகிய காலத்தில் சிவப்ரியா அங்குள்ள அத்தனை பேர் நெஞ்சிலும் இடம்பிடித்து விட்டாள் என்பது சந்தேகமறப் புரிந்தது.

'டாக்டர் சிவப்ரியா இல்லியா?' என்று ஆற்றாமையுடன் நோயாளிகள் கூடக் கேட்டு விட்டனர். 'ரொம்பப் பொறுமைசாலிங்க அந்த டாக்டர். நல்லா விளக்குவாங்க. விஷயம் தெரிஞ்சவங்க. கர்வமே கிடையாது. அதே சமயம் காரியத்திலே நல்ல வேகம்' என்று ஒட்டுமொத்தமாகச் சான்றிதழ் கொடுத்தனர். 'டாக்டர் சிவப்ரியா இனிமே இந்த க்ளினிக்குக்கு வரமாட்டாங்களா?' என்று நான்கு நாட்களுக்கு முன் க்ளினிக்கில் அனுமதிக்கப்பட்டிருந்த தொழிலதிபர் ஒருவர் கேட்டபோது அதில் குற்றச்சாட்டுத் தொனியே இருந்தது. பதிலளிக்காமல் டாக்டர் ராம்ஷேகர் பேச்சைத் திசைதிருப்ப முயல, 'அவங்க வரலேன்னா நஷ்டம் உங்க க்ளினிக்குக்கும் எங்களை மாதிரி நோயாளிகளுக்கும்தான்' என்றார்.

சக மருத்துவர்கள் வார்த்தைகளினால் தங்களது அதிருப்தியைத் தெரிவித்தனர் என்றால் மருத்துவமனையின் பிற ஊழியர்கள் தங்களது பார்வையில் அதை வெளிப்படுத்தினர். வீட்டிலோ மனைவியும், மகளும் சிவப்ரியாவுக்காக விவாதத்திலேயே ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

சிவப்ரியாவையே வரவழைத்து விடலாமா? இந்த யோசனையைச் செயலாற்ற மயிலிறகுத் தூண்டுதல் மட்டுமே இன்னமும் தேவை என்ற சமயத்தில் முத்துலட்சுமி பிரம்மாஸ்திரத்தையே வீச, ராம்ஷேகர் நிலைகுலைந்தார். தொலைவில் அது சாதாரண அம்பாகத்தான் தென்பட்டது. வீரியம் போகப் போகத்தான் புலப்பட்டது.

முத்துலட்சுமியை மாமிதான் முதலில் அடையாளம் கண்டு கொண்டாள். 'நம்ம சிவப்ரியாவின் சிநேகிதி. முத்துலட்சுமி. நடிகர் ஹேமந்த்ஸ்ரீகுமாரோட பெண்டாட்டி. உட்காரும்மா.'

ராம்ஷேகருக்கு அவளது திடீர் வருகை பிடிக்கவில்லை. அழைப்புமணியை ஒலிக்காமல்



நுழைவதா பண்பு? தவிர கணவனும் மனைவியும் பேசிக் கொண்டிருக்கும் போது இடையில் புகுந்து பேசுவது அநாகரிகத்தின் உச்சமல்லவா? அதுவும் ஒரு அன்னியப் பெண்மணி இந்த உரிமையை எப்படி எடுத்துக் கொள்ளலாம்?

இத்தனைக் கேள்விகளையும் மீறி மற்றொரு கேள்விதான் அவரது மண்டையை அதிகம் குடைந்தது. ஏதோ சத்தியத்தை மீறப் போவதாகச் சொல்கிறாளே இவள். என்ன அது? தவிர சிவப்ரியாவை க்ளினிக்கிலிருந்து தான் நீக்கியதைப் பலரும் வேறுவிதமாக விமர்சிக்க 'துரோகம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறாள் இவள்!

முத்துலட்சுமியின் பார்வை சுவரில் மாட்டப்பட்டிருந்த அனுவின் புகைப்படத்தின் மீது

அருண் சரண்யா

பதிந்தது.

''பாவம், இவளுக்குத்தானா ஒரு கண்ணிலே கோளாறு?'' என்றாள்.

இப்போது மாமிக்கே அதிர்ச்சியாக இருந்தது. தனது தோழிக்காக இந்தப் பெண் பரிந்து பேசுவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அனு சம்பந்தப்பட்ட ஒரு விஷயம்? அதுவும் அது தனக்கே சில நாட்களுக்கு முன்புதான் விளக்கப்பட்டது என்கிற விஷயம் இவளுக்கு எப்படித் தெரியவந்தது. ஒருவேளை...?

''இல்லை மாமி. உங்க குடும்பம் சம்பந்தப்பட்ட எந்த அந்தரங்கத்தையும் சிவப்ரியா என்கிட்டே சொன்னதில்லே. சொல்லப் போனா அவளும் நானும் ஸ்கூலிலே ரொம்ப நெருக்கம்னாலும், மெட்ராஸ் வந்தப்புறம் சந்திச்சுப் பேசினதே கொஞ்ச சமயங்களிலேதான்'' என்று தானாகவே விளக்கமளித்த



''பாங்க் மானேஜரிடம் என்னய்யா சொன்னே..? அவர் மயங்கி விழுந்துட்டாரே...''

''வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பிக்கட்ட வந்திருக்கிறதாத்தான் சொன்னேனுங்க!''

– ஞா. ஞானமுத்து

முத்துலட்சுமி, ராம்ஷேகரை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினாள்.

''சுமார் ஒன்றரை வருஷத்துக்கு முன்னாலே உங்க பெண் அனுவுக்கு இந்தப் பிரச்னை இருப்பது தெரிஞ்சதும் துடிச்சுப் போயிட்டீங்களாமே டாக்டர்?''

இந்த நேரத்தில் இதெல்லாம் பதில் சொல்லத் தேவையற்ற விஷயம் என்று கருதினாலும் டாக்டரின் மனத்தில் அந்த நாள் மீண்டும் பசுமையாக வலம் வந்தது.

அவரை நிலைகுலைய வைத்த செய்தி அது. இதே போல் ஒரு நிலை வேறு யாருக்காவது ஏற்பட்டிருந்தால் 'அமைதியா இருங்க. ஒரு கண் ப்ராக்டிகலா இயங்கல லேன்னாலும் இன்னொண்ணை வச்சே இருந்துட முடியும். என்ன கொஞ்சம் அதிக கவனத்தோட இனிமே இருக்கணும், அவ்வளவுதான்' என்றுதான் அவர் ஒரு டாக்டராகக் கூறியிருப்பார். ஆனால் ஒரு தந்தையாக மட்டுமே அவரால் பெரும்பாலும் அன்று இருக்க முடிந்தது. ஒரு பொறுப்புள்ள டாக்டராக, தாம் இதை முன்னமேயே கண்டுபிடித்திருக்க வேண்டாமோ என்ற குற்ற உணர்ச்சி வேறு அவரை வதைத்தது.

''அப்படி ஒரு மனநிலையிலே நீங்க வீட்டிலேயே இருந்திருக்கலாம். ஏன்தான் க்ளினிக்குக்குப் போனீங்களோ?''

இப்போது என்ன இப்படி ஒரு அபத்தமான கேள்வி என்று முத்துலட்சுமியை அவர் கேட்டிருக்கலாம். ஆனால் அவரது 'மருத்துவ கர்வம்' முன்னுக்கு வந்தது. 'எந்த நிலையிலும் தான் என்னிடம் வரும் நோயாளிகளைக் கைவிடமாட்டேன்' என்றார்.

''அதுதான் அன்றைக்குச் சிக்கலை வரவழைச்சிடுச்சு. அன்னைக்கு மிஸஸ் மணிசங்கரை நீங்க சோதிச்சீங்களா?''

நினைவில் பொறி தட்டியது. அந்த டைரக்டரின் மனைவி அப்போது தமது க்ளினிக்கில்தானே அட்மிட் ஆகியிருந்தாள்.

''ஆமாம். அன்னிக்கு நான் அவளுக்கு மாற்று மருந்து ஒண்ணை ப்ரிஸ்க்ரைப் பண்ணின ஞாபகம் கூட இருக்கு. அதனாலே அவ சீக்கிரமா குணமடைஞ்சு வீட்டுக்குப் போனா.''

''இல்லை டாக்டர். அந்த மாத்திரையை அவங்க தொடர்ந்து சாப்பிட்டிருந்தா செத்துப் போயிருப்பாங்க.''

ராம்ஷேகர் முகத்தின் தசைகள் இறுகின. 'உளறுவதற்கும் ஒரு எல்லை வேணும். நீங்க வெளியே போகலாம்.'

'போறேன் டாக்டர். ஆனா சிவப்ரியாவுக்கு நீங்க செய்த துரோகம் உங்களைச் சும்மா விடாது.'

மாமிக்கு அத்தனை அதிர்ச்சியிலும் முத்துலட்சுமியின் மீது வியப்பு ஏற்பட்டது. 'போறேன்' என்றாளே தவிர ஒரு அடி கூட அந்த இடத்திலிருந்து நகரவில்லை அவள். எப்படியும் ஏதோ ஒரு செய்தியைச் சொல்லி விட்டுப் போகும் முடிவுடன்தான் நுழைந்திருக்கிறாள். அவள் சொல்லப் போகும் செய்தியின் வீரியமும், அதனால் அவள் உணர்ச்சிபூர்வமாக பாதிக்கப்பட்டிருப்பதும்தான் அவளை இப்படி நாடகபாணியில் பேச வைக்கிறது என்றும் மாமியின் உள்ளுணர்வு கூறியது.

''இதோ பாரும்மா. நீ சுத்தி வளைச்சு எதையோ சொல்ல வரே. நேரடியாகவே சொல்லிடு'' என்றான்.

முத்துலட்சுமிக்குக் கண்கள் திரையிட்டன. இயக்குனர் மணிசங்கர் இறப்பதற்கு முன்னால் தன்னிடம் பகிர்ந்து கொண்ட விவரங்களை ஒவ்வொன்றாக வெளியிடத் தொடங்கினாள்.

தேறிவந்த மனைவியின் உடல்நிலை அன்று மதியத்திலிருந்து நிலைகொள்ளாமல் இருப்பதை உணர்ந்தாலும் அதெல்லாம் தானாகச் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டிருந்தார் மணிசங்கர். ஆனால் திடீரென அவள் கண்கள் செருகுவதைப் பார்த்ததும் பதறிப் போய் அறையிலிருந்த மணியை வேகமாக அழுத்த, வெளியே அந்த அறைப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த சிவப்ரியா உள்ளே நுழைந்தாள்.

நாடி பிடித்துப் பார்த்தபோது சற்றே பலவீனமாக இருந்தது. சீஃப் டாக்டரையோ

வேறு யாராவது சீனியரையோ கூப்பிடலாம் என சிவப்ரியா முடிவெடுத்த போதுதான் மணிசங்கர் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"ஒருவேளை காலையிலே கொடுத்த இந்த மாத்திரையை இப்ப மறுபடியும் கொடுக்கணுமாம்மா?"

அந்த மாத்திரைப் பட்டையைப் பார்த்த சிவப்ரியா அதிர்ந்தாள். "டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டு உங்ககிட்டே இருக்கா?" என்று கேட்டபடியே, வாசற்புற மாகச் சென்று கொண்டிருந்த நர்ஸ் கோகிலவாணியை அழைத்து டாக்டர் முகுந்தனை உடனே வரச் சொன்னாள்.

மருந்துச் சீட்டைப் பார்த்ததுமே அவள் முகம் மாறியது. அவளுக்கு அந்தப் பதற்றச் சூழலிலும் நடந்த விபரீதம் விளங்கியது.

மணிசங்கரின் மனைவிக்கு அன்று ராம்ஷேகர் எழுதிக் கொடுக்க நினைத்த மாத்திரை வேறு. ஆனால் அவர் எழுதிக் கொடுத்திருந்த மாத்திரை வேறு. இரண்டு மாத்திரைகளின் பெயர்களும் ஒன்று போலவே தொடங்கினாலும் வேறு மாதிரி முடியும். கையெழுத்தைப் பொறுத்தவரை டாக்டர் சமூகத்தின் விதிவிலக்குகளில் ராம்ஷேகரும் ஒருவர். தெளிவான கையெழுத்து அவருக்கு. மருந்துக் கடைக்காரர் மருந்துச் சீட்டில் எழுதியிருந்த மாத்திரையைக் கொடுத்து விட்டார்.

விவரமறியாத நர்ஸ் அன்று காலையில் அந்த மாத்திரையிலொன்றைக் கடமை தவறாது மணிசங்கரின் மனைவிக்குக் கொடுத்துவிட, அதன் விபரீத விளைவுதான் இப்போது இப்படி.

டாக்டர் முகுந்தன் வந்தவுடன் 'மருந்துக் கடைக்காரர் தப்பான மாத்திரையைக் கொடுத்ததினால் இந்த வம்பு' என்ற முறையில் சிவப்ரியா கூறிவிட்டு அந்த மாத்திரையைக் காண்பித்தாள். பிறகு என்னவிதமான உடனடி சிகிச்சையை இப்போது அளிக்கலாம் என்பதையும் ஆலோசனை கூற, 'கரெக்ட்தானேம்மா. அதைத்தான் செய்யணும்' என்றார் டாக்டர் முகுந்தன்.

அடுத்த அரைமணி நேரத்தில் நிலவரம் கட்டுக்குள் வந்தது. "எந்த மருந்துக் கடையிலே வாங்கினீங்க? அவன் மேலே வழக்கே தொடுக்கலாம். இப்படியா பொறுப்பில்லாம தப்பான மருந்தைக் கொடுப்பது? இனிமே ஏதாவது புதிய மாத்திரையை வாங்கினா யாராவது டாக்டர்கிட்டே கட்டாயம் காண்பியுங்க. எங்க க்ளினிக் நர்ஸ் அதைக் கவனிக்காமல் கொடுத்ததும் தப்புதான். எனிவே, உங்க மனைவியைப் பற்றி நீங்க



"அரசியல்ல முப்பது வருஷமா குப்பை கொட்டிக்கிட்டு இருக்கேன்..."
"என்ன எதிர்பார்க்குறீங்க?"
"சுகாதாரத்துறை மந்திரி பதவி வேணும்."
– தாரை மா. மகேஷ்ப்ரியன்

கவலைப்பட வேணாம். இப்போ அவங்களுக்கு எந்த ஆபத்துமில்லே."

முகுந்தன் நகர்ந்த பிறகும் சிவப்ரியா அந்த அறையிலிருந்து வெளியேறவில்லை. நோயாளியைச் சௌகரியமான நிலையில் படுக்க வைத்தாள்.

"ஒருவழியா நிம்மதியாச்சு. இப்ப அடுத்த விஷயத்தைப் பற்றிப் பேசுவோமா?" என்று மணிசங்கர் கூறியதும் சிவப்ரியாவுக்குப் படபடப்பையும் மீறி ஒரு புன்னகை எட்டிப் பார்த்தது. கொஞ்சம் நிலைமை சரியாகி விட்டாலே இவருக்குச் சினிமா ஞாபகம் தான். திரும்பவும் தன்னைச் சினிமாவில் நடிக்கச் சொல்லிக் கேட்கப் போகிறாரா?"

"என்னம்மா மருந்துக் கடை மேலே வழக்குத் தொடுக்கலாமா? நீயும் ஒரு சாட்சியா இருப்பே இல்லே" என்றார்.

சிவப்ரியா தடுமாறினாள். "தயவுசெய்து இந்த விஷயத்தை விட்டுடுங்களேன். எல்லாம்தான் நல்லவிதமா முடிஞ்சிடுச்சே" என்றாள்.

"எப்படி விட சிவப்ரியா? ஒரு பொறுப்புள்ள டாக்டர் இப்படித் தப்பான மருந்தை எழுதித் தரலாமா? என்னம்மா பார்க்கிறே? மருந்துக் கடைக்காரன் மேலே தப்பில்லேன்னு எனக்கு நிச்சயமாத் தெரியும். ப்ரிஸ்க்ரிப்ஷனிலே பெயர் தெளிவாகவே இருக்கு. இந்த நிலையிலே நான் டாக்டர் ராம்ஷேகர் மேலே வழக்குத் தொடுத்தா நிச்சயம் ஜெயிப்பேன். ப்ரிஸ்க்ரிப்ஷன், மருந்துக் கடைக்காரர், டாக்டர் முகுந்தன் இப்படிப் பல ஆதாரங்கள் எனக்குச் சாதகம். ஒரு உயிரை அவ்வளவு துச்சமாக மதிக்கலாமா உங்க டாக்டர்? நீயும் என் தரப்பு சாட்சியா இருக்கணும்மா. ப்ளீஸ்."

மேலும் கோபமாக ராம்ஷேகரைப் பற்றி விமர்சிக்கவிருந்த மணிசங்கர் அதை நிறுத்திக் கொண்டார். எதற்காக இந்தப் பெண் கண்கலங்குகிறாள்? எதற்காக இவளது முகம் இவ்வளவு வேதனையைப் பிரதிபலிக்கிறது? தமது பேராசிரியராக இருப்பவர் மீது கொண்ட மரியாதையால் இந்த வேதனையா?

"சார், டாக்டர் ராம்ஷேகர் என் ப்ரொபசர் மட்டுமில்லே. எனக்கு அவர் காட்ஃபாதர் மாதிரி. இன்னிக்குக் காலையிலே அவருக்கு ஒரு பிரச்னை..."

தொடர்ந்தாள். அனுவின் கண்ணில் கண்டுபிடிக்கப்பட்ட கோளாறை. அதனால் ராம்ஷேகர் மனம் துடித்ததை. இதனால் தப்பா அவர் எழுதிய ப்ரிஸ்கிருப்ஷனை. அதனால் உண்டான விபரீத விளைவுகளை. க்ளினிக்கின் நற்பெயருக்காக அவர் கடந்த காலத்தில் மேற்கொண்ட உழைப்பை. அத்தனையும் இந்த வழக்கால் சரிந்து விடும் அபாயத்தை விளக்கினாள்.

"ஆக, என்னை அவர் மேலே வழக்குத் தொடுக்க வேணாம்ங்கிறியா? தப்பு செய்த அவரை விடுவதாலே எனக்கு என்னம்மா லாபம்? வழக்குத் தொடுக்காமலிருந்தா நீ என்ன பதிலுதவி செய்வே?"

"எது வேணாலும் சார். வருங்காலத்திலே ஒரு தேர்ந்த டாக்டராக நான் ஆன பிறகு உங்க குடும்பம் மொத்தத்துக்கும் இலவசமாக மருத்துவ சிகிச்சை செய்யறேன்" கூறிய போதே சிவப்ரியாவின் குரல் நடுங்கியது.

மணிசங்கர் இதை எதிர்பார்க்கவில்லை என்பதும் எதை எதிர்பார்ப்பார் என்பதையும் அவளால் யூகிக்க முடிந்தது. அந்த யூகம் சரிதானென்பது உடனே புரிந்தது.

"என் படத்திலே நீ நடி. வழக்குத் தொடுப்பதை நான் மறந்துடறேன்."

முத்துலட்சுமி குரல் கரகரக்கக் கூறி முடித்தாள். "உங்க கணவருக்கும் அவரோட க்ளினிக்குக்கும் கெட்ட பெயர் வரக் கூடாதுன்றதுக்காகத்தான் சிவப்ரியா நடிக்கவே சம்மதிச்சா. இப்ப என்னடான்னா அவளாலே தன் க்ளினிக்குக்குக் கெட்ட பெயர் வந்துடுமோன்னு நினைச்சு அவளை வெளியே அனுப்பி விட்டார் இந்த சுயநலவாதி."

ராம்ஷேகர் உறைந்து போக, மாமி கரைந்து கொண்டிருந்தார். "இப்படிக் கூட ஒரு பைத்தியக்காரத்தனம் செய்வாளோ ஒரு பெண். இவருக்காக அவள் ஒரு படத்தில் நடித்து தன் வாழ்க்கையில் தொடர்ந்து சிக்கல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறாள். ஏன் அப்படிச் செய்தாள்?"

யோசிக்க யோசிக்க அவளுக்குத் தெளிவாகவே விளங்கியது. தன் கணவரைப் பொறுத்தவரை சிவப்ரியாவின் மீது பாசமுண்டு. ஆனால் அதைவிட முக்கியமாக அவளை ஒரு புத்திசாலியான மாணவியாகவும், தமது மருத்துவ வாரிசாகவும்தான் பார்த்திருக்கிறார். ஆனால் சிவப்ரியா தன் கணவரை மரியாதைக்குரிய ஆசிரியராக மட்டுமின்றி ஒரு அப்பா ஸ்தானத்திலேயே அவரை வைத்துப் பார்த்திருக்கிறாள். சிறு வயதிலேயே தந்தை பாசத்தை இழந்த அந்தப் பெண் இவரை குரு-பிதா என்று டூ-இன்-ஒன்னாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் இந்தத் தியாகம்!

"இனி இவர்கள் சிவப்ரியாவின் வாழ்வை செம்மையாக்குவார்கள்" என்ற நம்பிக்கை தோன்ற, முத்துலட்சுமி கிளம்பிச் சென்றாள்.

முழுமையாகப் பத்து நிமிடங்கள் கழிந்த பின், கண்களைத் துடைத்துக் கொண்ட ராம்ஷேகர் தம் மனைவியிடம் 'நான் ஒரு பெரிய முடிவை எடுத்துட்டேன்" என்றார்.

லண்டனுக்குச் செல்லும் விமானத்திற்காகக் காத்திருந்த இந்த நேரத்திலும் கூட அதுதான் மிகச் சரியான முடிவு என்று பட்டது அவருக்கு.

(அடுத்த இதழில் முடியும்)

செருப்போடு கோயிலுக்கு!

காலணியுடன் தான் கோயிலுக்குள் செல்ல வேண்டும். காலணி இல்லாவிட்டால் கோயில் நிர்வாகத்தார் கொடுக்கும் காலணியைப் போட்டுக் கொண்டுதான் உள்ளே நுழைய வேண்டும் என்ற வழக்கம் நம் நாட்டில் இமாசலப் பிரதேசத்தில் உள்ளது. வெறுங்காலுடன் போக முடியாது. ஆலயங்களினுள்ளே அணிந்து செல்ல நாரினால் ஆன காலணியை உபயோகிக்கிறார்கள். கோயில்களிலும் இதைக் கொடுக்கிறார்கள். ஒரு வகையான போதைப் பொருளைத் தரும் செடியிலிருந்து நாரை எடுத்து இந்தக் காலணியைத் தயாரிக்கிறார்கள்.




– ஔவை ஏ.எஸ். யோகானந்தம்



• ஜெயந்தி



• கலைஞர்



• ஸ்டாலின்



தப்பிய ரஜினி!

இணைந்து விடுவாராம்.

● தி.மு.க.வில் அப்பா - மகனிடையே ஒரு உணர்ச்சிமய போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் நடக்கும் பட்சத்தில் 'மேயர் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லை' என்று ஸ்டாலின் செய்த முடிவு கலைஞருக்குக் கொஞ்சம் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. "பல குற்றச் சாட்டுக்களைத் தன்மீது கொண்டுள்ள, தண்டனை பெற்ற ஜெயலலிதாவே அ.தி.மு.க.வை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்போது, ஸ்டாலின், மேயர் தேர்தலில் போட்டியிடத் தயங்கக்கூடாது" என்பது கலைஞரின் வாதம்.

நெருக்கடியான இந்த நேரத்தில் போட்டியிட்டு ஐந்தாண்டு கால பணிகளுக்கு மக்களிடையே ஸ்டாலின் அங்கீகாரம் பெற வேண்டும் என்றும் அவர் நினைக்கிறாராம். ஆனால் ஸ்டாலினோ "ஜெயலலிதா முதல்வராக இல்லாவிட்டாலும் இன்னும் ஐந்தாண்டு காலத்துக்கு அ.தி.மு.க.தான் ஆட்சியில் இருக்கும். நான் வெற்றி பெற்றால் பல தடைகளை அவர்கள் உருவாக்குவார்கள்" என்று தயங்குகிறாராம்.

ஸ்டாலின் வேண்டாம் என்றால் அடுத்த சாய்ஸ் பரிதி இளம்வழுதி என்று கழகத்தில் சொல்கிறார்கள்.

● மூப்பனார் காலத்திலேயே செல்வாக்காக இருந்த ஜி.ஆர். என்றழைக்கப்படும் ஜி. ரங்கசாமி மூப்பனார். இப்போது வாசன் தலைவராக மாறிவிட்டபோது கட்சியை ஆட்டுவிப்பவராக உருவாகிவிட்டார். கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்ததில் ஜி.ஆருக்கும் முக்கிய பங்கு உண்டு. இப்போது, உள்ளாட்சித் தேர்தலை ஒட்டி த.மா.கா.வில் ஜி.ஆர். முக்கியப் பொறுப்பேற்றிருக்கிறார். இடங்கள் கேட்பது, ஒதுக்குவது போன்ற பல முக்கியமான முடிவுகள் ஜி.ஆரால் தான் எடுக்கப்படுகின்றன. வாசனிடம் கட்சி பற்றி கருத்தோ ஆலோசனையோ கூறினாலும், "ஜி.ஆர். ஐயாவிடம் கூறிவிடுங்களேன்" என்கிறாராம். எஸ்.ஆர்.பி., பீட்டர் போன்ற முன்னணிப் பிரமுகர்கள் கொஞ்சம் சங்கடப்பட்டாலும் வேறு வழியின்றி ஜி.ஆர். பாதையில் நடைபோடுகிறார்கள்.

இதற்கிடையில், காங்கிரஸ் தலைமையிடம் நெருங்கிவிட்ட ஜெயந்தி நடராஜன், அமெரிக்காவுக்கு இரண்டு மாத பயணமாகச் சென்றுவிட்டார். திரும்பி வந்ததும் சோனியாவுடன்

● நியூயார்க்கில் உலக வர்த்தக மையக் கட்டிடங்களின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியபோது சுமார் ஐந்து கி.மீ. தூரத்தில் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தாராம் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். உடனேயே தொலைபேசி மூலம் வீட்டிற்கும் சத்தியநாராயணாவுக்கும் ஃபோன் செய்து பயப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

— சஞ்சயன்



RANI. V. SUNDARRAO
FOUNDER OF
"RANEE SAREES"

ஸ்ரீ:

சென்னை தி.நகர்

ராணி சாரீஸின்

நவராத்திரி சிறப்பு தள்ளுபடி விற்பனை

28-09-2001 முதல் 07-10-2001 வரை

★ ராணி சாரீஸ் புடவைகள் ★ கைத்தறி புடவைகள்
★ மற்றும் அனைத்து ரக ஃபேன்ஸி புடவைகள் ★ வேஷ்டிகள்

RANEE SAREES Exclusive Shopee

Gold Crest Complex 1st Floor, 54-55, North Usman Road,
Opp. Saradha Vidhyalaya School (Near Petrol Bunk) Panagal Park,
T.Nagar, Chennai-600 017. Ph : 8217308, 8217309

N.B. : இந்த விளம்பரத்தை கட் செய்து கொண்டு வரும் வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் தினமும் ஒரு நபருக்கு தங்க நாணயம் பரிசாக அளிக்கப்படும். ★

★ **Conditions Apply**

காலை மாலை காபி 3 வேளை சைவ உணவு, தங்குமிடம் உள்பட 3 Tier இரயில் சுற்றுலாக்கள் சென்னையிலிருந்து துவங்குகின்றன.

22.10.2001 மற்றும்7.11.2001 முதல் 12 நாட்கள் தீபாவளி கங்காஸ்நான சுற்றுலா–பூரி புவனேஸ்வர்–கோனார்க் – கல்கத்தா – கயா – புத்தகயா – காசி – திரிவேணி – அயோத்தி **ரூ 3690/–**

மேற்கண்ட சுற்றுலாவுடன் கூடுதலாக 10 நாட்கள் சேர்த்து ஹரித்துவார் – ரிஷிகேஷ் – டேராடுன் – சகஸ்த்ரதாரா – அமிர்தசரஸ் – இந்திய – பாகிஸ்தான் எல்லை – வாகா பார்டர் – டெல்லி – ஆக்ரா – மதுரா – பிருந்தாவனம் – ஜெய்பூர் – மும்பாய் – பண்டரிபுரம் (மொத்தம் 22 நாட்கள்) **ரூ 5690/–**

7.11.2001 முதல் 14 நாட்கள் தீபாவளி கங்காஸ்நான சுற்றுலா – ஐதராபாத் – மும்பாய் – திரிவேணி – அயோத்தி – காசி – கயா – புத்தகயா – கல்கத்தா – **ரூ 4590/–**

அந்தமான் தீவுகள் சுற்றுலா : 26.10.2001 மற்றும் 30.11.2001–ல் ஆரம்பம். அந்தமானில் சைவ உணவு, தீவுகள் சுற்றிபார்க்கும் செலவு, 2 படுக்கைகள் உள்ள T.V. தங்கும் அறை வசதியுடன் போக,வர A/c பங்க் கிளாஸ் கப்பல் ரூ 8000. போக,வர A/c கேபின் கிளாஸ் கப்பல் ரூ 12000. போக A/c கேபின் கிளாஸ் கப்பல்,திரும்பி வர விமானம் ரூ 14500. போக,திரும்பிவர விமானம் ரூ 16000.

சன் டிராவல்ஸ்

தலைமை அலுவலகம் : 121, நேதாஜி ரோடு, மாடர்ன் ரெஸ்டாரண்ட் எதிரில், மதுரை – 1.
போன் : 741133, 744466 செல் : 98421–56668 உரிமையாளர் : **K. சிதம்பரம்** BSc., B.Ed.,
கிளை : பேரின்பராஜ் காம்ப்ளக்ஸ், 30 நடேசன் தெரு, தி.நகர், சென்னை – 600 017. போன் : 4359194
கும்பகோணம் அன்பர்களுக்கு,
K. கன்னையா பிரசாத் ஸ்டுடியோ, 13–B கோதண்டபாணி தெரு, கும்பகோணம். போன்.: 433550

மண்டை காய வைத்துவிட்டீர்களே!

✉ டான்சி வழக்கில் ஜெயலலிதா தேடிக் கண்டுபிடித்த இழுத்தடிப்பு ஆயுதமே அவரை பூமராங்காய்த் தாக்கப் போகிறது என்பது நிச்சயம். வருங்கால அரசியல்வாதிகளைப் புனிதப்படுத்த டான்சி தீர்ப்பு உபயோக மாய் இருக்கும் என்னும் நம்பிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

நெல்லையப்பபுரம், டி.செல்வன்

✉ வலிகளைக் கண்டு அஞ்சி விலகி ஓடாமல் வலிந்து ஏற்றுக் கொண்டு அவற்றை எதிர்கொண்டால் வழிகள் தானே பிறக்கும் என்பதற்கு நிகில் முருகன் அனுபவங்கள் சிறந்த பாடம்.

பாஸ்டின் நகர், பி.எம்.வள்ளி



✉ வேதம், சமுத்திரம் படங்களுக்கான விமர்சனத்தில் பெயரை யும், ஸ்டில்களையும் மாற்றிப் போட்டு மண்டை காய வைத்து விட்டீர்களே!

அரசரடி, வி.சிவா

✉ 'சர்க்கரை' சிறுகதையில் வரும் கோலப்பன் போல எல்லோருக்கும் மனசு தயாரானால் எப்பேர்ப்பட்ட வியாதி களையும் எதிர்நோக்கலாம் தைரியமாக.

சிறுகதைகள் 'கல்கி'யில் கடந்த சில வாரங்களாக சூடு பிடிக்கின்றன. தொடரட்டும்.

சென்னை, எஸ்.நாகலட்சுமி

✉ ரிமோட்டில் ஜெயலலிதா பற்றி வினோத் எழுதியிருந்த கமெண்ட் ரசித்துப் படிக்க வைத்தது.

திருச்சி, ராஜிராதா

✉ மும்பை மசாலா 'அந்தாதி'போல் அமைத்து எழுதுவது அழகாகத்தானிருக்கிறது. இது கல்கியில் மட்டுமே காணும் புது முயற்சி.

ஆடுதுறை. கோ. ராமதாஸன்



✉ ம.வே.சிவகுமாரின் 'கடைசி சிகரெட்' கதையின் முத்தாய்ப்பு வரிகள் கண்டனத்திற்குரியது. 'சிகரெட்டும், பிண்டமும்' ஒன்றல்ல. அபத்தமான உதாரணம் கொடுத்து பெரியவர்கள் செய்த சாஸ்த்திர விதிகளைக் கேவலப்படுத்த வேண்டாம்.


பெங்களூர், ப.கு.வைத்தியநாதன்

✉ மனசு தயாரானால் எல்லாம் தயார்தான் என்பதை மையக்கருவாகக் கொண்டு வையவன் எழுதியிருந்த சர்க்கரை வைர விழா கல்கி இதழுக்கு மேலும் ஒரு பாஸிட்டிவ்ஆன சிறுகதை.

நெய்வேலி, க.இந்துமதி

போதையாறு?

மகாத்மா காந்தி பிறந்த மாநிலமான குஜராத்தில் மதுவிலக்கை நீக்க எவ்வளவோ முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. மிலிட்டரியில் வேலை செய்பவர்களும், டாக்டர்களின் அனுமதி பெற்று மதுபானம் அருந்துபவர்களும் இங்கு நிறையவே உள்ளனர்.



காந்தி உப்பு சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்த சாபர்மதி ஆற்றுப் படுகையில், வெளி மாநிலங்களிலிருந்து கள்ளத்தனமாக இங்கு கொண்டு வரப்பட்டு, கைப்பற்றப்பட்ட சுமார் 65,000 மதுபான பாட்டில்களை புல்டோசர்கள் கொண்டு 1997ம் ஆண்டு அரசாங்கம் உடைத்து நொறுக்கியது.

கடந்த மாதம் அகமதாபாத்தில் நடந்த மற்றொரு நிகழ்ச்சி இதையும் மிஞ்சிவிட்டது. சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட சுமார் 1 லட்சம் மதுபான பாட்டில்கள், அகமதாபாத் ஏர்போர்ட்டிலிருந்து நர்மதா கால்வாய் வரை சுமார் 150 மீட்டர் தூரம் ஒரு மைதானத்தில் பரப்பி, புல்டோசர்களால் நொறுக்கப்பட்டன. அந்த இடத்தில் சுமார் 2, 3 கிலோ மீட்டர் தூரம் வரை மதுபான நெடியுடன் கூடிய ஆறு பெருக்கெடுத்தோடியது கண் கொள்ளாக் காட்சி(?) இந்த சரக்குகளின் விலை சுமார் ரூ.4 கோடி தேறும் எனக் கூறப்படுகிறது.

— அகமதாபாத் பாண்டு



சுற்றுலா பெருக காரணம்!

நம்மைவிட மேல்நாட்டினர் சுற்றுப் பயணத்தில் அதிக மோகம் கொண்டு பயணிப்பதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு அளிக்கப்படும்

சிங்கப்பூர் விஸிட்!

சிங்கப்பூருக்கு வரும் உல்லாசப் பயணிகள், குறிப்பாக இந்திய பயணிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகி வருகிறதாம்.

உதாரணமாக 2000ம் ஆண்டில் 3,46,355 இந்தியர்கள் சிங்கப்பூர் வந்து சென்றுள்ளனர். இது கடந்த ஆண்டைவிட 20.1 சதவிகிதம் அதிகமாம். அதுமட்டுமல்ல. இந்திய ஆண்களைவிட பெண்களின் வருகை எண்ணிக்கை 24 சதவிகிதம் கூடியுள்ளதாம்.



விசேஷ விடுமுறைதான். சுற்றுலா மற்றும் ஓய்வை மனத்தில் கொண்டு மேலை நாடுகளில் சில அளிக்கும் விடுமுறைகள் இவை.

பிரான்ஸ் - 1 மாத விடுமுறை , ஜெர்மனி - 18 நாட்கள், ஹாங்காங் - 7 நாட்கள், இந்தோனேஷியா - 12 நாட்கள், இத்தாலி - 4 வாரம் முதல் 6 வாரம் வரை, மலேசியா - 8 முதல் 16 நாள் வரை, மெக்சிகோ - 6 நாட்கள், சவுதி அரேபியா - 6 நாட்கள், சிங்கப்பூர் - 7 நாட்கள், பிரிட்டன் - 5 வாரம், அமெரிக்கா - 5 முதல் 15 நாள் வரை

— ராஜி ராதா,
திருச்சி



அற்புதமான பொடி!

ஒரு சமயம் முல்லா தம் வீட்டைச் சுற்றி ஏதோ ஒரு வித பொடியைத் தூவிக் கொண்டிருந்ததைக் கண்ட எதிர்வீட்டுக்காரர், ''முல்லா, என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு, ''அற்புதமான சக்தி கொண்ட இந்தப் பொடியைத் தூவி வைத்தால் புலிகள் அருகே வராது.'' என்று முல்லா சொன்னார்.

முல்லா கூறியதைக் கேட்ட எதிர்வீட்டுக்காரர், ''முல்லா, இங்கிருந்து பத்து மைல் தூரம் வரையில் புலிகள் கிடையாதே'' என்று வியப்புடன் கூறினார்.

அதற்கு முல்லா, ''பார்த்தீர்களா! இந்த அற்புதமான சக்தி கொண்ட பொடிதான் புலிகளைப் பத்து மைல் தொலைவு விரட்டிவிட்டது!'' என்று பெருமையுடன் சொன்னார்.

- கே. ராஜேந்திரன்,
மருதாடு



வைட்டமின் 'சி' சட்டை!

இனி தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அந்த வைட்டமின் சாப்பிடணும், இந்த வைட்டமின் சாப்பிடணும் அப்போதுதான் ஆரோக்யமாக இருக்க முடியும்'' என்று சொல்லி மருந்து புகட்ட வேண்டிய அவசியமில்லை.

சும்மா, அவர்களுக்கு ஒரு சட்டையை மாட்டி விட்டால் போதும். அதுவே அவர்களுக்குத் தேவையான வைட்டமின் 'சி'யைத் தந்துவிடும். அந்த சட்டை உடல் தோலில் பட்டவுடன் இரசாயன மாற்றம் ஏற்பட்டு தேவையான வைட்டமின் 'சி'யை எடுத்துக் கொண்டுவிடும். அத்தகைய நூலிழைகளால் தயாரிக்கப்பட்டுள்ளதாம் இந்தச் சட்டை. ஜப்பானின் ஃப்யூஜி ஸ்பின்னிங் கம்பெனி இதைத் தயாரித்துள்ளது. இந்தச் சட்டையை 30 தடவை வரை சலவை செய்தும் பயன்படுத்தலாம். அதேபோல் மற்ற வைட்டமின்கள் கொடுக்கக் கூடிய உள் ஆடைகள் தயாரிப்பிலும் ஈடு படப் போகிறதாம் இந் நிறுவனம்.

— ஜானகி ரங்கநாதன்

ஆதாரம் : வீக்

இருவர்

ஜெயகாந்தனின் 'ஊருக்கு நூறு பேர்' கதையை லெனின் இயக்கத்தில் படமாக்கியிருக்கிறார்கள். பெங்களூர் திரைப்பட விழாவில் முதலில் திரையிடப் போகிறார்கள் என்பதெல்லாம் தெரிந்த செய்தி.

இந்தப் படத்துக்குப் பின்னணியும், படத்தில் வரும் ஒரே ஓர் ஆவேசமான பாட்டுக்கு இசையும் அமைத்திருக்கும் இளைஞர்கள் அரவிந்த் - ஜெய்சங்கர். அரவிந்த் பிலானி தொழில்நுட்பக் கல்லூரியில் எம்.எம்.ஏ. பட்டம் பெற்றவர். ஜெய்சங்கர் பி.எஸ்.ஸி. புள்ளியியல் பட்டதாரி.



இருவரும் சந்தித்தது ஒரு பொது நண்பர் மூலமாகத்தான். விளம்பரப் படங்களுக்கு ஜிங்கிள்ஸ் அமைத்துக் கொடுப்பது என்று இருவரும் தீர்மானித்தார்கள். படித்த படிப்பு? அதை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்தார்கள்.

சேதன் ஷா தயாரித்த 'நாயுடு ஹால்' விளம்பரப் படத்துக்கு இசை அமைத்ததுதான் பிள்ளையார் சுழி.

"ஆனால் கிறிஸ்தவ மத தமிழ்ப் பாடல்களுக்கு இசை அமைத்துக் கொடுத்தது விளம்பரம் அல்லாத முதல் முயற்சி" என்கிறார் ஜெய்சங்கர்.

மாக்னா சவுண்ட் நிறுவனத்துக்காக நான்கு பாப் ஆல்பங்கள் செய்து கொடுத்த அனுபவமும் உண்டு. "தமிழில் பாப் ஆல்பங்கள் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. இந்த வகை இசையை ஏற்க, இங்கே சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை என்றே தோன்றுகிறது!" என்கிறார்கள்.

பிரபல விளம்பர நிறுவனங்களின் விளம்பரப் படங்களுக்கும் இசையமைத்துக் கொடுத்து வரும் அரவிந்த் - ஜெய்சங்கர், விக்ரம் கே. குமார் இயக்கிய 'சைலண்ட் ஸ்க்ரீம்ஸ்' என்ற பதின்மூன்று நிமிட டாகு மெண்டரிக்கும் இசை அமைத்திருக்கிறார்கள். 'தற்கொலை' பற்றிய இப்படத்துக்குத் தேசிய விருது கிடைத்திருக்கிறது.

கௌதமன் இயக்கத்தில் தயாரான 'சினிமாவுக்குப் போன சித்தாளு' டெலிஃபிலிமுக்கும் இவர்களுடைய இசைதான்.

" 'ஊருக்கு நூறு பேர்' படத்துக்கு, கீபோர்டு மாதிரி சிந்தசைஸ்டு மியூசிக் அமைக்காமல், செல்லோ, ஃப்ளூட், கிடார் போன்ற இசைக் கருவிகளையே உபயோகித்திருக்கிறோம். மாணிக்க விநாயகமும், பாலக்காடு ஸ்ரீராமும் பாடியிருக்கிறார்கள்" என்கிறார் அரவிந்த்.

சமீபத்தில் இசையமைத்த விளம்பரப்படம் சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸுக்கு. இதிலும் வீணை, கடம் போன்ற கருவிகளையே உபயோகித்திருக்கிறார்கள்.

"இசையின் புதிய பரிமாணங்களைத் திறந்த மனத்துடன் ரசிக்கிற பக்குவம் மக்களுக்கு வந்தால், எங்கள் திறமை இன்னும் வெளிப்படும்" என்கின்றனர் இந்த இரட்டையர்.

டெயில் பீஸ்: இவர்கள் இசை கற்றவர்கள் அல்ல!

— சாருகேசி

படம் : வெங்கடேஷ்

கல்லூரி முடிந்து விடு திரும்பும் வழியில், மிஞ்சிய முப்பது ரூபாய் பாக்கெட் மணிக்கு ஒரு மணி நேர ப்ரௌசிங். ஃபார்முலா ஒன் கார் ரேஸ் சைட்டில் பத்து நிமிஷம். 'ஸ்டார்பிஸ்' நிகழ்ச்சித் தொகுப்பாளினி விசாரேயின் போட்டோ ஃபோலியோ சைட்டில் இருபது நிமிஷம். பாப் இளவரசி பிரிட்னி ஸ்பியர்ஸின் பக்கப் பக்கங்களில் முப்பது நிமிஷம். எஞ்சிய பத்து நிமிஷத்தை உப்புச் சப்பில்லாத அனாமதேய சாட்டில் செலவழித்துத் திரும்புகிற - காஸ்மோபாலிட்டன் இளைஞனை நிறுத்தி - இப்படிக் கேளுங்கள். "இன்றைய தேதியின் சைபர் ஏஞ்சல் யார்?" கண்ணை மூடிக் கொண்டு ஏஞ்சலீனா ஜூலி என்பான்.

ஏஞ்சலீனா?

ஹாலிவுட்டின் நம்பர் ஒன் நடிகை. பதின்மூன்று கோடி சம்பளம் வாங்குபவர் என்றெல்லாம் புகழ் மாலை சூட்டப்பட்ட ஜூலியா ராபர்ட்சை ஒரே வீச்சில் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னேறியிருக்கும் ஹாட்டஸ்ட் ஹாலிவுட் நடிகை.

விருது பெற்ற ஹாலிவுட் நடிகர் ஜோன்வ்யட், பிரெஞ்சு நடிகை மார்செலின் தம்பதியரின் மகள் இந்த இருபத்து எட்டு வயது ஏஞ்சலீனா. எந்த முகூர்த்தில் இப்படியொரு பெயரை வைத்தார்களோ, ஹாலிவுட் ரசிகர்கள் The ultimate babe என்றும் cyber angel என்றும் இணையதளத்தில் வாழ்த்துப்பா பாடுகிறார்கள்! பலர் இவரது பெயரைப் பச்சைக் குத்திக் கொண்டு திரிகிறார்கள்!



அமெரிக்காவின் கோடை கால ஹாலிவுட் போட்டியில் அணி வகுத்திருக்கும் படங்களில், நூறு மில்லியன் டாலர் வசூலை நோக்கி வேகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் 'டோம் ரைடர்' திரைப் படத்தில் ஹீரோ இடையாது. ஹீரோயின் ஏஞ்சலீனா ஜூலி. திடீர்ப் புகழை ஜூலிக்குத் தேடித் தந்திருக்கும் இந்தப் படத்தில் அப்படி

இணைய

யென்ன ஸ்பெஷல்?

ஐரோப்பா முழுவதும், வீடியோகேம் பிரியர்களிடையே மிகவும் பிரபலமாக இருக்கும் ஒரு விளையாட்டு லாராகிராப்டின் டோம்ரைடர். அபார அழகு, புத்திசாலித் தனம், அதிரடி சாகசங்களில் அஞ்சாமல் இறங்கும் ஆண்மை இப்படி எல்லாம் கலவையாய் உருவாக்கப்பட்ட வீடியோகேம் கேரக்டர்தான் லாராகிராப்ட்.

எகிப்திய பிரமிடு ரகசியங்கள், மாயா நாகரிக மர்மங்கள் என்று வரலாற்றுப் பக்கங்களில் விடை தெரியாத ஸ்தலங் களுக்குப் பயணம் செய்து, புதிர்களை உடைத்து, தீய சக்தி களை அழித்து, மனித இனத்தைக் காக்கும் இந்த சூப்பர் வுமன் பெண் பாத்திரத்திற்கு உலகம் தழுவிய ரசிகர் மன் றங்கள் பரவிவிட்டன. இதைக் கண்டு பொறுக்க மாட்டாத ஹாலிவுட்காரர்கள், ஏஞ்சலினாவைக் கூப்பிட்டு லாரா கிராப்டாக வேஷம் கட்டி விட்டார்கள்.

சும்மா சொல்லக்கூடாது. இதற்கு முன் ஆக்ஷன் பற்றிய அரிச்சுவடியே தெரியாத ஜூலி, எனக்கு யாரும் டூப் போட வேண்டாம் என்று சொல்லிவிட்டு, எட்டு மாதம் கடுமையான பயிற்சி செய்து வியப்பூட்டும் சாகசங்களைப் படத்திற்காகச் செய்திருக்கிறார். ஆக்ஷனை நம்பிப் பிழைத்துக் கொண்டிருந்த ஹாலிவுட் ஹீரோக்கள் ஜூலி யின் நிஜ ஆக்ஷனைப் பார்த்து நடுங்கிப் போய் இருக் கிறார்.

டோம்ரைடர் படம், இந்திய மெட்ரோ நகரங்களைக் கலக்குவது போதாதென்று ஏழு இந்திய மொழிகளில் டப் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். தமிழில் 'சவால்' என்று உசிலம்பட்டிகளில் ஓடிக்கொண்டிருப்பது இருக்கட்டும். ஹாலிவுட்டில் முதல் இடத்தைப் பிடிப்பதற்கு முன்புவரை ஏஞ்சலினாவின் வாழ்க்கை எப்படியிருந்தது என்பதை தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஏஞ்சலினா ஏழு வயதாக இருக்கும்போதே பெற்றோர் களுக்கிடையே பிளவு. தாய், ஒரே தம்பியுடன் நியூயார்க்கில் குடியேறிய ஏஞ்சலினா படித் தது லாஸ்ஏஞ்சல்ஸ் பிலிம் ஸ்கூல். அம்மா வின் சம்பாத்யம் போதாமல், பதிமூன்று வயதில் மாடலிங். பதினான்கு வயதில் முதல் பாய்பிரண்ட். பதினைந்து வயதில் கோக்கெய்னில் தொடங்கி கஞ்சா வரை பயன்படுத்திய 'அஞ்சா நெஞ்சி'. பதி னெட்டு வயதில் 'சைபர்க் பார்ட் டூ'வில் கதாநாயகியாக அறிமுகம். இந்தப் படத்தில் நடித்த போது பிரிட்டிஷ் நடிகர் ஜோனியுடன் காதல். உடன் திருமணம்.



தேவதை!

1999ல் மணவிலக்கு. அதன் பிறகு ஓராண்டு காலம் ஏஞ்சலினா எங்கே என்று ஹாலிவுட்காரர்கள் தேடிக் கொண்டிருக்க, ரகசியமாய்த் திபெத்தில் வாழ்ந்து திரும்பு கிறார்.

வந்த வேகத்தில் 'பிளேயிங் பை ஹார்ட்', 'புஷ்சிங் டின்' 'தி போன் கலெக்டர்' என்று ஒவ்வொரு படத்திலும் தனது நடிப்பாற்றலை நிரூபித்த ஏஞ்சலினாவுக்கு 'கேர்ள் இண்டரப்டட்' படத்திற் காக ஆஸ்கர் விருது கிடைக்க, ஏஞ்சலினாவின் குறைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் கிரீடம் சூட்டி விட்டார் கள்.

இப்போது பில்லி பாப் என்ற புதிய காதலரைத் தேடிக் கண்டுபிடித்து, அவ ரைக் கையோடு மணந்து கொண்ட ஏஞ்சலீனா, ஹாலிவுட் நடிகர்களின் கனவு வசிப்பிடமான பிவேர்லி ஹில்சில் 3.8 மில்லியன் டாலருக்கு ஒரு வீட்டை வாங் கிக்கொண்டு அமைதியாக குடியேறி விட்டார். ஆனால் 'டோம்ரைடர்' ரிலீசிற்குப் பிறகு இவரின் படம் போட்ட இரண்டு மில்லியன் டீஷர்ட்டுகளை ஈகாமில் விற்றுத் தீர்த்திருக்கிறார் கள். காலையில் எழுந் ததும் இவரின் முகத் தைத் தரிசிக்க காப்பி அருந்தும் கோப்பை களில் தொடங்கி, எது எதிலோ ஏஞ்சலீனா உருவத்தைப் பொறித்து விற்றுத் தீர்க்கிறார்கள்.

இவருக்குப் போட் டியாக வேறொரு ஏஞ்சல் வரு கிற வரை இந்த களேபரம் அத் தனையும் கண் மூடித்தன மாகத் தொட ரும்.

- ஜெ

நீங்கள் கேட்டவை – தராசு

• இரா. வளையாபதி,
தோட்டக்குறிச்சி.

? அமெரிக்காவில் அரங்கேறியிருக்கும் கொடூரத் தாக்குதலிலிருந்து இந்தியா உடனடியாகக் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்ன...?

! 'உடனடியாக' என்ற சொல் உங்கள் கேள்வியில் முக்கியமானது. அதற்கு மட்டுமே பதில்: Crisis management

• ஆர். லதா ரமேஷ்,
போடிநாயக்கனூர்.

? த.மா.காவின் கோவிந்த வாசன் யாரை நம்ப வேண்டும்? யாரை நம்பக் கூடாது?

! நேர்மையை நம்ப வேண்டும். அப்படியானால் யாரை நம்பக் கூடாது என்பதை நீங்களும் நானும் முடிவு செய்து கொள்ள முடியும். அவர்...?

• எம். தேசிகாச்சாரி,
சென்னை – 52 ❑

? 'முதல்வர் பதவியை யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன்' என்று அறைகூவல் விடும் ஜெ. – தமிழக முதல்வர் பதவி என்ன அப்பன் – ஆத்தான் சம்பாதித்த சொத்தா...?

! அரசியலில் எந்தப் பதவியுமே சம்பாத்தியம் அல்ல; சமுதாயப் பொறுப்பு. எந்த அரசியல்வாதிக்கு இது தெரிந்திருக்கிறது!

• கல்லன் கிருஷ்ணராஜ்,
குன்னூர்.

? அமெரிக்கா மீது பயங்கரவாதிகள் தாக்குதல் காரணமாக, உலக நாடுகள் கிறிஸ்துவ – முஸ்லிம் பிரிவுகளாய் அணி வகுத்துப் போரிடுமா...?

! அந்த மூர்க்கம் நடைபெறாமல் அரபு நாடுகளின் எண்ணெய் வளம் காக்கும் – எண்ணெய் வளமே பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வருவதால். அதனால்தான் 'இது பயங்கரவாதத்துக்கு எதிரான போர்; முஸ்லிம்களுக்கு எதிரானது அல்ல' என்று அமெரிக்கத் தலைவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள்.



• வழிவிடுங்க!

• பஞ்ச வண்ணமகன்,
கருப்பம்புலம்.

? 'உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பிக்க இவ்வளவு' என்று ரேட் குறித்து அறிவித்தாயிற்று. டிக்கெட் கிடைக்காதவர்களுக்குப் பணம் திருப்பித் தரப்படும் என பா.ஜ.க அறிவித்திருக்கிறதே! பிழைக்கத் தெரியாத கட்சிதானே?

! ஏன் சொல்ல மாட்டீங்க; நியாயமாக நடந்து கொள்பவர்களுக்கு இன்று 'பிழைக்கத் தெரியாதவன்' முத்திரைதானே குத்தப்படுகிறது!

• ஜி. ராமதாஸ், கணபதி
அக்ரஹாரம்.

? கல்கி வாசகர்கள் அனைவரும் வைரமுத்துவின் கவிதைகளை மனப்பாடம் செய்திருப்பார்கள் எனக் கருதுகிறீர்களா...?

! இல்லை, தேடிப் பிடித்துக் கவிதைகளைத் தெரிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். வெறும் லாட்டரி போட்டிகளில் கல்கிக்குச் சம்மதமில்லை.

• க.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? காவிரியில் தண்ணீர் வராமல் இருக்க கருணாநிதி, மாறன் சதி செய்கிறார்கள் என்று நிதியமைச்சர் பொன்னையன் பேசியிருப்பது சிறுபிள்ளைத்தனமாக இல்லை...?

! அம்மாவைத் திருப்திபடுத்த பேகம் 'மழலை'யைச் சிறுபிள்ளைத்தனம் என்கிறீரே!

• யாரை நம்பி....





• குடியாட்சி கவிஞர்

• அஜார்,
சென்னை – 18.

? அன்பு, அறிவு – வாழ்க்கையில் உயர எது தேவை?

❑ ரூ. 100/- பரிசு
பெறுபவர்:
எம். தேசிகாச்சாரி,
10, குமரன் தெரு,
பாடி, சென்னை 600 052

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
எஸ். பவதாரிணி ஸ்ரீநிவாஸன்
12ஏ, வடக்கு வீதி,
திருத்துறைப்பூண்டி.
614 713

! சிவனும் சக்தியும் போல் அன்பும் அறிவும். ஒன்று இல்லாமல் மற்றது இருந்து என்ன பயன்!

• கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

? 'இமயமலையையே அசைத்துப் பார்க்கும் வலிமை கொண்டவர் ஜெயலலிதா' என கூட்டுறவு அமைச்சர் தனபால் கூறுகிறாரே....?

! நூற்றுக்கு நூறு உண்மை. இது போன்ற வேண்டாத



• மழலை மொழி!



• சொத்தா சுகமா...

ஆபத்தானது என்பதுடன் அடிப்படை மனித உரிமைகளில் தலையிடும் அபத்தமும்கூட.

• வி. கௌரி பரமு, மதுரை.

? அ.தி.மு.க அரசு சத்துணவில் திடீரென முட்டையை நிறுத்த என்ன காரணம்?

! ஹாஃப் பாயில்ட் அரசியல்தான்!

• எஸ். பவதாரிணி சீனிவாசன், திருத்துறைப்பூண்டி *

? பிஜித் தீவில், எதிர்க்கட்சியினர் எட்டு உறுப்பினர்களுக்கு மேல் வெற்றி பெற்றிருந்தால், அவர்

மறுத்துவிட்டது பற்றி...?

! அசட்டு, வறட்டுக் கௌரவம். சோனியாவைச் சந்தித்துப் பேசி கிருஷ்ணாவிடம் கொஞ்சமேனும் காவிரி நீர் பெற்றிருக்க முடியுமானால், கட்சி எல்லைகள் கடந்த பாராட்டு கிட்டியிருக்கும்.

• பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? தி.மு.க ஆட்சியில் வைரமுத்துவுக்கு நிலம் வழங்கியதில் தவறு இல்லை. வைரமுத்துவின் ஆற்றலுக்கு ஓர் ஊரையே தரலாம் என்கிறாரே முன்னாள் முதல்வர்?

! ஏற்கெனவே வசதியாக

முதல்வர் பதவி அப்பன் - ஆத்தாள் சொத்தா?

வெட்டி வேலைகளைச் செய்வதில் அம்மாவுக்கு நிகர் அவரே!

• ரொசாரியோ ரவிச்சந்திரன், சென்னை - 79.

? முஸ்லிம் பெண்கள் புர்கா அணிய வேண்டும் என்ற உத்தரவானது, தீவிரவாதிகளும் புர்கா அணிந்து பல இடங்களில் நடமாட உதவியாக அமையாதா?

! ஆமாம். இந்த உத்தரவு

களையும் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சட்டமாமே. இந்தியாவிலும் நடைமுறைப்படுத்தினால் என்ன...?

! அட கடவுளே! இரண்டு தரப்பும் சேர்ந்துக்கிட்டுச் சுரண்டித் தீர்க்கவா!

• எஸ். அப்துல் அஹ்மது, நாகூர்.

? சரோஜாவா? விசாலாட்சியா?

! ப்ளீஸ் வளர்மதியை டிஸ்கரேஜ் பண்ணாதீங்க!

• ஏ. கருப்பணன், அரசரடி.

? காவிரிப் பிரச்னை தொடர்பாக டெல்லி சென்ற தமிழக தி.மு.க, ம.தி.மு.க பிரதிநிதிகள் சோனியாவைச் சந்திக்க

உள்ள ஒருவருக்கு அரசுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட இடம் என்பதால்தான் குற்றம் - குறை சொல்ல வாய்ப்பு எழுகிறது. அவ்வாறு வாய்ப்பு அளிக்காமல் இருப்பதே நல்லது. புலவருக்கு வாரி வழங்க இது முடியாட்சி அல்லவே... குடியாட்சி ஆயிற்றே!

• சி. ஸ்ரீதர், தென்னலப்பாகம்

? தீவிரவாதிகளால் நியூயார்க் உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டதால் சர்வதேச அளவில் பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகுமா...?

! ஆக வேண்டும் என்பதுதானே தாக்குதலின் நோக்கமே! ஆனால், ஆக விடாமல் தவிர்க்கும் அமெரிக்கர்களின் புனரமைப்பு வெறி!

சிவகாமியின் சபதம்

பதினெட்டாம் அத்தியாயம்

முத்து மாலை

பழந்தமிழ் நாட்டு மன்னர்களுக்குள்ளே ஒப்புயர்வு அற்றவரும், தமது இணையில்லாத புகழை என்றும் அழியாவண்ணம் கல்லிலே செதுக்கி வைத்தவருமான மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியை அன்றொரு நாள் இரவில், யுத்தச் செய்தி வந்த அவசரத்தில் மதயானையின் வெறியினால் நிகழ்ந்த தடபுடலுக்கு மத்தியில் நேயர்களுக்கு அறிமுகப்படுத்தினோம்.

எத்தகைய சாமான்யக் குறுநில மன்னர்களையும் கூட அந்தந்த இராஜாங்கக் கவிகள் புத்தியிலே பிருகஸ்பதி என்றும், வித்தையிலே சரஸ்வதி என்றும், அழகிலே மன்மதன் என்றும் வீரத்திலே அர்ஜுனன் என்றும், கொடையிலே கர்ணன் என்றும் வர்ணிப்பதுண்டு. இந்த வர்ணனையெல்லாம் மகேந்திர சக்கரவர்த்தியின் விஷயத்தில் உண்மையிலேயே பொருந்துவதாயிருந்தது.

மகேந்திர வர்மர் ஆஜானுபாஹுவான தோற்றமுடையவர். அவருடைய கம்பீரமான முகத்தில் பல நூறு வருஷங்களாக வாழையடி வாழையாக வந்த இராஜகுலத்தின் வீரக் களையோடு சிறந்த கல்வி ஆராய்ச்சியினாலும் கலைப் பயிற்சியினாலும் ஏற்படும் வித்யா தேஜஸும் பிரகாசித்தது. காஞ்சி நகரின் பிரசித்தி பெற்ற பொற்கொல்லர்கள் சித்திர விசித்திர வேலைப்பாடுகளுடன் செய்த கிரீடம், குண்டலம், வாகுவலயம், வீரக்கழல் முதலிய ஆபரணங்களை அவர் தரித்திருந்தார். அவருடைய விசாலமான வீர லக்ஷ்மி குடி கொண்ட மார்பை, விதவிதமான வர்ணங்களுடன் பிரகாசித்த நவரத்தின மாலைகள் அலங்கரித்தன. அபூர்வ

அமரர் கல்கி

அழகும் நயமும் மென்மையும் வாய்ந்த பட்டுப் பீதாம்பரங்களை உற்பத்தி செய்வதில் அந்த நாளிலேயே காஞ்சி நகரம் பெயர் பெற்றிருந்தது. அத்தகைய பீதாம்பரங்களை மகேந்திர சக்கரவர்த்தி அழகு பொருந்த அணிந்த போது, அவை அதிக சோபை பெற்று விளங்கியதாக நெசவுக் கலைஞர்கள் பெருமிதத்துடன் கூறினார்கள்.

மகேந்திரர் தமிழ்மொழி, வடமொழி, பிராகிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்ற பண்டிதராக விளங்கினார். வடக்கே தக்ஷசிலம் முதல், தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள பண்டிதர்கள், மகா ரஸிகரான மகேந்திர சக்கரவர்த்தியிடம் தங்களுடைய புலமையைக் காட்டிப் பரிசு பெறும் பொருட்டுக் காஞ்சி நகரில் வந்து மொய்த்த வண்ணம் இருந்தார்கள்.

அன்றைக்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னால் வட நாட்டில் உஜ்ஜயினி நகரத்தில் அரசு செலுத்தி, காளிதாஸன் முதலிய மகா கவிகளை ஆதரித்த சந்திரகுப்த விக்கிரமாதித்யருக்குப் பிறகு, பண்டிதர்களுக்கும் கவிஞர்களுக்கும் கற்பக விருக்ஷமாக விளங்கியவர் காஞ்சி மகேந்திர சக்கரவர்த்திதான் என்பது வெகுஜன வாக்காயிருந்தது.

சித்திரம், சிற்பம் ஆகிய கலைகளில் சக்கரவர்த்தி ஆர்வங் கொண்டிருந்த தோடல்லாமல், அவற்றை நன்றாகப் பயின்று, அந்தந்தக் கலையில் வல்லவர்களாயிருந்த கலைவாணர் எல்லாரும் பார்த்து வியக்கும்படியான தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

சிற்பத் துறையில் மகேந்திரனின் அதிசயமான கற்பனைத் திறனைக் கண்டு வியந்து, சிற்பசாஸ்திர பண்டிதர்கள் அவருக்கு **'விசித்திர சித்தர்'** என்ற பட்டத்தை வழங்கியிருந்தார்கள். அவ்விதமே சித்திரக் கலை வல்லவர்களிடம் **'சித்திரக்காரப்புலி'** என்னும் பட்டத்தைச் சக்கரவர்த்தி பெற்றிருந்தார். **'மத்தவிலாஸப் பிரகசனம்'** என்னும் ஹாஸ்ய நாடகத்தை வடமொழியில் இயற்றி **'மத்தவிலாசர்'** என்னும் பட்டத்தை அடைந்தார்.

சங்கீத சாஸ்திரத்தைக் கரை கண்டிருந்த ருத்ராசாரியாரிடம் அவர் சங்கீதக் கலை பயின்று ஏழு நரம்புகள் உடைய 'பரிவாதினி' என்னும் வீணையை அபூர்வமாய்க் கையாளும் திறமை பெற்றிருந்தார். தாள வகைகளிலே 'ஸங்கீர்ண ஜாதி' தாளத்தை அதிசயமாகக் கையாளும் வல்லமை காரணமாக 'ஸங்கீர்ண ஜாதிப் பிரகரண‌ர்' என்ற பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது.

மகேந்திரர் இளம் பிராயத்தில் சமண மதத்தில் ஈடுபட்டிருந்து பிற்காலத்தில் சிவ பக்திச் செல்வரான பிறகு, எந்த மதத்தையும் துவேஷிக்காதவராய், தமது சாம்ராஜ்யத்தில் இருந்த சைவர், வைஷ்ணவர், பௌத்தர், சமணர், சாக்தர் ஆகிய சகல மதத்தினரையும் தர்மம் தவறாமல் பரிபாலித்து வந்தபடியால், **'குணபரர்'** என்ற சிறப்புப் பெயரும் அவருக்கு ஏற்பட்டிருந்தது. 'திருவதிகை' ஸ்தலத்தில் அவருடைய கொடையினால் கட்டப் பெற்ற சிவாலயத்துக்குக் **'குணபரேச்வரம்'** என்ற பெயர் வழங்கிற்று.

மகேந்திர சக்கரவர்த்திக்கு முற்பட்ட சுமார் முந்நூறு வருஷ காலத்தில் வட நாட்டிலிருந்து பண்டிதர்களும், கவிகளும், சமண முனிவர்களும், புத்த பிக்ஷுக்களும் இடைவிடாமல் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்து, காஞ்சி நகரில் வித்யா பீடங்களை ஏற்படுத்தி வந்தார்கள். இக் காரணத்தினால் நமது வரலாறு நிகழ்ந்த காலத்தில், தமிழகத்தில் ஸம்ஸ்கிருதமும் பிராகிருதமும் மிக்க பிரபலமடைந்து, செந்தமிழ் மொழியின் சிறப்பை ஓரளவு மங்கச் செய்திருந்தன என்பதையும் நேயர்கள் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

திருநாவுக்கரசர் முதலிய சைவ

நாயன்மார்களும், பொய்கையார் முதலிய வைஷ்ணவ ஆழ்வார்களும் பக்திச் சுவை சொட்டும் பாடல்களைப் பொழிந்து, தெய்வத் தமிழ் மொழியை மீண்டும் சிம்மாசனம் ஏறச் செய்த மகோன்னதகாலம் தமிழகத்தில் அப்போதுதான் ஆரம்பமாகியிருந்தது. எனவே, மகேந்திர சக்கரவர்த்தியின் பட்டங்கள் பெரும்பாலும் வடமொழியில் இருப்பதன் காரணத்தை நேயர்கள் ஊகித்து அறியலாம்.

மகாராஜாதிராஜா - பூமண்டலாதிபதி- திரிபுவன சக்கரவர்த்தி- மத்தவிலாஸ - விசித்திர சித்த - ஸங்கீர்ண ஜாதிப் பிரகரண சித்திரக் காரப் புலி - குணபரரான மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியை இத்தனை நேரம் ஆயனர் வீட்டு வாசலிலேயே நிறுத்தி வைத்து விட்டதற்காக வாசகர்களின் மன்னிப்பைக் கோருகிறோம். அவ்விதம் நாம் அந்த மன்னர் பெருமானை நிறுத்தி வைத்து விட்ட போதிலும், ஆயனச் சிற்பியார் அவரை வரவேற்று உபசரிப்பதில் சிறிதும் காலந் தாழ்த்தி விடவில்லை. சக்கரவர்த்தியின் வருகையை அறிவித்த பேரிகை ஒலி வெகு தூரத்தில் கேட்டபோதே ஆயனர் பரபரப்புடன் வீட்டு வாசலுக்கு வந்து அவரை வரவேற்க ஆயத்தமாக நின்றார்.

குதிரையிலிருந்து இறங்கும்போதே சக்கரவர்த்திப் பெருமான் "ஆயனரே! அன்றிரவு சுகமாக வந்து சேர்ந்தீர்களா? சிவகாமி, சௌக்கியமா?'' என்று கேட்டுக்கொண்டே இறங்கினார்.

ஆயனர், முன்னால் ஓர் அடி சென்று கும்பிட்டு, "ஆகா! சுகமாக வந்து சேர்ந்தோம்! குழந்தைதான் மூன்று நாளாக அவ்வளவு சௌக்கியம் இல்லாமலிருந்தாள்...'' என்பதற்குள் மகேந்திர பல்லவர், "அப்படியா? இப்போது எப்படி இருக்கிறாள்?" என்று கவலைக் குரலில் கேட்டார்.

"இன்று சற்றுப் பாதகமில்லை" என்றார் ஆயனர்.

எல்லாரும் வீட்டுக்குள் சென்றார்கள். சக்கரவர்த்தி வரும் சமயங்களில் அமர்வதற்காகவே ஆயனர் ஓர் அழகிய கல் சிம்மாசனத்தை அமைத்திருந்தார். அந்தச் சிம்மாசனத்தில் மகேந்திரர் அமர்ந்ததும், ஆயனர் சிவகாமிக்குச் சமிக்ஞை செய்ய அவள் அருகில் நெருங்கி வந்து சக்கரவர்த்திக்கு நமஸ்கரித்தாள்.

அப்போது ஆயனர், "பெருமானே! அரங்கேற்றம் நடுவில் தடைப்பட்ட காரணத்தினால் குழந்தை உற்சாகம் இழந்திருக்கிறாள். அவளுடைய சௌக்கியக் குறைவுக்கு அதுதான் காரணம். ரஸிக சிரோமணியான தாங்கள்தான் அவளுக்கு ஆசி கூறி உற்சாகப்படுத்த வேண்டும்" என்றார்.

"ஆயனரே! உமது குமாரி அன்றைக்கு நடனமாடியதாகவே எனக்குத் தோன்றவில்லை. நடனக் கலையே ஓர் உருவம் எடுத்து வந்து ஆடியதாகவே தோன்றியது" என்றார் மகேந்திரர்.

"ஸங்கீர்ண ஜாதி தாளத்தை உபயோகப்படுத்தி ஓர் ஆட்டம் கற்பித்திருந்தேன்; அதை ஆட முடியாமல் போய்விட்டது'' என்று ஆயனர் ஏமாற்றமான குரலில் கூறினார்.

"ஆம், ஆம்! இன்னும் என்னவெல்லாமோ விந்தைகள் வரப் போகின்றன என்று எனக்குத் தெரிந்துதான் இருந்தது. நடுவில் எழுந்து போக நேர்ந்ததில் எனக்கு ஏற்பட்ட வருத்தத்தைச் சொல்லி முடியாது. அவ்வளவு முக்கியமான செய்தியாயிராவிட்டால் போயிருக்க மாட்டேன்!'' என்றார் சக்கரவர்த்தி.


"நானும் கேள்விப்பட்டேன். பிரபு! நமது ராஜ்யத்துக்குள்ளே அந்நியர்கள் படையெடுத்து வந்திருக்கிறார்களாமே? என்ன தைரியம்! என்ன துணிச்சல் அவர்களுக்கு!" என்று ஆயனர் உண்மையான ஆத்திரத்துடன் கூறினார்.

"அந்தத் துணிச்சலுக்குத் தகுந்த தண்டனையை அவர்கள் அடைவார்கள். ஆயனரே! பல வருஷ காலமாகப் பல்லவ ராஜ்யத்துக்குள் பகைவர்



தில் சளுக்கர் படையெடுத்ததனால் எனக்கு உண்டாகும் கோபத்தைக் காட்டிலும் அதனால் சிவகாமியின் அரங்கேற்றம் தடைப்பட்டதுதான் அதிகக் கோபத்தை உண்டாக்குகிறது. இந்தக் குற்றத்துக்குத் தகுந்த தண்டனையை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும்!'' என்றார்.

இதைக் கேட்ட ஆயனர் பெருமையினால் பூரித்தவராய், அருகில் தலை குனிந்த வண்ணம் நின்ற



படைகள் நுழைந்ததில்லை. நான் போர்க்களத்தைக் கண்ணால் காண வேண்டும் என்பதற்காக என் தந்தை என்னை இலங்கையில் நடந்த போருக்கு அனுப்பி வைத்தார். ஆனால், நரசிம்மனுக்கோ இங்கேயே போர்க்களத்தைப் பார்க்கும்படியான பாக்கியம் நேரிட்டிருக்கிறது. வாதாபி அரசன் புலிகேசி பெரும் படைகளைத் திரட்டிக் கொண்டு படையெடுத்து வருகிறான். நாமும் பெரும் பலம் திரட்டிக் கடும்போர் செய்ய வேண்டியிருக்கும். ஆனால், ஒரு விஷயம் சொல்லுகிறேன்: நமது ராஜ்யத்

சிவகாமியை அருமையுடன் நோக்கினார்.

சக்கரவர்த்தி மேலும் கூறினார்: "அரங்கேற்றத்தன்று நான் என்னவெல்லாமோ திட்டம் போட்டிருந்தேன். அதெல்லாம் ஒன்றும் முடியாமல் போயிற்று. சபையிலே செய்திருக்க வேண்டிய சம்மானத்தை இங்கேயாவது செய்யலாமென்று உத்தேசித்திருக்கிறேன். அதற்கு ஆட்சேபனை ஒன்றுமில்லையே?" - இவ்விதம் சொல்லிக் கொண்டு சக்கரவர்த்தி தம் கையிலிருந்த இரத்தினப் பையிலிருந்து அழகான இரட்டை வட முத்துமாலையை எடுத்தார்.

அப்போது ஆயனர், "பெருமானே! தங்கள் திருக்கரத்தினால் கொடுக்கும் போது எங்கே கொடுத்தால் என்ன? சிவகாமி! உன் பாக்கியமே பாக்கியம்! இந்தப் பரத கண்டத்திற்குள்ளே சகல கலைகளின் நுட்பங்களையும் நன்குணர்ந்தவரான விசித்திர சித்த மகாப்பிரபு உன்னுடைய கலைத் திறமையை மெச்சி உனக்குச் சம்மானம் அளிக்கப் போகிறார்!" என்று கூறிச் சமிக்ஞை செய்யவும், சிவகாமி முன்னால் வந்து சக்கரவர்த்தியைப் பணிவுடன் வணங்கிக் கரங்களை நீட்டினாள்.

மகேந்திரர் முத்து மாலையை எடுத்து சிவகாமியின் நீட்டிய கரங்களில் வைத்தபோது... அடடா! - இதென்ன மீண்டும் அபசகுனம்! மாலை அவள் கையிலிருந்து நழுவிக் கீழே தரையில் விழுந்துவிட்டதே!

ஆயனரின் முகம் சட்டென்று சுருங்கியது. மகேந்திர பல்லவருடைய திடசித்தங்கூடச் சிறிது கலங்கி விட்டதாக அவருடைய புருவங்களின் நெறிப்பிலிருந்து தெரிந்தது.

சிவகாமியின் மனத்திலும் ஏதேனும் துணுக்கம் ஏற்பட்டிருக்குமோ என்னவோ, நமக்குத் தெரியாது. ஆனால் அடுத்த கணத்தில் அவளுடைய முகம் மலர்ந்ததைப் பார்த்தால் அவளுடைய உள்ளமும் மலர்ந்திருக்க வேண்டுமென்று நிச்சயமாகத் தெரிந்தது.

கீழே விழுந்த முத்து மாலையை அந்தக் கணத்திலேயே குமார சக்கரவர்த்தி சட்டென்று குனிந்து எடுத்தார். எடுத்த மாலையைச் சிவகாமியின் நீட்டிய கரங்களில் அவர் வைக்க, சிவகாமி அதை ஆர்வத்துடன் வாங்கிக் கண்களில் ஒத்திக்கொண்டு கழுத்திலும் அணிந்துகொண்டாள். அந்த முத்து மாலைப் பரிசைக் குமார சக்கரவர்த்தியின் கையினால் பெற்றுக் கொள்ள நேர்ந்தது பற்றிச் சிவகாமியின் உள்ளத்தில் பொங்கிய உவகை முகத்திலும் பிரதிபலித்தது இயல்பே யல்லவா!


பத்தொன்பதாம் அத்தியாயம்

புத்தர் சிலை

நழுவித் தரையில் விழுந்து முத்து மாலையைக் குமார சக்கரவர்த்தி குனிந்து எடுத்துக் கொடுத்ததையும், அதைச் சிவகாமி முகமலர்ச்சியுடன் வாங்கி அணிந்து கொண்டதையும் பார்த்த ஆயனரின் முகம் மீண்டும் பிரகாசம் அடைந்தது.

சக்கரவர்த்தி இதையெல்லாம் கவனியாதது போல் கவனித்தவராய், ஆயனரைப் பார்த்து, "மகா சிற்பியாரே! இந்த முத்து மாலையைப் போல் எவ்வளவோ உயர்ந்த பரிசுகளையெல்லாம் உமது புதல்வி வருங்காலத்தில் அடையப் போகிறாள்! இந்தப் பல்லவ ராஜ்யத்துக்கே அவளால் புகழும் மகிமையும் ஏற்படப் போகின்றன. வருங்காலத்தில் எது எப்படியானாலும், சிவகாமியின் நடனக் கலைப் பயிற்சி மட்டும் தடைப்படக் கூடாது. அவளுக்கு எவ்விதத்திலும் உற்சாகக் குறைவு நேரிடாமல் நீர் பார்த்துக் கொள்ள வேண்டும்!" என்று சொன்னார்.

ஆயனர், "பல்லவேந்திரா! தாங்



களும் குமார சக்கரவர்த்தியும் உற்சாகப்படுத்துவதற்கு இருக்கும்போது சிவகாமிக்கு உற்சாகக் குறைவு ஏன் ஏற்படப் போகிறது? எனக்குத்தான் என்ன கவலை?" என்று சொல்ல, மகேந்திர பல்லவர் கூறினார்: "அப்படியில்லை, ஆயனரே! இந்த யுத்தம் காரணமாக நானும் குமார சக்கரவர்த்தியும் சில காலம் இவ்விடம் வர முடியாமலும்,

உங்களைப் பார்க்க முடியாமலும் போகலாம். அதனாலே உங்கள் இருவருடைய கலைப்பணிக்கும் எந்தவிதமான குந்தகமும் ஏற்படக் கூடாது. சிவகாமி புத்த பிக்ஷுணியாக விரும்புவதாகச் சற்று முன்னால் சொன்னீரல்லவா? ஒருவிதத்தில் அது பொருத்தமானதுதான். சிவகாமி சாதாரணமான பெண் அல்ல; மற்றப் பெண்களைப் போல் உரிய பருவத்தில் இல்வாழ்க்கையை மேற்கொண்டு அற்ப சுகங்களில் காலங்கழிக்கப் பிறந்தவள் அல்ல; பெண்ணாய்ப் பிறந்தவர்களில் லட்சத்திலே ஒருவருக்குத்தான் இப்பேர்ப்பட்ட கலை உணர்ச்சி ஏற்படும்; அதைப் போற்றி வளர்க்க வேண்டும். சம்சார வாழ்க்கையைப் பொறுத்தவரையில் சிவகாமி தன்னைப் பிக்ஷுணியாகவே நினைத்துக் கொள்ளலாம்; தெய்வீகமான நடனக் கலைக்கே அவள் தன்னை அர்ப்பணம் செய்து கொள்ள வேண்டும்!''

இந்த மொழிகளைக் கூறியபோது மகேந்திர பல்லவரின் மனத்திலே என்ன இருந்தது என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அவருடைய மொழிகள் அங்கிருந்த மூன்று பேருடைய உள்ளங்களிலும் வெவ்வேறு விதமான உணர்ச்சிகளை உண்டாக்கியிருக்க வேண்டுமென்பது அவர்களுடைய முகபாவ மாறுதல்களிலிருந்து நன்கு தெரிந்தது.

ஆயனர் தமது உள்ளக் கிளர்ச்சியை வார்த்தைகளினாலே வெளியிட்டார்: ''பிரபு, என்னுடைய மனத்தில் உள்ளதை அப்படியே தாங்கள் கூறி விட்டீர்கள்; இல்வாழ்க்கையை மேற்கொண்டு குழந்தை குட்டிகளைப் பெற்று வளர்ப்பதற்கு எத்தனையோ லட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த அபூர்வமான தெய்வக் கலையைப் பயின்று வளர்ப்பதற்கு அதிகம் பேர் இல்லைதானே?'' - இவ்விதம் ஆயனர் சொல்லிக்கொண்டே சிவகாமியைத் திரும்பிப் பார்த்து, ''சக்கரவர்த்தியின் பொன்மொழிகளைக் கேட்டாயா, குழந்தாய்?'' என்றார்.

சிவகாமியின் முகமானது அச் சமயம் கிழ்த்தரச் சிற்பி அமைத்த உணர்ச்சியற்ற கற்சிலையின் முகம் போல் இருந்தது. எத்தனையோ விதவிதமான உள்ளப்பாடுகளையெல்லாம் முகபாவத்திலே கண்ணிமையிலே, இதழ்களின் மடிப்பிலே அற்புதமாக வெளியிடும் ஆற்றல் பெற்றிருந்த சிவகாமி, அச்சமயம் தன் சொந்த மனோநிலையை முகம் வெளியிடாதபடி செய்வதில் அபூர்வத் திறமையைக் காட்டினாள் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், நரசிம்மவர்மர் அபிநயக் கலையில் தேர்ச்சி பெறாதவரான படியால், சக்கரவர்த்தியின் வார்த்தைகளைக் கேட்டதும் அவருடைய முகம் சிவந்தது. இதழ்கள் துடித்தன. மற்றவர்கள் கவனியாத வண்ணம் உடனே அவர் திரும்பி, பக்கத்தில் இருந்த சிலைகளையும் சித்திரங்களையும் பார்ப்பவர்போல் அவ்விடமிருந்து பெயர்ந்து அப்பால் சென்றார்.

சக்கரவர்த்தியும் தாம் இத்தனை நேரம் வீற்றிருந்த சிற்ப சிம்மாசனத்திலிருந்து எழுந்து, ''சிற்பியாரே! எவ்வளவோ முக்கியமான அவசர வேலைகள் எனக்கு இருக்கின்றன. இருந்தாலும் இங்கு வந்து விட்டால் எல்லாம் மறந்து விடுகிறது. உமது புதிய சிலைகளைப் பார்த்து விட்டுச் சீக்கிரம் கிளம்ப வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே நடந்தார். ஆயனரும் சிவகாமியும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

மகேந்திர பல்லவர், புதிதாகச் செய்திருந்த நடனத் தோற்றச் சிலைகளைப் பார்த்துக்கொண்டே, 'இது கஜஹஸ்தம்' 'இது அர்த்த சந்திர ஹஸ்தம்' என்று சொல்லிய வண்ணமாக நடந்து, ஆயனர் கடைசியாகச் செய்து முடித்திருந்த சிலையண்டை போனதும் ''ஆஹா!'' என்று கூறிவிட்டு நின்றார். சற்று நேரம் அதை உற்றுப் பார்த்துவிட்டு, ''ஆயனரே! தொண்டை மண்டலத்திலுள்ள மகா சிற்பிகளுக்குள்ளே உமக்கு நிகரானவர் எவருமில்லை. ஆனால், நீர் கூட



இத்தனை காலமும் இந்தச் சிலையைப் போல் ஜீவ களை பொருந்திய சிலையைச் செய்தது கிடையாது. அன்பிற்குரியவர் நெடுங்காலம் வராதபடியினால் ஏற்பட்ட இருதய தாபத்தை இந்தச் சிலையின் முக பாவமும் மற்ற அங்கங்களின் நெளிந்த தோற்றமும் எவ்வளவு நன்றாய் வெளியிடுகின்றன! கண்களும், கண்ணிமைகளும், புருவங்களும்கூட அல்லவா நம்மோடு வார்த்தையாடுகின்றன? ஆயனரே! சிவகாமியின் அரங்கேற்றத்துக்குப் பிற்பாடு இந்தச் சிலையைப் பூர்த்தி செய்திருக்கிறீர், இல்லையா?'' என்று கேட்டார்.

"ஆம், பெருமானே! இன்று காலையில் தான் பூர்த்தி செய்தேன். சிவகாமி பெரிய மனது செய்து இன்றைக்கு எனக்காக மறுபடியும் ஆடி அபிநயம் பிடித்தாள்!"

மகேந்திரர் மந்தஹாஸத்துடன் சிவகாமியைப் பார்த்துவிட்டு, "சிற்பியாரே! பரத சாஸ்திரத்தைத் தொகுத்து எழுதிய முனிவர் 'ஏழு வகைப் புருவ அபிநயம்' என்றுதானே சொல்லியிருக்கிறார்? அவர் நமது சிவகாமியின் நடனத்தைப் பார்த்திருந்தால், புருவ அபிநயம் ஏழு வகை அல்ல; எழுநூறு வகை என்று உணர்ந்து அவ்விதமே சாஸ்திரத்திலும் எழுதியிருப்பார்!'' என்றார்.

இவ்விதம் உல்லாசமாகப் பேசிக்கொண்டு சென்ற சக்கரவர்த்தியின் பார்வை சிறிது தூரத்தில் இருந்த ஒரு பிரம்மாண்டமான புத்தர் சிலையின் மீது விழுந்தது. அவ்விடத்திலேயே சற்று நின்று புத்த விக்ரகத்தைப் பார்த்தவண்ணம், "ஆஹா! கருணாமூர்த்தியான புத்த பகவான் பூவுலகத்திலிருந்து ஹிம்சையையும் யுத்தத்தையும் அடியோடு ஒழிக்க முயன்றார். அவருடைய உபதேசத்தை இந்த உலகிலுள்ள எல்லா மன்னர்களும் கேட்டு நடந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும்? அவ்விதம் நடந்த புண்ணிய புருஷர் மௌரிய வம்சத்து அசோக சக்கரவர்த்தி ஒருவர்தான். அப்புறம் அத்தகைய அஹிம்சாமூர்த்தியான அரசர் இந்த நாட்டில் தோன்றவில்லை!'' என்றார் மகேந்திரவர்மர்.

ஆயனர் மௌனமாய் நிற்கவே, சக்கரவர்த்தி, "நல்லது, சிற்பியாரே! உம்மை இராஜாங்க விரோதியாகப் பாவித்து நியாயமாகத் தண்டிக்க வேண்டும்...'' என்று சொன்னபோது, ஆயனரின் முகத்தில் பெருங் கலவரம் காணப்பட்டது. சக்கரவர்த்தி அடுத்தாற்போல் கூறிய மொழிகள் அந்தக் கலவரத்தை ஒருவாறு நீக்கின.

"ஆமாம்; இங்கு வந்து விட்டு உடனே திரும்ப வேண்டும் என்று எண்ணியிருந்த என்னை இத்தனை நேரம் இங்கே தங்கும்படி வைத்து விட்டீர் அல்லவா? அதனால் எவ்வளவு காரியங்கள் தடைப்பட்டு விட்டன? போகட்டும். இந்தத் தடவை உம்மை மன்னித்து விடுகிறேன்!'' என்று கூறி ஹாஸ்ய நகைப்புடன் மகேந்திரர் வாசலை நோக்கி நடந்தார். மற்றவர்கள் அவரைத் தொடர்ந்து சென்றார்கள்.

விட்டு வாசற்படியைத் தாண்டியதும் சக்கரவர்த்தி ஆயனரைத் திரும்பிப் பார்த்துக் கூறினார்: "ஆயனரே! உம்முடைய சிற்பத் திருக்கோயிலுக்கு மீண்டும் நான் எப்போது வருவேனோ, தெரியாது. ஆனால், ஒன்று சொல்லுகிறேன்; பூர்வீகமான இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஒரு காலத்தில் அழிவு நேர்ந்தாலும் நேரலாம்...''

"பெருமானே! ஒருநாளும் இல்லை. அப்படிச் சொல்ல வேண்டாம்!'' என்று ஆயனர் அலறினார்.

"கேளும் சிற்பியாரே! உலகத்தில் இதற்கு முன் எத்தனையோ சாம்ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன; மறைந்திருக்கின்றன. ஹஸ்தினாபுரம் என்ன, பாடலிபுத்திரம் என்ன, உஜ்ஜயினி என்ன இவையெல்லாம் இப்போது இருந்த இடம் தெரியவில்லை. அதுபோல் இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்துக்கும் ஒருநாள் முடிவு ஏற்படலாம். ஆனால், உம்முடைய கலா சாம்ராஜ்யத்துக்கு ஒரு காலத்திலும் அழிவு கிடையாது. தெய்வத் தமிழ் மொழியும், தமிழகமும் உள்ள வரையில்

உம்முடைய சிற்ப சாம்ராஜ்யமும் நிலை பெற்றிருக்கும்!''

அப்போது ஆயனர் உணர்ச்சி ததும்பிய குரலில், "பிரபு! என்னைப் போல் ஆயிரம் சிற்பிகள் தோன்றுவார்கள்; மறைவார்கள்! எங்களுடைய பெயர்களும் மறைந்தொழிந்து போகும். ஆனால், இந்த நாட்டில் சிற்ப சித்திரக் கலைகள் உள்ளவரைக்கும், தங்களுடைய திருப்பெயரும் குமார சக்கரவர்த்தியின் பெயரும் சிரஞ்சீவியாக நிலைத்து நிற்கும்'' என்றார்.

அந்த மகாசிற்பியின் வாக்கு எவ்வளவு உண்மையான வாக்கு! மாமல்லபுரத்தை ஒரு சொப்பன உலகமாகச் செய்த தமிழ்நாட்டு மகாசிற்பிகளின் பெயர்கள் உண்மையில் மறைந்து போய்விட்டன! ஆனால், மகேந்திர பல்லவர், நரசிம்ம பல்லவரின் பெயர்கள் சரித்திரத்தில் இடம் பெற்று இன்றைக்கும் சிரஞ்சீவிப் பெயர்களாய் விளங்குகின்றன அல்லவா?

சக்கரவர்த்தியும் அவருடைய குமாரரும் தத்தம் குதிரை மீது ஏறிக்கொண்டார்கள். மகேந்திரர் குதிரை மேல் இருந்தபடியே, ஆயனரை மறுபடியும் நோக்கி, "பார்த்திரா? வெகு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேன்; நான் வடக்கே கிளம்புவதற்கு முன்னால் மாமல்லபுரத்தில் நடக்க வேண்டிய வேலைகளைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். நாளை பிற்பகல் நீர் துறைமுகத்துக்கு வர வேண்டும்'' என்றார்.

"ஆக்ஞை, பிரபு! வந்து சேருகிறேன்!'' என்றார் ஆயனர்.

போகும் குதிரைகளைப் பார்த்துக் கொண்டு ஆயனரும் சிவகாமியும் வீட்டு வாசலில் நின்றார்கள்.

மகேந்திரபல்லவர் ஆயனர் வீட்டு வாசலுக்கு வந்ததிலிருந்து அவர் திரும்பிக் குதிரை மீதேறிய வரையில் அவரும் ஆயனரும் சம்பாஷணை நடத்தினார்களே தவிர, குமார நரசிம்மராவது, சிவகாமியாவது வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஆனால், அவர்கள் தங்களுக்குள்ளே கண்களின் மூலமாகச் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் பேசிக் கொள்ளவில்லையென்று நாம் சத்தியம் செய்து சொல்ல முடியாது.

கடைசியாகச் சிவகாமியிடம் விடை பெற்றுக் கொள்வதற்கும் குமார சக்கரவர்த்தி அந்தக் கண்களின் பாஷையையே கையாண்டார்.

நரசிம்மரின் குதிரை சிறிது தூரம் சென்றதும், அவர் தமது தலையை மட்டும் திருப்பிச் சிவகாமி ஆவல் ததும்பப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கவனித்தார். உடனே தம் கையிலிருந்த வேலினை உயரத் தூக்கிப் பிடித்துப் புன்னகை புரிந்தார். மறுகணத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டு குதிரையைத் தட்டி விட்டார்.


குமார சக்கரவர்த்தியின் சமிக்ஞையைச் சிவகாமி அறிந்துகொண்டாள். அவளுடைய கண்களும், கண்ணிமைகளும், புருவங்களும் கலீரென்று சிரித்தன.

குதிரைகள் காட்டுக்குள் மறையும் வரைக்கும் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். குதிரைகள் மறைந்து சிறிது நேரத்துக்குப் பிறகுதான் அவள் திரும்பி வீட்டுக்கு செல்ல யத்தனித்தாள்.

நரசிம்மர் வேலைத் தூக்கிப் பிடித்துச் சமிக்ஞை செய்ததை நினைத்து உவகை கொண்ட சிவகாமிக்கு இன்னொரு விஷயம் ஞாபகம் வந்தது. அந்த வேலுக்கு உடையவனான இளைஞன் எங்கே? நரசிம்மர் பலமுறை இந்தக் கேள்வியைக் கண்களின் மூலமாகவே கேட்டதையும், தான் மறுமொழி சொல்ல முடியாமல் விழித்ததையும் நினைத்தபோது சிவகாமிக்குச் சிரிப்புப் பொங்கிக் கொண்டு வந்தது. தனக்கு முன்னால் வீட்டுக்குள் போய் விட்ட ஆயனரிடம் அந்த வாலிபனைப் பற்றிக் கேட்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவள் உள்ளே புகுந்தபோது புத்தர் சிலைக்கு அருகாமையில் ஆயனர் செல்வதையும் அந்தச் சிலைக்குப் பின்னாலிருந்து புத்த பிக்ஷுவும், அவருடன் வந்த இளைஞனும் திடீரென்று எழுந்து நிற்பதையும் கண்டாள். அப்போது சிவகாமிக்கு ஏற்பட்ட வியப்பையும் திகைப்பையும் சொல்ல இயலாது.

(தொடரும்)

விழாக்கால சலுகை



சென்னையில் டீலக்ஸ் அபார்ட் மெண்டுகள்
ரூ 3.45 லட்சம் முதல்!

இலவசப் பரிசு**

மொபட் அல்லது ஓர் தங்க நெக்லஸ்

HANSA GARDEN

ஹன்ஸா கார்டன்

தாம்பரத்திற்கு 5 கி.மீட்டருக்கு முன்னால் அமைந்துள்ள ஹன்ஸா கார்டன், நேர்த்தியான வடிவமைப்பு மற்றும் தரமிக்க கட்டுமானத்துடன் 1 – 2 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.

பிரிவு 1-ல் ஏற்கனவே குடும்பங்கள் குடியேறிவிட்டன.

- ***விலை ரூ.3.45 – 6.10 லட்சம்****
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- டெலிபோன் மற்றும் டிஷ் ஆண்டெனா
- விளையாட போதுமான இடவசதி மற்றும் புல்வெளியமைந்த சுற்றுச்சூழல்
- காம்ப்ளக்ஸிற்கே சொந்தமான போக்குவரத்து வசதி
- பாரிமுனை, அண்ணாசாலை, வேளச்சேரி, தி.நகருக்கு நேரடி அரசு பேருந்து
- சிறந்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அருகில் உள்ளன.

இடம் : மாடம்பாக்கம் பிரதான சாலை, ராஜகீழ்ப்பாக்கம், வேளச்சேரி – தாம்பரம் சாலை பிரிவில்.

HANSA VANDANA

ஹன்ஸா வந்தனா

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள ஹன்ஸா வந்தனா, 1, 2 மற்றும் 3 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.

- ***விலை ரூ.4.20 லட்சம்* முதல்***
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- தண்ணீர் சுத்திகரிப்பு வசதி

இடம் : நாயுடு ஷாப் ரோடு, ராதா நகர், குரோம்பேட்டை

புக்கிங்கிற்கு அணுகவும்:

ஹன்ஸா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட்

கிவ்ராஜ் எஸ்டேட்ஸ், நான்காம் தளம்,

624, அண்ணா சாலை, சென்னை - 600 006.

போன் : 8293135 / 2315/ 2323

ஃபேக்ஸ் : 8293135.

email: hansaest@md4.vsnl.net.in

* வரிகள் மற்றும் டெபாசிட்டுகள் நீங்கலாக

** விதிமுறைகளுக்கு உட்பட்டது

சிக்கனமான விலையில் வசதியான வாழ்க்கை

அடகு போகும் குழந்தைகள்!

பொருட்களை அடகு வைப்பது போய், பிள்ளைகளை அடகு வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள சில கிராமத்தினர்.


செய்தியைக் கேட்டு அதிர்ந்துபோய் மறவநத்தம் கிராமத்துக்குச் சென்றோம்.



இங்கு வசிக்கும் ஜோதிவேலுவுக்குக் கூலித்தொழில்வருமானம் வயிற்றுப் பாட்டுக்கே சரியில்லாத நிலையில், கூடவே நோயாளி மனைவியும் ஆறு பிள்ளைகளும். எத்தனை நாள்தான் பட்டினி கிடப்பது? போராடிப் பார்த்தார் ஜோதிவேலு. முடியவில்லை. வறுமையும் சோகமும் ஒருசேர வாட்ட... தாம் பெற்ற பிள்ளைகளையே அடகு வைக்கத் துணிந்தார்.

அருகிலிருக்கும் கிராமமான களத்தூரில் பவுனம்மாள் என்பவரிடம் தன் பன்னிரண்டு வயது மகன் மணிகண்டனை ரூபாய் மூவாயிரத்துக்கு அடகு வைத்தார்! இந்தப் பிஞ்சு மகன் அங்கு பண்ணை வேலை செய்து அடகுக் கடனை அடைப்பது என வாய்வழி உறுதிமொழி. அடுத்து மனைவி செல்லம்மாளுக்கு நோய் அதிகரிக்க, மருத்துவச் செலவு எகிறியது. மீண்டும் கண்ணீர். வறுமை; இதையடுத்து ஏழு





"தலைவரோட அறிக்கையைப் பத்திரிகையில வெளியிடறதுல ஏதோ குளறுபடி ஆயிடுச்சாமே?"
"ஆமாம். மறுப்பு அறிக்கையை முதல் நாளும், அறிக்கையை மறுநாளும் வெளியிடறமாதிரி மாத்தி அனுப்பித் தொலைச்சுட்டார்."
— மேல்மங்கலம் பத்ரா

வயது மகன் முனியமுத்து அடகு போனான். அதே கிராமத்தில் செல்வம் என்பவரிடம் ஏழாயிரம் ரூபாய்க்கு அடகு வைத்தார் ஜோதிவேலு. இந்தப் பிஞ்சும் அங்கு வேலை செய்து அந்தக் கடனை அடைக்க வேண்டும். ஆனால் இந்தப் பிஞ்சை அடகு வைத்த பணம், அவனது தாயின் இறுதிச் சடங்குக்குத்தான் பயன்பட்டது!

துடித்துப் போனார் ஜோதிவேலு. இந் நிலையில் 'பட்ட காலிலேயே படும்' என்பது மாதிரி இவரும் நோயாளி ஆகிப் போக, பணமும் சாப்பாடும் கேள்விக்குறியாயின. மூன்றாவதாக தன் பதினெட்டு வயது மகள் ஆனந்தமணியை அடகு வைக்கத் துணிந்தார். பெரம்பலூர் அருகே உள்ள தண்ணீர்ப் பந்தல் என்னுமிடத்தில் ஒரு ஓட்டல் உரிமையாளரிடம் ஒப்பந்த அடிப்படையில் ஏழாயிரம் ரூபாய்க்கு அடகு போனாள் ஆனந்தமணி!

இந்த அவலம் இந்தக் கிராமத்தில் மட்டுமல்ல; மேட்டுப்பாளையம், தொண்டாப்பாடி, வள்ளியூர், என்.புதூர் போன்ற பல கிராமங்களிலும் பல குடும்பங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பெற்ற பிள்ளைகளையே அடகு வைக்கும் நிலை ஒருபுறம்; சிறுவர்கள் என்றும் பாராமல் அவர்களை அடகு பெற்று வேலையில் பிழியும் கல்மனக்காரர்கள் ஒருபுறமென்று இக் கிராமங்களில் இந்நோய் பரவியுள்ளது.

இந்தக் கொடுமை குறித்து கேள்விப்பட்ட வேர்ல்டு விஷன் ஆப் இந்தியா என்ற தொண்டு நிறுவனம் கலங்கிப் போய் நேரில் சென்று விசாரித்தனர். குழந்தைகள் அடகா? என கொதித்த இத் தொண்டு நிறுவனத்தினர் ஜோதிவேலு குடும்பத்தின் அவல நிலைக்கு முதலில் முற்றுப்புள்ளி வைத்தனர். அடகு வைக்கப்பட்ட மணிகண்டன், முனியமுத்து ஆகியோரின் 'அடகு முதலாளி'களிடம் பேசி அவர்களது உழைப்புக்கான ஊதியத்தைக் கழித்துக் கொண்டு அடகிலிருந்து மீட்கப்பட்டனர். ஆனால் ஆனந்தமணி மட்டும் இன்னமும் மீட்கப்படவில்லை. அந்தச் சூழ்நிலை மீண்டும் அந்தக் குடும்பத்தில் ஏற்படாமலிருக்க, ஜோதிவேலுவுக்குப் பதினைந்தாயிரம் ரூபாய் மதிப்பில் கறவை மாடு ஒன்று வாங்கித் தந்து பிழைப்புக்கு வழி காட்டியுள்ளது வேர்ல்டு விஷன் தொண்டு நிறுவனம்!


என். புதூர் கிராமத்துச் சிறுவன் காசிராஜன் பண்ணை வேலைக்கு அடகு போனது ஏழாயிரம் ரூபாய்க்கு. அவன் வேலை பார்த்ததற்குச் சம்பளமாக ரூபாய் இரண்டாயிரம் கழிக்கப்பட்டு மீதி அடகுக் கடன் ரூபாய் ஐந்தாயிரம். அதில் நான்காயிரம் ரூபாய் பண்ணை முதலாளிக்குத் தரப்பட்டு அடகிலிருந்து மீட்கப்பட்டுள்ளான் காசிராஜன். மீதம் ஆயிரம் ரூபாயைத் தவணை முறையில் தந்து கடனைத் தீர்க்க வேண்டியது பெற்றோரின் பொறுப்பு என்று பேசி முடித்திருக்கிறார்கள்.

இவர்களுக்கு இரண்டு கறவை மாடுகளைக் கொடுத்து உதவியுள்ளது இந்தத் தொண்டு நிறுவனம்.

"இப்பத்தான் வாழ்க்கை ஆரம்பிச்சிருக்கு; வேர்ல்டு விஷன் தொண்டு நிறுவனத்துக்குத்தான் நன்றி சொல்லணும்" என்கிறான் சிறுவன் காசிராஜன்.

— திருநாவு

இளமையை வாட்டியெடுத்த வறுமையிலும், தமது குடிசையின் ஓட்டைகள் வழியே வானத்து நட்சத்திரங்களை ரசிக்கப் பழகிய ராகவேந்திரா லாரன்ஸ், தமிழ், தெலுங்குச் சினிமாக்களின் முன்னணி நடன இயக்குனர். ஹீரோவுக்குத் தோற்றம் முக்கியமல்ல, திறமையே முக்கியம் என்று சொல்லாமல் சொல்வதைப் போல 'ஹீரோ'வாகவும் முன்னேறியிருக்கும் லாரன்ஸ், தமது நெகிழ வைக்கும் பிளாஷ்பேக்கை இங்கே நினைவு கூர்கிறார்.




ராகவேந்திரா லாரன்ஸ்

"பதினாறு வயசுல மறுபிறவி!"

"சென்னை திருவொற்றியூர் தான் என்னோட ஊர். குடிசையிலேதான் வாழ்க்கை ஆரம்பிச்சது. மூணு தங்கைகள். ஒரு தம்பி. அப்பா மொடாக் குடிகாரர். வீட்லே ரொம்பக் கஷ்டம்.

'மாநகராட்சி பள்ளிக்கூடத்திலே ஆறாவது படிச்சிட்டு இருந்தேன். 'மதிய உணவு சமைக்க, யார் மூணு அண்டா தண்ணீர் அடிச்சு தர்றீங்களோ அவங்களுக்கு மூணு கரண்டி சாப்பாடு கூடுதலா உண்டு. கை தூக்குங்க'ன்னு கேட்பாங்க. நான் அவசர அவசரமா



வைரமுடைய நெஞ்சு வேண்டும்

கைத்தூக்குவேன். பெண் பிள்ளைகள் எல்லாம் என்னைப் பார்த்துச் சிரிப்பாங்க. எனக்கு அவமானமா இருக்கும். நெஞ்சு வலிக்க வலிக்க அடி பம்பில் தண்ணீர் அடிச்சுக் கொடுத்துட்டு, அதிகமாகக் கிடைக்கிற சாப்பாட்டைத் தங்கச்சிகளுக்குக் கொண்டு வந்து கொடுப்பேன்.

சின்ன வயசுலேயே குடும்பத்துக்காக நான் குழந்தைத் தொழிலாளியா மாறணும்ன்னு நினைச்சேன். "இல்லப்பா எவ்வளவு கஷ்டமானாலும் பரவாயில்லை நீ படி, நான் வேலைக்குப் போறேன்'னு அம்மா தையல் வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டாங்க. நல்ல சாப்பாடே பெரிய கனவா இருந்த அத்தனை கஷ்டத்துலேயும், எங்க சந்தோஷத்துக்காக அம்மா சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போவாங்க.

'நீர்க்குமிழி' படம் பார்த்துட்டு, அம்மாவும் நானும் வீட்டுக்கு வந்துட்டிருந்தோம். திடீர்ன்னு எனக்கு மயக்கம் வந்து, வலதுபக்க கை, கால் செயலிழந்து, பேச்சும் போயிடுச்சு. அரசு மருத்துவமனையிலே சோதிச்சுப் பார்த்துட்டு பிரைன் டியூமர்ன்னு சொல்லிட்டாங்க. வீடே சோகத்துல மூழ்கிடுச்சி. அம்மா தாலியை அடமானம் வச்சு என்னை டாக்டர்கிட்டே அழைச்சுட்டுப் போனாங்க. 'நான் ட்ரீட்மெண்ட் தொடங்குறேன். ஆனால் எல்லாம் கடவுள் கையிலே இருக்கு'ன்னு டாக்டர் சொல்லிட்டார். அப்போ ராகவேந்திரா ஸ்வாமிகள் படத்தை வச்சு அம்மா பூஜை செய்வாங்க. ரஜினிசார் நடிச்ச ராகவேந்திரா படம் பார்த்ததுலேர்ந்து அம்மாவுக்கு ராகவேந்திரான்னா உயிர்.

எனக்குக் குணமாகறதுக்காக, அம்மா வடிவுடையம்மன் கோவிலுக்குப் போயிருக்காங்க. அங்கேயிருந்த சாமியார் ஒருத்தர், 'உன் மகனை பெங்களூர் பக்கம் இருக்கிற மந்த்ராலயத்துக்குக் கூட்டிட்டுப் போ'னு சொல்லியிருக்கார். அப்போதான் நாமும் ராகவேந்திரா படத்தை வெச்சு பூஜை செய்யறோமேன்னு ஞாபகம் வந்திருக்கு. உடனே என்னைத் தூக்கிட்டு மந்தி



• 'பார்த்தாலே பரவசம்' படத்தில் சிம்ரனுடன்...

ராலயம் வந்துட்டாங்க. அங்கே போய்த் திரும்பின பிறகு புதுசா சக்தி கிடைச்ச மாதிரி ஓர் உணர்வு. கட்டி மெல்ல மெல்ல கரைய ஆரம்பிச்சுடுச்சுன்னு டாக்டர் சொன்னார். அடுத்த ஆறு மாசத்துலே முழுசா குணமாகி, நடக்க ஆரம்பித்தேன். பேச்சு வந்தது. பதினாறு வயசுல மறுபிறவி கிடைச்சுருக்கு. சீக்கிரம் ஏதாவது சாதிக்கணும்னு துடிக்க ஆரம்பிச்சுட்டேன்.

என்னோட தாய் மாமா ஒரு தபேலா கலைஞர். சினிமா இசை கச்சேரிகளுக்கு வாசிக்கிறவர். அந்த மாதிரி கச்சேரிகளுக்கு என்னையும் அழைச்சிட்டுப் போக ஆரம்பிச்சார். அங்கே மேடையிலே ஆடுகிற ஒருசில டான்ஸர்களோட நானும் சேர்ந்து மறைஞ்சு மறைஞ்சு ஆடிக்கிட்டிருந்தேன். ஒரு கச்சேரிக்கு டான்ஸர்கள் வரலே. என்னை மட்டும் மேடையிலே ஏத்திவிட்டுட்டாங்க. எனக்குள்ளே ஏதோ ஆவி புகுந்த மாதிரி



ஆட ஆரம்பிச்சுட்டேன். ஒரே கைதட்டல். அதுக்கப்பறம் நீ இருந்தாதான்டா கச்சேரின்னு சொல்லிட்டாங்க!

குப்பத்துலே சாவுக் கூத்துன்னா, என்னையும் அறியாமல் போய் ஆட ஆரம்பிச்சுடுவேன். எங்க ஏரியாவில் கல்யாணம்னா லாரன்ஸைக் கூப்பிடுன்னு சொல்லிடுவாங்க. ஒருமுறை கல்யாண வீட்ல ஆடினப்போ இருபது ரூபாய் கொடுத்தாங்க. அதுதான் நான் ஆடிச் சம்பாதித்த முதல் பணம். பத்து பேர் பார்த்து கைதட்டுகிற கலை, கையிலே இருக்கும்போது, இதிலேயே நாம் ஏன் சாதிக்க கூடாதுன்னு என்னை நானே கேட்டுக்கிட்டேன். அப்போதான் சினிமா ஆசை வந்தது.

சூப்பர் சுப்பராயன் எங்க ஏரியாக்காரர். மாமா என்னை அவர்கிட்ட அழைச்சுட்டுப் போய்ச் சேர்த்துவிட்டார். டான்ஸ் மாஸ்டர் ஆக நினைச்சு, ஸ்டண்ட் மாஸ்டர்கிட்டே சேர்ந்துட்டோமேங்கிற வருத்தம் இருந்தாலும், கவலைப்படாமல் அவருக்கு உதவியாளராக இருந்தேன். ஒழுக்கம்னா என் னங்கிறதை அவர்கிட்டேதான் கத்துக்கிட்டேன்.

'தர்மதுரை' படத்தை ஹிந்தியில் எடுத்தாங்க. சூப்பர் சுப்பராயன் மாஸ்டர்தான் ஸ்டண்ட். அங்கேதான் சூப்பர் ஸ்டாரை நேர்ல பார்த்தேன். ஆச்சர்யமா இருந்தது. இது நிஜம்தானான்னு கிள்ளிக்கூட பார்த்துக்கிட்டேன். சுப்பராயன் மாஸ்டர்கிட்டே 'யார் இந்தப் பையன்னு?' ரஜினி கேட்டார். நம்ம ஆளுதான் நல்லா டான்ஸ் ஆடுவான் பார்க்குறீங்களான்னு கேட்டார் சுப்பராயன் மாஸ்டர். அவர் சரின்னு சொல்றதுக்குள்ளே மியூசிக் எதுவும் இல்லாமல் ரஜினி முன்னாலே ஆடிக்காட்டினேன். ஷாட் ரெடின்னு சொன்னதும் எதுவும் சொல்லாமல் எழுந்து போய்ட்டார். எனக்கோ தலைகால் புரியலே. வீட்ல வந்து ரஜினி என்னை ஆடச் சொல்லி, கட்டிப் பிடிச்சுப் பாராட்டினார்னு மூட்டை மூட்டையாய்ப் பொய்ச் சொன்னேன்.

நான்கு நாள் என்னைக் கண்டுக்காமல்

●●

நான் டான்ஸ் மாஸ்டராகப் பணியாற்றிய முதல் படம் வெளியே வரலை. நம்ம சினிமா வாழ்க்கை முடிஞ்சுடுச்சுனு நினைச்சேன்.

●●

அமைதியாக இருந்த ரஜினிசார், ஒருநாள் ஷூட்டிங் முடிஞ்சு கிளம்பும்போது நாளைக்கு என்னை வீட்லே வந்து பாருன்னு சொன்னார். எனக்கு எல்லாம் கனவு மாதிரி இருந்தது. மறுநாள் ரஜினி வீட்டுக்குப் போனேன். நெற்றியிலே பட்டையெல்லாம் அடிச்சுக்கிட்டு இருந்தார். "நான் இதுவரைக்கும் யாருக்கும் சிபாரிசு செஞ்சது இல்லே. முதல் முறையா உனக்குச் செய்றேன். இந்த லெட்டரை டான்ஸ் யூனியன்லே கொடுத்து, டான்சரா சேர்ந்துடு. காலத்தை வேஸ்ட் பண்ணாதேன்"னார். நான் அழுதுட்டேன்.


டான்ஸ் யூனியன்லே உறுப்பினர் அட்டை வாங்குறது சாதாரணம் இல்லே. நிறைய விதிமுறைகளைத் தாண்டி, செலக்ஷன்லே ஜெயிக்கணும். ரஜினி எனக்கு லெட்டர் கொடுத்ததாலே சேர்த்துக்கிட்டாங்க. உடனே டான்ஸ் மாஸ்டர் சுந்தரத்துக்கிட்டேயும் என்னைச் சேர்த்துவிட்டார். சீக்கிரம் மாஸ்டர் ஆகணும்ன்னு கைகால் துடிக்க ஆரம்பிச்சுடுச்சி. உடனே வெளியே வந்து வாய்ப்புத் தேடினேன். எஸ்.ஏ. சந்திரசேகர் இயக்கிய 'பொம்பள

சிரிச்சா போச்சு' படம்தான் நான் டான்ஸ் மாஸ்டராகப் பணியாற்றிய முதல் படம். படம் வெளியே வரலை. நம்ம சினிமா வாழ்க்கை முடிஞ்சுடுச்சுன்னு நினைச்சேன். நான் பிரபு தேவா மாஸ்டரிடம் வேலை செய்துகிட்டிருந்தபோது, என்னைத் தயாரிப்பாளர் டி.வி. பிரசாத் கவனிச்சுக்கிட்டு இருந்திருக்கிறார். அவர் கூப்பிட்டுத் தெலுங்கில் வாய்ப்புக் கொடுத்தார். அவர் எடுத்த எல்லா படங்களுக்கும் நான்தான் மாஸ்டர். சிரஞ்சீவி, பாலகிருஷ்ணா இன்னும் தெலுங்கில் இருக்கிற முன்னணி ஹீரோக்களின் ரசிகர்கள் எல்லாம், லாரன்ஸ் டான்ஸ் வேணும்ன்னு கேட்க ஆரம்பிச்சாங்க. அங்கே நம்பர் ஒன் இடம் கிடைச்சது.

பிஸியான டான்ஸ் மாஸ்டராக இருந்த என்னை ஹீரோவாக நடிக்கச் சொல்லி, தெலுங்கில் வளர்த்துவிட்ட டி.வி. பிரசாத் கேட்டார். அய்யோ என்னோட ஃபேஸ் வேல்யூ தெரியாம பேசுறீங்களே, நிறைய பணம் இருந்தா ஒரு ரெக்கார்டிங் தியேட்டர் கட்டுங்க; வருமானம் வரும்ன்னு மறுத்துட்டேன். அவர் விடலே. அந்தப் படம் 'ஸ்பீட் டான்சர்.' விளம்பரம் இல்லாமலேயே ஐம்பதுநாள் ஓடிய அந்தப் படத்துக்கு, லேபுக்குக் கொடுக்கவே பணம் இல்லாமல், கஷ்டப்பட்டு வெளியே வந்தோம். ஆனாலும் 'உன் மூஞ்சிக்கு இதெல்லாம் தேவையா?'னு எல்லோரும் திட்ட ஆரம்பிச்சுட்டாங்க.... அதுக்கப்புறம் ஒரு வருஷம் சும்மா இருந்த என்னை அடுத்த படம் எப்போன்னு ரசிகர்கள் கேட்க ஆரம்பிச்சுட்டாங்க. ஆனா அங்கே என்கரேஜ் பண்ண யாரும் இல்லை. பேசாமல் நம்ம ஊரிலேயே போய் முயற்சி பண்ணுவோம்ன்னு சென்னை வந்துட்டேன்.

'உன் மூஞ்சிக்கு இதெல்லாம் தேவையா?'னு எல்லோரும் திட்ட ஆரம்பிச்சுட்டாங்க....

இங்கே திறமையை மட்டுமே நம்பி வாய்ப்பு தரும் சௌத்ரி சாரை சந்திச்சு என் மனசிலே இருந்ததைச் சொன்னேன். முதல்லே சின்ன சின்ன வேஷம் தருகிறேன். அதைப் பண்ணு, நிச்சயமா வாய்ப்புத் தர்றேன்னு சொன்னார். துள்ளாத மனமும் துள்ளும் படத்திலே 'மேகமாய் வந்து போகிறேன்' பாடலுக்கு கோரியோகிராஃப் பண்ணுகிற வாய்ப்புக் கொடுத்தார். இதுக்கு இடையிலே தேசிய கீதம் படத்துலே ஒரே ஒரு பாட்டுக்கு டான்ஸ் கம்போஸ் பண்ற வாய்ப்பை, சேரன் கொடுத்தார். அதை விஷுவல் பண்ணியவர் டைரக்டர் சரண். பழகுறதுக்கு அத்தனை இனிமையான மனிதர். கேட்காமலேயே உதவி செய்யறவர். அங்கே என்னோட திறமையைப் பார்த்துட்டு, உனக்கு அல்டிமேட் எய்ம் என்னன்னு கேட்டார். ஹீரோ ஆகணும்ன்னு சொன்னேன். அவரோட 'அமர்க்களம்' படத்துலே 'மகா கணபதி' பாட்டுக்கு ஆடுற வாய்ப்பைக் கொடுத்தார். தமிழில் முகம் காட்டுற முதல் பாடலே கணபதி. அடுத்து 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தில், எல்லோர் மனசிலேயும் நிற்கிற மாதிரி ஒரு மிடில் கிளாஸ் இளைஞன், தன்னோட தகுதிக்கு மீறி லவ் பண்ற மாதிரி ஒரு ஆண்டிரோல். தமிழ் ரசிகர்கள் என்னை ஞாபகம் வெச்சுக்கிட்ட ரோல்.



சரண்தான் என்னை பாலசந்தர் சார்கிட்டேயும் அழைச்சுக்கிட்டுப் போனார். நீங்க சொன்ன கேரக்டருக்கு லாரன்ஸ் ரொம்ப பொருத்தமா இருப்பான்னு சொன்னதும் சரின்னு அவர் நூறாவது படத்துலே வாய்ப்புக் கொடுத்துட்டார். அவர் டைரக்ஷன்லே நடிச்சப்போ நடிப்புன்னா சும்மா பம்மாத்து இல்லேன்னு புரிய வெச்சுட்டார். 'பார்த்தாலே பரவசம்' படத்துலே மூணு பாட்டுக்கு டான்ஸ் ஆடியிருக்கேன். இப்போ 'அற்புதம்' படத்துலே முழுக்க முழுக்க ஹீரோ. சௌத்ரி சார் சொன்ன மாதிரியே எனக்குப் பெரிய வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். அவர் நம்பிக்கையை எப்படியாவது காப்பாத்தணுமேன்னு கஷ்டப்பட்டு நடிச்சிட்டு இருக்கேன். எவ்வளவோ பேரை வாழ வெச்ச தமிழ் மக்கள் என்னைக் கைவிடமாட்டாங்க. ஏன்னா நானும் ஒரு சாமானியன்!

சந்திப்பு: **ஸ்ரீசக்கரம்**

பணத்தை வாங்கிக் கொண்டு வெளியேறிய வீரையனை ஜன்னல் வழியே பார்த்தவாறிருந்தாள் லீலா. மனம் இலேசாகத் தத்தளித்துக் கொண்டு இருந்தது.

"உங்க வயசு என்னங்க?"

இவ்வாறான கேள்வியின் இயல்புத் தன்மையை, அதன் பின்னால் அடுக்கடுக்காய்ப் போர்த்தியிருக்கும் பாவனை உறைகளை நீக்கிப் பார்த்தால் கேட்பவனின் நிஜமான எண்ண ஓட்டம் புரிந்துவிடும். லீலாவுக்கு இது ஒன்றும் புதிதல்ல. புருஷன் போன பிறகு அவள் இதுபோன்ற பல பார்வைகளை எதிர்கொண்டிருக்கிறாள். அவள் திரும்பி நிற்கையில் முதுகை வருடும், பேசிக் கொண்டிருக்கையில் அவள் வேறுபுறம் பார்த்து மீள்கிற அந்த நொடியின் சிறு சிதறலில் அவளது உடம்பு முழுவதும் தடவி விட்டு அப்பாவித் தனமாக பேச்சைத் தொடரும் கண்கள்.

'நமக்குள்ள ஒரு ஏற்பாடு பண்ணிக்கலாமா?" என்று நேரடியாகவே கேட்டு விடுகிற பாராட்டப்படவேண்டிய மனிதர்கள். குறுகிய கால ஒப்பந்தத்துக்குத் தயாரா? என்று காண்ட்ராக்ட் போட விரும்பிய வியாபாரிகள்...



இப்படி பல பேரைச் சந்தித்துத்தானிருக்கிறாள். இதில் ஒன்றும் ஆச்சர்யமில்லை என்பதைப் புரிந்து கொண்டு அவள் பக்குவப்பட்டுப் பல காலமாயிற்று. வீட்டுக்குள் நுழைந்து யோசனையுடன் ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்தாள் லீலா. மெதுவாக கண்ணாடி முன்பு வந்தாள். "என்ன வயசு?"

கண்ணாடியில் தெரிகிற லீலா விரும்பத்தக்க உடல் வனப்புடன்தானிருந்தாள். நல்ல நிறம். இன்னும் உயிர்ப்புடன் இருக்கிற கண்கள். நடுத்தர வயதுக்கே உரிய அளவில் சற்றுப் பூசினாற்போல் சதை போட்ட உடம்பு. அது அவள் மீதான கவனத்தை அதிகரிக்கச்



செய்வதாக இருக்கிறது.

மூன்று பெண்கள், ஒரு பையனைப் பெற்ற பெண் என்பதைக் காட்டிக் கொடுக்காத உடலும், உருவமும். இது எல்லாம் இருக்கட்டும். 'பட்'டென்று தன் மீது ஒரு நபரின் பார்வை குவிக்கப்பட காரணம், இதெல்லாம் தாண்டி இவள் தனியானவள். கணவன் என்கிற ஆணை இழந்து பல காலமாய்த் தனித்து இருப்பவள் என்கிற விஷயம் தான். தரையில் அமர்ந்து கால் நீட்டி, சுவரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் லீலா. மனத்தின் ஓட்டம் இன்று வெகு வினோதமாயிருக்கிறது. முன்பு பலமுறை இப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்தபோது 'சட்'டென்று கோபமும், ஆங்காரமும் வந்து கூடிக் கொள்ளும். பத்து நாள் வரைக்கும் நினைக்க நினைக்க அழுகை வரும். விதியை நொந்து கொள்வாள்.

கொஞ்ச காலம். மெல்ல மெல்ல கோபமும், ஆங்காரமும் தணிந்து போனது. இப்படிக் கேட்பவர்களைப் பற்றி மனது யோசித்தது. அவர்கள் மீது கோபம் வருவது குறைந்தது. மாறாக அவர்கள் இப்படிக் கேட்பதற்கான தர்க்க நியாயங்களை யோசிக்குமளவிற்கு மனது பக்குவப்பட்டுப் போனது. கேட்பவர்களை எப்படிக் கையாள்வது என்று அறிவு யோசித்தது.

தனக்குள் சிரித்துக் கொண்டாள் லீலா. தன்னை அணுகியவர்கள் எல்லோரையும் ஒரு ஆல்பத்தைப் புரட்டுவதைப் போல் மனசுக்குள் புரட்டினாள். நிறையப் பேர் ''ஒரு வாய்ப்புத் தானே முயற்சி பண்ணிப் பார்ப்போம்'' என்கிற ரகம். சிலர் 'கல்யாணம் பண்ணிக்கிறேன்' என்று கூடச் சொன்னதுண்டு. ஆனால் அவர்களுக்கெல்லாம் ஏற்கெனவே கல்யாணம் ஆகி இருந்தது.

'தனக்கு மட்டும் சலனங்கள் ஏற்படவில்லையா என்ன?' என்று நினைத்துக் கொண்டாள். நான்கைந்து முறை கண்ணியில் மாட்டிக் கொள்ள விழைந்து, விளிம்பு வரை போய்ச் சுதாரித்து மீண்ட தருணங்கள் எல்லாம் இல்லாமலில்லை. சில நபர்கள் மீது உண்மையிலேயே ரொம்ப விருப்பமும், எண்ணமும் இருக்கத்தான் செய்தது. அந்தச் சந்தர்ப்பங்களெல்லாம் ரொம்பவும் கொடுமையானவை. இலேசாகக் கண்கலங்கியது லீலாவுக்கு. அது எவ்வளவு வேதனை? மனதுக்கும், உடலுக்குமான போராட்டம்.

பாஸ்கர் சக்தி

அது விளைவிக்கும் அவஸ்தை...ச்சே!

எல்லாம் இந்த மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்று விட்டதால்... தனக்குத் தானே போட்டுக் கொண்ட பூட்டுகள். இந்தப் பெண் பிள்ளைகள் மட்டும் இல்லாவிட்டால் எப்போதேனும் சின்னச் சின்ன இளைப்பாறல்கள்- சாத்தியப்பட்டிருக்கும். இவ்வளவு ஆண்டுகளையும் தகிக்கும் வெப்பத்துடன் தாண்டி வந்திருக்க வேண்டியதில்லை. சொல்லப் போனால் மிகப் பெரிய அலட்சியத்தை எனது உடல் மீது நான் காட்டி வந்திருக்கிறேன். அதனுடைய இடையறாத கெஞ்சலை நான் வன்மத்துடன் புறக்கணித்து வந்திருக்கிறேன். எனது மூன்று பெண் பிள்ளைகளுக்காக.

பெருமூச்சுடன் எழுந்து சென்று தனது டயரியை எடுத்து குறிப்பு பகுதியில் வீரையன் பற்று 1000 ரூபாய் என்று எழுதினாள் லீலா.



''அமைச்சரா பதவியேற்க சென்னைக்குப் போற அண்ணன் கையைப் புடிச்சுக்கிட்டு எல்லோரும் அழுவுறாங்களே...ஏன்?''

''இனி அஞ்சு வருஷத்துக்கு ஊரு பக்கம் அண்ணன் வரமாட்டாரே!''

- ராஜா முஹம்மது

டவுன் டீக்கடையில் சரவணனும், சுந்தரும் நின்று கொண்டிருந்தார்கள். சரவணனுக்குப் பேங்கில் பணம் கட்டும் வேலை இருந்தது. அப்பா கொடுத்து விட்ட பணத்தைப் பேங்கில் செலுத்திவிட்டு வெளியே வருகையில் மணி பன்னிரண்டு. தனியாக எப்போதுமே டவுனுக்கு இவர்கள் வருவது கிடையாது. இன்றைக்கு மணியும் பாலாவும் சோம்பேறித்தனமாக, "நாங்க வரலை; நீங்க ரெண்டு பேரும் போய்ட்டு வாங்கடா'' என்று சொல்லிவிட்டனர். எனவே சுந்தரும், சரவணனும் மட்டும் வர வேண்டியதாகி விட்டது.

பணத்தைக் கட்டிவிட்டு டீ சாப்பிடு கையில் அடுத்து என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசித்தார்கள்.

டவுனில் நாலு தியேட்டர்களிருந்தன. இரண்டு தாய்மொழிப் படங்களும், ஒரு ஆங்கிலப்படமும், தாய்மொழி பேசுகிற ஒரு மலையாளப்படமும் அவற்றில் ஓடிக் கொண்டிருந்தன. சரவணனும் சுந்தரும் மூன்றாவது வாரமாக வெற்றி முரசு கொட்டுகிற தமிழ்ப்படத்தை முதலில் யோசித்தார்கள். அதன் மும்பைக் கதாநாயகி அரை டிராயர், பனியன் அணிந்து கொண்டு ஆற்றின் அழகை ரசிக்கிற காரணத்தால் அதற்குப் போவதுதான் நியாயம் என்றான் சரவணன். அதனை சுந்தர் வன்மையாக மறுத்தான். மலையாளத் தமிழ்ப் படத்தில் கிராமத்துப் பணக்கார வீட்டில் கதாநாயகன் மாடு மேய்க்கிறான். அந்தப் பணக்காரருக்கு ஒருபெண். அடிக்கடி தொழுவச் சந்திப்புகள், இவ்வளவு சாத்தியங்கள் கொண்ட படத்தைப் போயும் போயும் அந்த மும்பைக் கதாநாயகிக்காக இழக்க வேண்டுமா? என்று ஆணித்தரமாக வாதத்தை எடுத்து வைத்தான். எனவே அதனைச் சரவணன் ஏற்றுக் கொண்டான். டீக்குப் பின்பு சிகரெட்டை ஊதியபடியே போஸ்டர்களைப் பார்த்துக் கொண்டே தியேட்டரை நோக்கி நடந்தார்கள். தியேட்டருக்குச் செல்லும் வழியிலிருந்த அனைத்துப் போஸ்டர்களுமே இவர்களைச் சுருதி ஏற்றின. சுந்தர், "என்னடா? நான் என்ன சொன்னேன்? கலக்கியிருக்காங்கள்ல? நீ பாட்டுக்கு அந்தப் படத்துக்குத்தான் போகணும்னு சொன்ன... இங்க பாரு..'' அவன் சுட்டிக்காட்டிய போஸ்டரில் கதாநாயகனும், நாயகியும் தொழுவத்திலிருக்க, அவர்களைப் பார்த்து மாடுகள் மிரட்சியுடன் நின்றிருந்தன.

தியேட்டருக்குள் நுழைந்து சிகரெட் புகை சூழ அமர்ந்தார்கள். முதுகெங்கும் மூட்டைப் பூச்சிக் கடி. கதவுகளை இறுக மூடி படத்தைப் போட்டார்கள். மதியக் காட்சி. வேர்த்து ஊற்றியது. ஆனால் படம் சூடாக இருந்ததால் அசௌகரியங்கள் பெரிதாய்ப் படவில்லை. வெளியே வருகையில் முகமெல்லாம் ஒரே பிசுபிசுப்பு.

''பிச்சு ஒதறீட்டாங்கடா'' என்று பாராட்டியபடியே வெளியே வருகையில் சற்றுத் தள்ளியிருந்த தியேட்டரில் படம் விட்டு ஜனங்கள் வந்து கொண்டிருந்தனர். தமிழ்ப் படம். குடும்பப் படம். எனவே

பெண்கள் நிறைய வர, இவர்கள் தள்ளி நின்று வேடிக்கைப் பார்த்தனர். கர்ச்சீப் எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டனர். ஆனால் முகத்தின் பிசுபிசுப்பு ஒன்றும் குறைவதாகத் தோன்றவில்லை.

வந்து கொண்டிருந்த ஜனங்கள் நடுவே பளீரென்று வேணி முகம். வேணிகளின் முகம்.

"ஏய் இவங்க வந்திருக்காங்டா."

அவர்கள் இவர்களை நெருங்கி விட்டனர். கிருஷ்ணவேணி அந்தத் தொழுவப் போஸ்டரை கவனித்தவாறே வந்தவள் அருகில் இவர்களிருவரையும் பார்த்து ஒரு வினாடி குழம்பிப் பின் 'சட்'டெனப் புன்னகை செய்தாள்.

சரவணன் அவளையே உற்றுப் பார்த்தான். நாமும்தான் மேட்னி ஷோ பார்த்தோம். மூஞ்சி, உடம்பெல்லாம் கசகசத்துப் போய் அவலட்சணமாக நிற்கிறோம்.

ஆனால் அவள்! முகமெல்லாம் மினுமினுங்க... ச்சே... இதெல்லாம் வந்து... கடவுள் அப்படி படைத்திருக்கிறான் என்று மனசுக்குள் ஓட, இவனும் புன்னகை செய்தான்.

"என்ன சார் இங்கிட்டு சினிமாவா?" என்று குரல் கேட்டது. குனிந்து பார்த்தான். இவனது சட்டையின் கீழ் நுனி பற்றிய படி அழகு நின்றிருந்தான்.

"ஆமாமா."

"நாங்களும் சினிமாவுக்குத்தான் வந்தோம்" இப்போது வேணிகள் வந்து அழகைச் சுற்றி நின்றார்கள்.

"நீங்க எந்த படம்?"

சுந்தர் சற்று கவனக்குறைவு மற்றும் வேணிகளைப் பார்த்த குழப்பத்துடன் "இதோ இந்தப் படம்" என்று தொழுவப் போஸ்டரைக் காட்டி விட்டான்.

அழகு ஒரு விதமாய்ச் சிரிக்க, வேணிகள் முகம் தர்மசங்கடத்தில் சுருங்கி வேறு பக்கம் பார்த்தன.

சரவணன் பதற்றத்துடன் சமாளித்தான். "சேச்சே. இதில்லை. போஸ்டர் மாத்திக் காமிக்கிறான். நாங்க அந்தப் படம் பார்த்தோம்."

வேறொரு போஸ்டரை நோக்கி அவன் கை நீண்டது.

அழகு, பேச்சை மாற்றினான், "இப்ப எங்க பஸ் ஸ்டாண்ட்தானா?"

"ஆமா."

"வாங்க போவோம்."

அனைவரும் சேர்ந்து நடக்க ஆரம்பித்தனர். சினிமாவிட்டு வந்த ஜனத்திரளினிடையே இவர்கள் சேர்ந்தும், விலகியும் நடக்க நேரிட்டது.

இந்தப் பிரிவையும் சேர்க்கையையும் புத்திசாலித்தனத்துடன் பயன்படுத்தி வேணியும் சரவணனும் நெருங்கினர். பின்வந்த கும்பலை முன்னே அனுமதித்து தன்னைப் பின் நகர்த்திக் கொண்டு சரவணின் அருகே வந்தாள் வேணி.

சரவணன் மனசு கிளர்ச்சியில் படபடத்தது. சுந்தரை ஜாக்கிரதையுணர்வுடன் தேடி



னான். அவனைக் கும்பல் முன் நகர்த்தி மற்றொரு வேணியின் அருகே கொண்டுபோயிருந்தது.

வேணி இவனைப் பார்த்து புன்னகை செய்தாள். சரவணன் மனம் முழுதும் இன்ப இரசாயனச் சேர்க்கைகள் நிகழ்ந்தன.

அவள் முகத்தில் சட்டென ஒரு மாறுதல், பொய்க்கோபம்.

"நீங்க ரொம்ப மோசம்."

"ஏன்?"

"அசிங்க அசிங்கமான படமெல்லாம் பாக்கறீங்க."

அவள் அந்த போஸ்டரைக் காட்டினாள். கோபம் போல் காட்டிக் கொள்ள முயன்றாலும் அவள் கண்களில் கோபம் இல்லை. குறுகுறுப்பும், ஆசையும் அவளது கண்களில் தெரிந்தன.

(தொடரும்)



மாயன்

பாரதிராஜாவும், சேரனும் முன்னிறுத்தும், மண் வாசனைக்கு இணையாக, அய்யனார் குதிரைகளின் பின்னணியில் படம் தொடங்கியதும், ஆஹா! நாசர் அசத்தப் போகிறார் என்று நிமிர்ந்து உட்கார்ந்தால் நினைப்பு பிழைப்பைக் கெடுத்து விட்டது.

ஜமீன்தாரி முறையின் சாபக்கேடுகளில் ஒன்றான பான்டெட் லேபர்களை (பண்ணையடிமைகள்) மீட்கத் துடிக்கும் கிராமத்து வீரனாக மாயன் அறிமுகமாகிறார், சரி.

காதலி தன் கழுத்து கருகமணியை கழற்றி, அதை மாயன் கையில் கட்டி அவனது போராட்டக் குணத்தைக் கட்டுப்படுத்தி விடுகிறாள், ஓகே. இதன் பிறகு ஜமீன்தாரிடம் கொத்தடிமையாகச் சேர்ந்து, பிறவிக் கோழை மாதிரி எல்லா அவமானங்களையும் சகித்துக் கொள்ளும் மாயனை நாம் சகித்துக் கொள்ள வேண்டும் என்றால் எப்படி சரி? அதிலும் சூழ்நிலைக் கைதியாகி நிற்கும் போது வாயைத் திறந்து தன்னிலை விளக்கம் கொடுக்கக் கூடத் தயங்குபவன் எப்படி ஒரு 'லெஜன்டரி ஹீரோவாக' இருக்க முடியும்?

இதைவிட அநியாயம், இரண்டாவது பாதியில் திடீர் தேசியவாதியாக மாறும் மாயன், சுதந்திரப் போராட்டக் களத்திற்குள் 'தொபுக்கடீர்' என்று குதித்து, கிட்டத்தட்ட தன் கிராமத்தையே மறந்து விடுகிறான். படம் முடிந்து கடைசியில் மாயன் என்ன சாதித்தான் என்றால் 'பூஜ்யம்' என்ற உணர்வுதான் மிஞ்சுகிறது.

மாயன் பாத்திரத்திற்குக் கச்சிதமாய்ப் பொருந்தி, நடிப்பில் நாசர் கம்பீரம் காட்டினாலும், தன் மக்களுக்காக அவர் செய்யும் ராபின்ஹுட் ஆபரேஷன்களில் அழுத்தம் குறைவு. வடிவேலுவின் பாத்திரத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தில் பாதியையாவது, கம்பீரமாய் அறிமுகமாகும் ரோஜாவுக்குக் கொடுத்திருந்தால் படம் களைகட்டியிருக்கும்.

நவீன நாடகக் குழுவிலிருந்து சினிமா பிரவேசம் செய்திருக்கும், 'போலீஸ் பகபதியின்' நடிப்பிற்கு வெல்கம் சொல்லலாம்.


மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் கிராமியக் கலைகளுக்குச் சினிமா ஆக்ஸிஜன் கொடுக்க முயலும் நாசர், கடல் கடந்து போய் கண்டி நடனத்தைப் படம்பிடித்து வந்து நம் கண்களுக்கு விருந்தாக்கியிருக்கிறார். இதுபோன்று நிறைய உழைத்திருக்கும் நாசர், ஒரு விஷயத்தில் கோட்டை விட்டு விட்டார்:

உண்மைச் சம்பவங்களைக் கொண்டு, திரைக்கதை அமைக்கும்போது, கதை நிகழும் களம், காரணமின்றி 'ஜம்ப்' ஆகிறது. ஆகவே, கதை கழுதையாய் மாறி உதைக்கிறது!

• ஆவரேஜ்

— விஷுவல்தாசன்

வருமுன் காக்க வேண்டாமா?



• மும்பை உலக வர்த்தக மையம்

அடுத்த வீட்டிலிருப்பவருக்கு 'ஹார்ட் அட்டாக்' என்றால், நம்முடைய இசிஜி எடுக்க ஓடுவோம். ஹார்ட் அட்டாக்கோ, அமெரிக்க அட்டாக்கோ, வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு அதே கதைதான். அமெரிக்காவுக்கே இந்த கதி என்றால், தம்மாத்தூண்டு மும்பை எவ்வளவு பாதுகாப்பானது என்று எல்லோரும் கவலைப்படத் துவங்கி விட்டார்கள். இத்தனைக்கும் மும்பைக்காரர்கள் ஏற்கெனவே சூடு போட்டுக் கொண்டவர்கள். மார்ச் 12, 1993 தொடர் குண்டு வெடிப்புகளையும், அது ஏற்படுத்திய நாசத்தையும் அதற்குள் மறந்து விட முடியுமா? இத்தனைக்குப் பின்னும் நாம் விழித்துக் கொண்டிருக்கிறோமா? என்றால்... ஹூம்!

'ஊஹூம்' என்று பரிதாபமாகத் தலையாட்டுவதைத் தவிர வேறெதுவும் சொல்லிக் கொள்கிறார் போலில்லை! என்னவோ ஏர்போர்ட்டிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் பாதுகாப்பை அதிகரித்து, ரிசர்வ் போலீஸைக் குவித்திருப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் கிட்டத்தட்ட 14 மில்லியன் மக்கள் வாழும் மும்பையில், 24 ஃபயர் ஸ்டேஷன்களும் 2119 தீயணைப்பு வீரர்களும், 19 தண்ணீர் டாங்கர்களும், 13 ஆம்புலன்சுகளும்தான் உள்ளன. 4 கி.மீக்கு ஒரு தீயணைப்பு நிலையம் இருந்தால் தான் நாலு நிமிடத்துக்குள் விபத்து நடந்த இடத்துக்கு, ஃபயர் இன்ஜின் சென்றடைய முடியும்.அடுத்தடுத்து குண்டு வெடித்தால் என்ன செய்வதாம்?

அடுத்தடுத்து அடுக்குமாடிக் கட்டடங்கள் பெருகி வருவதுவேறு கவலைக்கிடமளிக்கிறது. ஆங்காங்கு தீயணைப்பு இயந்திரங்கள், ஸ்மோக் டிடெக்டர்கள், அலாரம்கள் பொருத்தப்பட வேண்டும் என்பதையே பில்டர்கள் புறக்கணிக்கிறார்கள். நரிமன் பாயின்டில் வேலை செய்யும் பலருக்கு "ஃபயர் எக்ஸிட்" எங்கே என்பதே தெரிந்திருக்கவில்லை! 54 வயது ஸ்டாக் ப்ரோக்கர் இந்திர குமார் பாக்ரி, "முன்பு மும்பையில் எங்கள் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் பில்டிங்கில், கீழே குண்டு வெடித்தபோதும் கண்ணை மூடிக்கொண்டு இறைவனைத்தான் பிரார்த்தித்தேன்; இப்போது



• அடுக்குமாடி கட்டடங்கள்

அமெரிக்காவில், என் உறவினர்கள் வசிக்கும் இடங்களில் தீவிரவாதம் தலைவிரித்தாடும்போதும் அதையேதான் செய்கிறேன். வேறு என்ன செய்வது?'' என்கிறார்.

என்ன செய்ய வேண்டும் என்பதே நம்மில் பலருக்குத் தெரியவில்லை என்பதுதான் மிகப் பெரிய கவலை; 'மக்களுக்கு இதிலெல்லாம் ட்ரெயினிங் கொடுத்துத் தயார்ப்படுத்த வேண்டாமா?' என்று கொதிக்கிறார்கள் சமூகநல அமைப்பினர். ''நம் தவறுகளிலிருந்து பாடம் கற்று, வருமுன் காத்துக் கொள்ள வேண்டாமா? வந்தபின் வருந்தி என்ன பயன்?'' என்கிறது காவல் துறை. ''ஆமாம்... வருடா வருடம் வரும் மழையின்போது இங்கே வாழ்க்கை ஸ்தம்பிக்கிறதே? நிச்சயமாகத் தெரிந்து ஆபத்துகளிலிருந்தே நம்மைக் காத்துக் கொள்ளத் தெரியவில்லை; என்றோ நிகழும் பயங்கரவாதத்திற்குத்தான் தயாராகப் போகிறோமா?'' என்று அலுத்துக்கொள்பவர்கள் பலர்.

அலுப்போ சலிப்போ, WTCயிலுள்ள ஆபீசுக்கு லேட்டாகக் கிளம்பி, தெய்வாதீனமாகத் தப்பிய மும்பைக்காரரான லியோன் ஃபெர்ரோவிடம், ''மறுபடியும் மும்பை திரும்பி விடுவீர்களா?'' என்றால் 'மாட்டவே மாட்டேன்' என்கிறாரே? 'நான் மும்பை குண்டு வெடிப்பின்போது அங்கே இருந்தவன்; அப்போது நிலவிய குழப்பமும், பீதியும், டென்ஷனும், இப்போது இங்கே யாரிடமும் இல்லை. விமானம் மூலம் மட்டுமே இங்கே தாக்குதல் நிகழ முடியும் என்பது எல்லோரும் அறிந்ததுதான். ஏனெனில் தரையில் அத்தனை பாதுகாப்பு; சட்டமும் ஒழுங்கும் இங்கே சூப்பர்'' என்று



• லியோன்

உறுதியளிக்கும்போது, நாம் மும்பையை நினைத்துக் கவலைப்படாமல் இருக்க முடியுமா?

மும்பையிலுள்ள பூபேந்தர் சிங்குக்கு, ''அமெரிக்காவில் தாடி வளர்த்து டர்பன் கட்டியவர்களை எல்லாம் அராபியர்கள் என்று தாக்குகிறார்களாமே? நியூஜெர்ஸியில் ஓட்டல் நடத்தும் என் பிள்ளையை, தாடியை எடுத்துவிட்டு, போனிடெய்லுக்கு மாறிவிடு என்று தினமும் ஈமெயில் அனுப்புகிறேன். டெலிஃபோன் லைன் கிடைக்காமல் அதுவேறு 'ஜாம்'மாகிக் கிடக்கிறதே'' என்ற கவலை.

மேல்படிப்புக்காக அமெரிக்கா பயணிக்க இருந்த பாலாஜிக்கு, அபசகுனமாக ஃபிளைட் எல்லாம் கான்சலாகி விட்டதே' என்று ஒரே கவலை...

கவலை... கவலை என்று என்ன இது, மும்பை மசாலாவில் ஒரே அமெரிக்க அழுகையாயிருக்கிறதே என்கிறீர்களா? என்ன செய்வது? அங்கே இடித்தால் இங்கே மழை பெய்கிறதே? ஆனால் இங்கே இடியே விழுந்தாலும் யாரும் கவலைப்பட மாட்டேன் என்கிறார்களே? பாருங்களேன்..

மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில், 94 மாதங்களில் காணாத அதல பாதாளத்தை, ஸென்ஸெக்ஸ் (2680 பாயிண்டுகள்) தொட்டிருக்கிறதே, தங்கமும் வெள்ளியும் உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்டிருக்கிறதே என்ற கவலையே இல்லாமல், எங்கள் சமாஜ்வாதிப் பார்ட்டித் தலைவர் அமர்சிங், 'ஜம்'மென்று துலாக் கோலில் அமர்ந்துகொண்டு, எடைக்கு எடை வெள்ளியை அள்ளிக் கொண்டிருக்கிறாரே...!

— ஜெயஸ்ரீ ராஜ்

“அஞ்சரை மணி பஸ்ஸைப் பிடிச்சம்னா விடியால நேரத்துல வக்கீலூட்டுக்குப் போயிச் சேர்ந்தர்லாம். அவுரு கோர்ட்டுக்குக் கௌம்பறதுக்குள்ள பாத்துப் பேசுன முன்னாத்தா சவுரியம்.''

வேலுமணி சொல்லவும் தம்பிராசு ஆமோதிப்பாய்த் தலையாட்டிக் கொண்டான்.

''அஞ்சு மணிக்கு நீயி தண்ணிவாத்து பெறப்பட்டு இரு. நான் வண்டியெடுத்துட்டு வந்தர்றன். பாப்பு கடைல வண்டிய நிறுத்திட்டு பஸ்ஸேறிக்குலா. கோயமுத்தூருல ஏதாவது ஒட்டல்ல புட்டக்கிட்டத் தின்னுட்டாப் போகுது.''

''செரிச்செரீங்.''

அவர் திண்ணையிலிருந்து எழுந்து வார்ச் செருப்புகளைப் போட்டுக் கொண்டார்.

''வரட்டுமா?'' டீ.வி. எஸ்.ஸை ஸ்டார்ட் செய்து கொண்டு வேலுமணி கேட்கவும் தம்பிராசு எழுந்து, ''செரீங்'' என்று வழியனுப்பிவிட்டு உள்ளே சென்றான். நடு வறையில் அருணா தேவியும் குமரேசும் சிம்னி ஒளியில் பாடம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எரவாரத்தில் தொங்கும் லாந்தர் கண்ணாடி மேல் பாகத்தில் கரி மிகுதியாய்ப் படிந்து விட்டது. அவன் திரியைத் தணித்து வைத்தான்.

''ராத்திரீல போற வார சோலிய வாசக் கட்டக் குக்கீட்டுப் பேசாதீங்கன்னா கேக்கறானா அவன்?''

- ஆசாரத்துக் கட்டிலில் முணுமுணுப்பு.

திண்ணையில் பேசாமல் அடுப்படியிலா பேசுவது? தம்பிராசுவுக்கு எரிச்சலாக வந்தது. கௌடுக்கு இன்னும் பண்ணாட்டு. 'போடறதத் தின்னுட்டு மூடிட்டு கெடக்காம..' என வாய்க்குள் பல்லைக் கடித்துக் கொண்டான். அவரது முன்னிலையில் ஒரு காரியம் செய்யப் பாங்கில்லை. நொட்டு, நொள்ளை என்று ஆயிரத்தெட்டு நூனாயம்.

''ஏனப்புச்சி ராத்திரில வெளில குக்கீட்டுப் பேசக் கூடாது?'' என்று சின்னவன்



போட்டிக் கதை – 4

இரண்டாம் பாகம்: மூன்றாவது அத்தியாயம்

குரல், ஆசாரத்தில்.

"அ- ஆஞ்சாமீ! அது ஆகாது."

"ஏ... ளப்புச்சீ...?" சிணுங்கலுடன் கூடிய ராகம்.

தம்பிராசு எட்டிப் பார்த்தான். சிலேட்டை பைக்கட்டுக்குள் திணித்துக் கொண்டு அக்காக்காரியும் அங்கே நடப்பது தெரிகிறது. கட்டிலிலிருந்து ஐயனின் கைகள் நீண்டு பேரனைத் தன்னோடு இழுத்து மடியில் அமர்த்திக் கொண்டன. பேத்தியும் அருகே அமர்ந்து கொண்டாள்.

செங்காளியப்பனின் வலசு காலம். இப்போது வட்டச் செயலாளராயுள்ள மயில்மாணிக்கத்தின் தகப்பனார் மாரி முத்துக்கவுண்டரும், நேத்து வருசம் இறந்துபோன கொல்லூப் பட்டறை பசுபதியும் அவரது சோட்டாளிகள். இவர்களை, ஒரு வட்டலில் தின்று வளர்ந்தவர்கள் என்பார்கள் ஊரில்.

அன்னாடும் சோலிகளை முடித்துவிட்டு ஒன்று கூடுவது நடைமுறை. பொழுது விழுந்ததுமே மாரிமுத்துக் கவுண்டர் களத்திலிருந்து வந்துவிடுவார். பட்டறையிலும் இங்கேயுமாக பத்து, பதினோரு மணி வரை வெட்டி நாயம். பிறகு கோழி கூப்பிடுகிற நேரத்திலும் சந்தித்து, மூவரும் சேர்ந்தே ஆற்றுக்குக் குளிக்கப் போவது.

இப்படி இருந்த ஒரு நாளில்தான் அது நடந்தது.

இரவிலே பேச்சு சுவாரஸ்யத்தில் தாமதமாகிவிட்டது. 'இன்னீஞ் சித்தெக்குள்ள சாமமாயிருமாட்டிருக்குதுறா. நாம் போயிட்டுக் கோளி கூப்ட வந்து எளுப்பறன்' என்றுவிட்டு மாரிமுத்துக் கவுண்டர் கிளம்பினார்.

செங்காளியண்ணனுக்குப் படுத்ததுமே மசத் தூக்கம். அப்போதுதான் கண்ணைச் சிம்பின மாதிரி இருந்தது. அதற்குள் கோழி கூவிவிட்டது.

"ஆனா... அது கோளியல்லோ" என்றார் அவர். குமரேசும் அருணாதேவியும் அவரது முகத்தைப் பார்த்தார்கள்.

"குட்டித்தாச்சாந்தா கோளியாட்ட வந்து கூவியிருக்குது. அது ஆள் மாறாட்டமா எந்த ரூவன்னாலும் எடுக்கும். வேற மனுசனுகளாட்ட, மிருகங்களாட்ட, பட்சிகளாட்டல்லாம்."

லாந்தர் ஒளியில் செங்காளியண்ணனின் முகம் தீவிரம் கொண்டிருந்தது. அவரது வாயில் வீசும் போத்தானை வாசனையும் பட்டணப்பொடி நெடியும் குமரேசுவை உறுத்தின.

"எறங்கிக்கறனப்புச்சி."

அவன் இறங்கிய வேகத்தில் கயிற்றுக் கட்டில் கிறீச்சிட்டது. எதிரிலுள்ள ஒலகங் காய், சாக்கில் உட்கார்ந்து கொண்டான்.

"சொல்லுங்கப்புச்சி."

பேத்தியாளின் ஆர்வம் செங்காளியண்ணனை உற்சாகப்படுத்திவிட்டது.

"கோளி கூப்புட்டுச்சா,... எனக்குச் சமுசியம். உப்பத்தான படுத்தம், இது சாமக் கோளியாக் கீது இருக்குமோன்னு. ரெண்டு மூணு சலக்கா கௌவறத்தள்ளைல கூவுனதும், செரி.... நாம அசந்து தூங்கிட்டமாட்டன்னு நெனச்சுட்டன். 'செங்காளீ.... டேய், செங்காளீ...' அப்புடீன்னு வாசல்ல மாரி முத்துக் கவுண்டரு சத்தம் போடறாரு. 'உன்னீமென்னுடா தூக்கம்'ங்கவும், 'வர்றனிர்றா'ன்னேன். கதவத் தெறந்து பாக்கைல படலுக்கிட்ட நிக்கறாரு. அப்ப நம்மூட்டுல வாசலச் சுத்தீ மூங்கப் படலு கட்டியிருந்துச்சு."

"ம்...."

"இப்பத்த மாற அப்ப சோப்பு கிப்பெல்

ஷாராஜ்



''உங்களோட ஜோக்கைப் படிச்சாப் போதும் சார்; எனக்குத் துக்கமெல்லாம் போன இடம் தெரியாமல் மறைஞ்சிடும்!''
''நிஜமாவா?''

லாங் கெடையாது. மேலுக்கு பயித்த மாவு, தலைக்கு சீவக்கா – இல்லீன்னா, அரப்பு. பொட்டணங் கட்டி எடுத்துக்குவோம். பல்லு வெளக்கறதுக்கு வேப்பங்குச்சிய ஒடிச்சுட்டு அவுரு கூட நடந்தன்.''

"ம்....''

ஒற்றைக் கோழிக்குப் பிறகு வேறெந்த கோழியும் கூவவில்லை. செங்காளியண்ணன் யோசித்தார். கிழக்கிலே வெள்ளியும் முளைக்கவில்லை. கவுண்டரிடம் கேட்கலாமென்று பார்த்தால் எட்டு வைப்பது புலப்படாமல் நடையோட்டமாக முன்னால் போகிறார். விளக்கு வெளிச்சமோ நிலா வெளிச்சமோ இல்லாத சந்துகள். இருட்டு கண்ணுக்குப் பழகி, நட்சத்திர மினுக்கத்தில், கவுண்டர் வெரசலாக நடப்பதை உன்னித்தார்.

"அதுல ஒரு சமாசாரம்.''

பேரக் குழந்தைகள் ஆவலோடு பார்த்தன. செங்காளியண்ணன் சாவகாசமாக வேட்டிச் சொங்கிலிருந்து டப்பியை எடுத்தார். விரலால் மூடியிலும் அடிப்பாகமும் தட்டிக் கொண்டு, பிறகு அதைத் திறந்தார். இரு விரல் நுனிகளில் பொடி எடுத்ததுமே அதன் காட்டம். அருணாதேவி தள்ளி அமர்ந்து கொண்டாள். அப்படியும் அவளுக்குத் தும்மல் வந்து விடுமாய் உணர்வு. ஆனால் வரவில்லை. செங்காளியண்ணன் மூக்கின் ஒரு துளையை அடைத்து மற்றதில் என மாற்றி மாற்றிப் பொடியை உறிஞ்சித் துடைத்துக் கொள்கிறார். அவரது கண்களில் ஈரப் படலம். அவர் மூச்சை இன்னுமிழுத்துக் கிறங்கினார்.

லாந்தரின் காற்றாட்டத்தில், படுக்கப் போகும் தம்பிராசுவின் நிழல் ஆசாரத்துக்குள் பூதாகாரமாய் ஆடி மறைகிறது.

"கவுண்டரு நெலத்துல காலுப்படா...ம நடக்கறாரு.'' செங்காளியண்ணன் அந்தரத்தில் கையை நகர்த்திக் காட்டினார்.

"அதெப்படி அப்புச்சி நெலத்துல காலுப் படாம நடக்கறது?'' என்று கேட்டாள் அருணாதேவி.

'அதுதாஞ் சாமி,....... சொல்றங் கேளு. வந்தது கவுண்டரல்லோ. குட்டித்தாச்சாந்தா கோளி கூப்படறதுக்கு மிந்தியே வந்து கோளியாட்ட கூவுனது, கவுண்டராட்ட ரூவம் மாறிக் கூப்பட்டதெல்லாம். குட்டித்தாச்சானுக்கு நெலத்துல கால் முட்டாது. நெலத்துக்கு அரை அங்கணம் மேலதா அது நிக்கும், நடக்கும். கவுண்ட்ரோட காலு முட்டாததப் பாத்ததுமே, 'ஓஹோ... சங்கதி இப்புடியா'ன்னு கண்டுட்டேன். இந்த குட்டித்தாச்சான் என்ன பண்ணும் தெரீமா...?''

பேத்தி உதடு பிதுக்கினாள். பேரன் மறுப்பாய்த் தலையாட்டினான்.

''இப்புடித்தா ஆள் மாறாட்டம் போட்டு கூட்டீட்டுப் போயி, கொரவளையக் கடிச்சு ரத்தத்தக் குடிச்சுப் போடும். 'பொட்டு' ரத்தம் ஒடம்புல மிஞ்சாது வெறுஞ் சக்கையாத்தா உடும்.''

''அய்யோ...'' என்றார்கள் இருவரும். பேரன் எழுந்து வந்து அக்காளுக்கும் அப்புச்சிக்குமிடையே உட்கார்ந்து கொண்டான். அவனது முகத்தில் பயத்தின் வெளிறல்.

கவுண்டராய் வந்திருப்பது குட்டிச் சாத்தானென்று புரிந்ததுமே செங்காளியண்ணன் இதனிடம் மாட்டவும் கூடாது, இதைத் தப்ப விடவும் கூடாது என்று முடிவு செய்து கொண்டார். தோதான உபாயம் உருவானது. கொல்லுப் பட்டறை ஊரெல்லையில். அதுவரை குட்டிச்சாத்தானிடம் பேச்சுக் கொடுத்தபடியே நடந்தவர், "சேரி... நீயி இங்க நின்னு. நாம் போயி பசுபதியக் கூட்டி

யாறன்" என்றுவிட்டு பட்டறைக்குச் சென்றார்.

பசுபதியை எழுப்பி ரகசியமாக விஷயத்தைத் தெரிவித்தவர், "சீக்கரமா குமிட்டில தீப்போட்டு கொளுவக் காச்சு" என்றார். பிறகு அவரும் கூடமாட ஒத்தாசையாக நின்று கொழுவைக் காய்ச்சலானார்கள். அங்கே குட்டிச் சாத்தானுக்கு, என்னடா போனவனைக் காணோமே என்று தவிப்பு. பட்டறைக்குப் போகலாமென்றால் அங்கே இரும்புமிருக்கும், கரியுமிருக்கும்; அவையுள்ள இடத்தைக் குட்டிச்சாத்தான் நெருங்காது. அவர்கள் வரும்போது வரட்டுமென்று சென்டாக்கல்லில் உட்கார்ந்து கொண்டது.

பழுக்கக் காய்ச்சிய கொழுவை மறைத்துப் பிடித்தபடி செங்காளியண்ணன் அதற்குப் பின் வசத்தில் ஓசையெழாமல் வந்தார். குட்டிச் சாத்தானின் முதுகில் சரசரவென்று சில இழுப்புகளை இழுத்ததுமே 'ஊ – ஊ ஊ ஊய்ய' என பெரும் அலறல். குட்டிச்சாத்தான் துள்ளித் தாவித் துடித்தது. அக்கணமே காற்றில் கரைந்து மறைந்து விட்டது அது.

"அப்பறமப்புச்சி?"

"அப்பறமென்னொ...! ஒன்னு சொன்னாப்புடி ஊருக்குள்ள, காடு களங்கல்ல அல்லாம் கோளி கூப்புடுது. கெளக்க வெள்ளி மொளைக்குது. நானும் பசுபதியும் பட்டறைலயே குக்கீட்டம். மாரிமுத்துக் கவுண்டரு, 'என்றா நம்மள உட்டுட்டு ஆத்துக்குப் போலாமுன்னா ப்ளானு!'ன்னுட்டு வாறாரு அங்க."

மயிலாத்தாள் குழந்தைகளுக்குப் பாய் விரித்து அவர்களை உறங்க அழைக்கையில் தம்புராசுவுக்கு உறக்கம் பிடித்துக் கொண்டிருந்தது. கோயமுத்தூருக்குப் போய்விட்டு மத்தியானத்துக்குள் திரும்பிவிடலாமா அல்லது சாயங்காலம் ஆகிவிடுமா என்றும் மாட்டுலோன் விஷயமாக பேங்கிற்குச் செல்ல வேண்டியிருப்பதையும் நினைத்துக் கொண்டிருக்கையில் அப்படியே தூங்கியும் விட்டான்.

விழிப்புற்றபோது நாலே கால், நாலரை இருக்கும். வேறாரும் அந்நேரத்துக்கு எழுந்திருக்கவில்லை. மந்தைக்குப் போகும்போது தான் பால்காரரே போகிறார். மாசியாகியும் மெலிதான பனியுடன் கூதல். தண்ணிச் சாளையில் தண்ணி காய வைக்கவும் சோம்பல்பட்டு, குளுந் தண்ணியையே மொளோச் மொளோச்சென ஊற்றிக் கொண்டான். வெடவெடத்தாலும் உறக்கக் கலக்கம் போய்விட்டது அதில்.

துணி மாற்றிப் புறப்படலானான்.

நடையூட்டுக் கோம்பையின் குரைப்பும் எதிர்க் குரைப்பாய் அய்யம்மக்காவின் குக்கலுடையதும் கேட்டன. டி.வி.எஸ்.ஸின் சப்தம் நெருங்கி வரும் போதே இவர்களின் செவலையும் குரைக்கத் தொடங்கிவிட்டது. வாசலில் எஞ்சின் அணைக்கப்பட்ட பின்னரும் விடாத குரைப்பு.

"தென்னுது நாயி இப்புடி ஒளைக்குதா?" மயிலாத்தாள் அவிழ்ந்துகிடந்த தலையை ஒரு கையில் பரபரவெனச் சொரிந்தபடியே வந்தாள். இன்னொரு கையில் கண்ணாடி முழுக்கக் கரி படிந்த லாந்தர். சுடர் சிவந்து மினுங்கியது.

"நாந்தானம்முணியோவ்" என வாசலில் வேலுமணியின் குரல்.

"தாரு, அண்ணனெவிகளா? வாங்கொ." சரிந்த எரவாரத்தின் அடியே குனிந்து சொல்கிறான்.

"இருக்குட்டம்முணி. எந்திரிச்சுட்டானா?"

"வாறானுங்கோ..." குரல் கொடுத்தபடியே அவசரமாக வெளியேறி, எரவாரத்தடியே குனிந்து வாசலில் நிமிர்ந்தான். செவலை

"நிஜந்தான் சார்... பெரிய கஷ்டம் வந்துட்டால் சின்ன கஷ்டம், இன்னுமில்லாமல்தானே போகும்!"

– சீர்காழி வி. ரேவதி



இன்னும் வேலுமணியைக் குரைத்துக் கொண்டிருக்கிறது. நடையூட்டு நாயின் குரைப்பும் கூடவே.

அதைக் கையோங்கி அதட்டினான். "கம்முனிரு."

செவலை அவனிடம் வந்து நின்று வேலு மணியைப் பார்த்தே உறுமியது. அதனிடம் குனிந்து தலையிலிருந்து கீழே தடவிக் கொடுத்தான். அதற்கு வாகாய்த் தலையை உயர்த்தி, கண் மூடிக் கொளிந்தது. தனது செருப்புகளைத் தொட்டுக் கொண்டு, வாந் நருடன் நிற்பவளிடம், "போயிட்டு வாறன்" என்று சொல்லிக் கொண்டான்.

டி.வி.எஸ்.ஸில், வேலுமணிக்குப் பின் னால் உட்கார்ந்து போகிறபோது அய்யம் மக்கா வீட்டுச் சந்தில் அந்தக் குக்கல் பின்னங்காலுள் வால் நுழைத்து ஓடியது. கோம்பை, ஊரைத் தூக்குகிறாற்போலக் குரைத்து பின் தொடர்ந்து ஓடி வந்தது. கல்லெறி தொலைவோடு அதுவும் நின்றுவிட்டது.

"மழை தண்ணி இல்லாத காலத்துல பண்ணையம் பாக்கறதே பெருங்கொண்ட பாடு. இந்த லட்சணத்துல தகலாறு, கேசுன்னு இவனுக வேற ஒவுத்திரியம் பண்ணிட்டு" வேலுமணி சலித்துக் கொண் டார்.

"பங்காளிக இருந்தாலே அப்புடித்தானுங். சும்மாவா சொலவஞ் சொன்னாங்க பெரீவிக, 'பத்து வயுசு வரைக்குந்தா அண் ணந் தம்பி - அதுக்கு மேல பங்காளி'ன்னு."

"நல்லா, நல்லா..."

குண்டு குழிகளை கவனித்து நிதானமாக ஓட்டிக் கொண்டிருந்தார் வேலுமணி. கொல்லுப் பட்டறையருகே போகும்போது தம்பிராசு, "இப்பத்தானுங் கேவகம் வருது" என்றதுமே, "ஏப்பா, எதையாவது மறந்துட் டயாக்கு?" என்று கேட்டார்.

"இல்லீங். நேத்து ராத்திரி நாம பேசிட்டிருந்தமல்லங், அதுக்கு ஐயன் ஏன்டா வாசக்கட்ட இருந்து போற வார சோலியயெல்லாம் பேசறீங்கன்னு சப்தம் போட்டாருங்."

"ம்ங்..."

தம்பிராசு, செங்காளியண்ணன் குழந்தை களிடம் சொன்னது பற்றிச் சுருக்கமாகச் சொல்லலானான். ஊர் கடந்து மண் சாலையில் டி.வி.எஸ். ஓடிக் கொண்டிருந்தது. அதன் வேகத்திலும், குளுந் தண்ணியில் தண்ணி வாத்ததிலும் கூதல் காற்று மிகுதியாய் உடம்பைக் கூசியது அவனுக்கு. ஒத்தைப் பனையருகே போகையில் எஞ்சின் அணைந்துவிட்டது.

"ஏனுங்?"

"ரிஸர்வுளுந்துருச்சாட்டிருக்குது."


அவன் இறங்கிக் கொண்டான். வேலு மணியும் இறங்கி டி.வி.எஸ்.ஸை சென்ட்டர் ஸ்டான்ட் போட்டு நிறுத்தினார். பெட் ரோலை ரிஸர்வுக்கு மாற்றிக் கொண்டே வேலுமணி, "உங்கையஞ் சொன்னது நெசந்தேன் ராசு" என்றார்.

"ஏனுங் நீங்க வேற? அவுரு கொளந்தி களுக்கொசரம் ஏதோ சொல்றாருன்னா..."

"அட, நெசந்தேங்கறேன்,...." என்றவர் டி.வி.எஸ்.ஸை ஸ்டார்ட் செய்துவிட்டு, "இந்தா... சித்தே எக்ஸலேட்டரை உடாம முறுக்கு" என்றுவிட்டு விலகினார். தம்பிராசு அப்படியே செய்யவும் அவர் ஹெட் லைட் வெளிச்சத்துக்குப் போய் நின்று சட்டை பட்டனைக் கழற்றியவாறே, "இங்க பாத்தயா..." என்றார். சட்டையை அவிழ்த் துத் திரும்பி நின்றவரின் முதுகில் பட்டை பட்டையான தழும்புகள். ○

ஆட்டோக்கள் சந்திக்கின்றன!

'கருமாடிக்குட்டன்' மலையாளப்பட ஹீரோவான கலாபவன் மணி ஆட்டோ டிரைவராக இருந்து சினிமாவுக்கு வந்தவர். இவரைப் போலவே சென்னையில் ஆட்டோ ஓட்டி வரும் இலக்கியவாதி சிவதாணு, ஒருசில படங்களிலும் டீ.வி. தொடர்களிலும் நடித்து வருகிறார். விரைவில் கலாபவன் மணியும் சிவதாணுவும் சந்தித்து, தங்கள் அனுபவங்கள் பற்றிப் பேசப் போகிறார்களாம்!



• சிவதாணு

– அப்பு

இரத்தம் கொடுப்பதில் செஞ்சுரி!



ஒருமுறை இரத்தம் கொடுக்கவே ஆயிரத்தெட்டு முறை யோசிப்பவர்களுக்கு மத்தியில், இரத்தம் கொடுப்பதில் செஞ்சுரி போட்டிருக்கிறார் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீனிவாச தாத்தம்.

"இதுவரை முப்பத்தைந்து விட்டருக்கு மேல் இரத்தம் கொடுத்திருக்கேன். என்னோட பிறந்தநாள் மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இரத்ததானம் பண்றேன். என் வீட்டுத் தொலைபேசி, சப்தம் போட்டாலே பெரும்பாலும் அது இரத்ததானம் கேட்டுத் தான் இருக்கும். இரத்த தானம் தர விரும்பறவங்களோட முகவரிகள், தொலைபேசி எண்கள் கொண்ட பட்டியல் ஒன்று வச்சிருக்கேன். திடீர்னு கேட்கறவங்களுக்கு என்னால முடியாத சூழ்நிலையில மத்தவங்க நம்பரைக் கொடுத்து உதவுவேன்" என்கிற ஸ்ரீனிவாச தாத்தம் தமது திருமணத்துக்கு முதல்நாள்கூட இரத்ததானம் செய்து விட்டு வந்தாராம்!

தாம் பணிபுரிந்த காவேரி எஞ்சினியரிங் நிறுவனத்தில் வேலை பார்த்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைத் தன்னார்வ இரத்ததான தொண்டர்களாக மாற்றியிருக்கிறார் இந்த ஐம்பத்தாறு வயது மனிதர். தம்மைத் தவிர ஏனையோரிடமிருந்து மட்டும் சுமார் மூவாயிரத்து ஐந்நூறு தடவைகளுக்கும் மேல் இரத்த தானம் பெற்றுத் தந்திருக்கிறார் இவர்.

பொதுவாக ரத்தம் பெற்ற நோயாளி எவரென, கொடையாளி தெரிந்து கொள்ளுதல் கூடாதாம். இதனை கண்டிப்பான ஒரு நடைமுறையாகக் கடைபிடித்து வருகிறார். இதையும் மீறி பயனடைந்தவர்கள் எவரேனும் வீடு தேடி வந்து தருகின்ற பழங்களைக் கூட அன்புடன் மறுத்து விடுகிறார் கட்டாயமாக.

முன்பெல்லாம் மருத்துவமனை இரத்த வங்கியில் இரத்த தானம் தருபவர்களுக்கு பத்து வைட்டமின் மாத்திரை தந்து அனுப்புவார்களாம். அவற்றைக் கூட இவர் ஒரு போதும் பெற்றுக் கொண்டதில்லையாம்.


- இருள் நீக்கியான்

இன்றைக்குப் போட்டி; நாளைக்கு ரசிகர்கள்!

மியூசிக் அகடமி வளாகத்தில், கடந்த பதினாறாம் தேதி கொஞ்சம் மியூசிக்கும் நிறையக் கூச்சல்களும் கேட்டன.

சுமார் நூறுக்கு மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள், யூத் அசோசியேஷன் ஃபார் க்ளாசிகல் மியூசிக் (ஒய்.ஏ.சி.எம்) அமைப்பு நடத்திய 16ஆம் ஆண்டு விழா 'கார்னிவ'லில் கலந்து கொண்டு கலக்கினார்கள்.

கிரிக்கெட் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் கார்னிவலைத் தொடங்கி வைத்தார். ரிப்பன் கட் பண்ணி, 'நானும் கர்நாடிக் மியூசிக்கை ரசிப்பேன்' என்று சொல்லி, பக்கத்தில் நின்ற பையன்களிடம் ஏதோ கேட்டு விட்டு, மனிதர் ஜூட்! (ஆடுவதற்கும் பாடுவதற்கும் பிட்ச் ரொம்ப முக்கியம் என்று சொன்னாரா, தெரியவில்லை!)



ஷாமியானாவில் ஸ்டால் போட்டிருந்த சிவசாமி கலாலயா, மயிலை; ஸ்ரீ சங்கரா சீனியர் செகண்டரி பள்ளி, அடையாறு; டிஏவி மாணவிகள் பள்ளி; ஸ்ரீசத்குரு சங்கீத வித்தியாலயா, சென்னை; ஸ்ரீசங்கர வித்தியாலயா, தாம்பரம் - என்று பள்ளிகள் எடுத்துக் கொண்டது போக, ஜூக் பாக்ஸ், கர்நாடிகா ஆர்க்கைவல் சென்டரின் காஸட்டுகள், சிடிக்கள், சிடிராம்கள் நிறைந்த ஸ்டால்களும் உண்டு.

தாம்பரம் சங்கர வித்யாலயா ஸ்டாலில் நிறையத் தகவல்கள். பழைய விமர்சனங்கள், ('தும்புரு'வோடது இருக்கான்னு தேடித் தேடிப் பார்த்தும், ஊஹூம்...) வீணை பாலசந்தரின் வாழ்க்கை, என்று அட்டைகளில் கட்டித் தோரணம் போல் தொங்கவிட்டிருந்தார்கள்.

அடையாறு இந்து சீனியர் செகண்டரி பள்ளி மாணவன் விக்னேஷ், ஒரு லாப்டாப் கம்ப்யூட்டரில் 50 கேள்விகளையும் அவற்றுக்கான பதில்களையும் பதிவு செய்து, ஒரு க்விஸ் நடத்திக் கொண்டிருந்தார்.

எல்லா ஸ்டால்களிலும் குட்டிக் குட்டியாக க்விஸ். பதில் சரியாகச் சொல்லி வெற்றி பெற்றவர் கைகளில் எல்லாம் நிறைய துண்டுச் சீட்டுகள் : பாயின்ட்ஸ் எத்தனை என்று!

100 பாயின்டுகளுக்கு இரண்டு டிசர்ட் பரிசு. 250 பாயின்டுகளுக்கு டிசர்ட் தவிர டெர்ரகோட்டா பொம்மைகள். 900 பாயின்டுகளுக்கு சிடி!

'**ர**சிகர்களை உருவாக்குவோம்' என்ற தலைப்பில் நடந்த போட்டியில் முதல் பரிசு (1500 ரூபாய்) இந்து சீனியர் செகண்டரி பள்ளி வித்யாவுக்கும், மூன்றாவது பரிசு (750 ரூபாய்) இதே பள்ளியைச் சேர்ந்த ப்ரீதாவுக்கும் கிடைத்தது. தாம்பரம் சங்கர வித்யாலயா பள்ளி சுபத்ராவுக்கு இரண்டாம் பரிசு (1000 ரூபாய்.) ஆடியோ க்ளிப்பிங்கைக் கேட்டு ராகத்தைச் சொல்ல வேண்டும்; பாடியவர் யார் என்று சரியாகச் சொல்ல வேண்டும்.

ஆனந்த் சிவா பதினாறு ஆண்டுகளுக்கு முன் ஒய்.ஏ.சி.எம்ஐ நிறுவிய இளைஞர்களுள் ஒருவர். முதல் ரவுண்டில் வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளை வைத்துக் கொண்டு இவர் நடத்திய போட்டியில், ஒரு பெண் ராகத்தைக் கண்டு பிடித்து 'கல்யாணி' என்று சொல்ல, 'நோ' என்று இன்னொரு பெண் சொல்ல, 'சரியான ராகம் எது?' என்று ஆனந்த் கேட்க, 'ஐ டோன்ட் நோ' என்று பதில் சொல்ல, 'அப்படி ஒரு ராகமே இல்லையேம்மா' என்று இவர் ஒரு போடு போட, பரபரப்பும் கலகலப்புமாக இருந்தது.

— சித்தார்த்

நடுவே சில நிமிடம் கேட்டதால் விசுவின் அரட்டை அரங்கத்துக்கான விவாதப் பொருள் என்னவென்று தெரியவில்லை. ஒரு பெண் சொல்லிக் கொண்டிருந்தார்: "மனைவி நகை வாங்க வேண்டும் என்கிறாள். புடைவை வாங்க வேண்டும் என்கிறாள். வீடு வேண்டும், கார் வேண்டும் என்றெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்கிறாள். அதனால்தான் கணவன் லஞ்சம் வாங்க வேண்டியிருக்கிறது...?"

One good reason to get married is you will always have someone to blame when things go wrong.

அந்தப் பெண்ணின் கருத்தை விசுவும் ஆமோதித்தார். 'லஞ்சம் வாங்குகிறவனை மட்டும் ஜெயிலுக்கு அனுப்பினால் போதாது. கூடவே அவன் மனைவியையும் அனுப்ப வேண்டும்' என்றவர், அதற்கு மூன்று காரணமும் சொன்னார்.

1. மனைவிதான் கணவனை லஞ்சம் வாங்கத் தூண்டுகிறாள்.

2. கணவன் லஞ்சம் வாங்குகிறான் என்பது தெரிந்ததும் அதைப் போலீசுக்குச் சொல்லாமல் மறைத்து, குற்றத்துக்கு உடந்தையாக இருக்கிறாள்.

3. கணவனை விட்டு ஒரு போதும் பிரிய மாட்டேன் என்று திருமணத்தின்போது உறுதி கொடுத்திருப்பதால் தார்மீக அடிப்படையிலும் அவள் ஜெயிலுக்குப் போக வேண்டியவளே.

நல்ல காலம், விசுவை சட்ட அமைச்சராக வாஜ்பாய் வைத்துக் கொள்ளவில்லை!



• சந்திரபாபு

மனைவியைச் சிறையில் போடுங்கள்!

தானும் பாபுலராக வேண்டும் என்ற ஆசையில் என்னென்னவோ பண்ணிப் பார்க்கிறது தூர்தர்ஷன். பொதிகையில் கங்கை அமரன் நடத்திய திரை இசை நிகழ்ச்சி அந்த முயற்சிகளில் ஒன்று. (மலிவான ஜோக்குகள் வீசுவதை கங்கை அமரன் இப்போதெல்லாம் விட்டுவிட்டார்.)


'ஸ்ரீரங்க ரங்கநாதனின் பாதம்...' பாட்டைப் பாடினார் மகாநதி ஷோபனா. பாட்டின்போது கேட்ட குரல் கெட்டியாகிவிட்ட மாதிரி தோன்றியது. அதே பாட்டில் கமல் பாடிய வரிகளை எஸ்.பி.பி சரண் பாடினார். சாரீரத்தில் சற்று நடுக்கம் தென்பட்டது. பக்கத்திலேயே தந்தை பாலசுப்பிரமணியம் இருந்ததால் may be he felt nervous. இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திருந்தால் வெற்றி கிடைக்கும். ஏனெனில் வாரிசுகளுக்கு ராசியான காலம் இது.

மெட்ராஸ் பாஷையின் மோகன சுகத்தை ஆலாபனை செய்வதில் சந்திரபாபுவை மிஞ்சக்கூடிய ஒரு நடிகர் பூமியிலே எங்கனுமே பிறந்ததில்லை. 'சபாஷ் மீனா'வில் புரிந்து கொண்டு ரிக்ஷாக்கார பாபுவைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகும் போது அவர் திட்டுவது காதுக்கு விருந்து; திமிறுவது கண்ணுக்கு விருந்து. பழைய சிநேகிதன் என்று எண்ணி உரிமையோடு டா போட்டுப் பேசும் சிவாஜியை அடித்து விரட்டிவிட்டு, உண்மையை உணர்ந்ததும், போகிறவரைப் பார்த்து, 'பிரதர்! மன்னிச்சிக்க பிரதர்!' என்று எம்பி எம்பிக் கூறுவதும், வேப்பிலை அடிக்கும் பூசாரியின் விபூதி அபிஷேகத்தில் மூச்சு விட முடியாமல் கையைக் காலை உதைத்துக்கொண்டு தவிப்பதும் எமகாதக நடிப்பு.



• வீனஸ் - ஸெரினா

இதெல்லாம் நாற்பது வருஷத்துச் சமாசாரம் என்று இகழக் கூடாது. Today's 40s will



• மகாநதி ஷோபனா

become 60s to replace the 60s of today. அப்போது புரியும்.

தற்சமயம் அமெரிக்காவில் 'டாப் டென்'னாக ஓடும் படங்கள் என்னென்ன என்பதைப் பட்டியலிட்டு, கொஞ்சம் கொஞ்சம் காட்சிகளும் காட்டினார்கள். (ஸ்டார் ப்ளஸ்)

அதில், ஆறாவது படமாக ஒன்று வந்தது. ஒரு விமானத்தைத் தனியே ஓட்டிச் சென்ற ஒரு பைலட், அமானுஷ்யமான தீவு ஒன்றில் கட்டாயமாகத் தரையிறங்க நேரிடுகிறது. ஒளிந்திருந்து பார்க்கும்போது ஒரு பயங்கரம் தெரிகிறது. அந்தத் தீவில் ஆட்சியாளர்கள் மனிதக் குரங்குகள். அவர்களின் (அவைகளின்) கீழே அடிமைப்பட்டு உழலுபவர்கள், மனிதர்கள். 'பயங்கரமான கற்பனை' என்று வர்ணித்தார் 'டாப் டென்'னைத் தொகுத்தளித்தவர்.

கற்பனையாவது மண்ணாவது! All men are apes; some are naked.

முடிந்து மூன்று வாரமான போதிலும் அந்த யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டி கண் முன்னேயே நின்று கொண்டிருக்கிறது.

பொதுவாக, வெற்றி பெற்றவர், வலைக்கு அந்தப் புறத்திலிருந்து வருவார். வாய்ப்பை நழுவ விட்டவர் இந்தப் புறத்திலிருந்து வருவார். இரண்டு பேரும் ஒப்புக்குக் கைகுலுக்கிய பிறகு அவர் பாட்டுக்கு அவர் போவார். இவர் பாட்டுக்கு இவர் போவார். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் வழக்கமாகக் காணுவது இப்படித்தான்.

ஆனால் யு.எஸ். ஓபனின் இறுதிப் போட்டியில் வில்லியம் சகோதரிகள் இருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொண்டு பரவசப்பட்டது நெகிழ்ச்சியான காட்சி; வென்றவர் வீனஸ், வீழ்ந்தவர் ஸெரினா என்பதை நம்ப முடியவில்லை. அக்காவும் தங்கையும் இப்படி இறுதிப் போட்டியில் மோதுவது 117 ஆண்டுகளுக்குப் பிறகு இதுதானாம்.

'என் தங்கையிடம் எனக்குக் கொள்ளைப் பிரியம்' என்றார் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் பேட்டியில். அப்படியானால் தங்கைக்கு விட்டுக் கொடுத்திருக்கக் கூடாதோ என்று கேட்கக் கூடாது. பிரியம் வேறு, போட்டி வேறு. Blood is thicker than water என்பதெல்லாம் சும்மா பழமொழிதான்.

வினோத்

மூன்றாவது சந்திப்பு

'தவறு செய்தவன் வருந்தியாகணும்...'

கவிஞரின் வரிகளைப் பாடிக் கொண்டிருந்தது டீக்கடை டிரான்ஸிஸ்டர். டீ குடித்தபடி வருந்திக் கொண்டிருந்தான் வாஞ்சி.

நேற்று வரை பார்த்துக் கொண்டிருந்த 'முனியாண்டி விலாஸ்' வேலை போய் விட்டது. அடுத்து என்ன செய்வது என்ற யோசனையில் இருந்தான்.

அதைத் தவறு என்று கூடச் சொல்ல முடியாது. டேபிளில் நடந்த குழப்பத்தில் சற்றே கவனக் குறைவாய் இருந்ததால் வந்த வினை.

அதைத் தன்னிடமே சொல்லியிருக்கலாம் வழக்கமாய் அங்கே சாப்பிட வரும் பெரியவர் தனபாலன். அல்லது சுயலாபம் கருதிச் சும்மா இருந்திருக்கலாம். இரண்டுமே செய்யாமல் முதலாளியின் கவனத்துக்குக் கொண்டு சென்றதுதான் தவறாகி விட்டது.

நேற்று –

தான் சாப்பிட்டு முடித்ததும் பில் கொண்டு வரும்படி வாஞ்சியிடம் சொன்னார் அவர். அவர் சாப்பிட்ட அயிட்டங்களுக்கு நாற்பது ரூபாய் வந்திருக்க வேண்டும். அதில் இருபது என இருந்தது. கடைசியாய் அவர் சாப்பிட்ட ஃபிஷ் ஃப்ரைக்கான தொகை அதில் சேர்க்கப்படாமல் இருந்தது.

அதை வாஞ்சியிடம் சொல்லியிருந்தாலே போதும். அப்படிச் செய்யாமல் பில் கொடுக்கும் போது முதலாளியிடம், "உங்க ஆளுங்களைக் கொஞ்சம் பார்த்து நடந்துக்கச் சொல்லுங்க..." என்றார்.

முதலாளி பதறினார். ரெகுலர் கஸ்டமரான அவர் சாப்பிட்ட பொருளில்தான் ஏதேனும் தவறு நேர்ந்து விட்டதோ – அல்லது பணியாளர்கள் எவராவது அவரிடம் பிரச்னை செய்து விட்டார்களோ என்ற எண்ணத்தில், "என்னாச்சு... சார்?" என விசாரித்தார்.

"பாருங்க... இருபது ரூபாய் குறைச்சுப் போட்டிருக்கு இந்த பில்லுல... ஏதோ நான் பழக்கப்பட்டவனா இருக்கறதால சாப்பிட்ட பொருளுக்குக் காசு கொடுக்காம போக மனசு கேட்கலே... உங்க ஆளுங்க இப்படி கவனக்குறைவா நடந்துகிட்டா உங்களுக்குத்தான் நஷ்டம்..." என்று முழுத் தொகையையும் கொடுத்து விட்டுப் போனார்.

முதலாளிக்குக் கோபம் வந்தது.

"ஏலேய்... யார்ரா இந்த பில் போட்டது...?"

ஒன்றும் புரியாதவனாய் வாஞ்சி வந்து நின்றான்.

"அப்படி என்னா உனக்கு வேலையிலே அக்கறையில்லாமப் போகுது. ஏதோ அவரு பெரிய மனுசராயிருக்கவே ஏமாற்றாம கொடுத்துட்டுப் போறாரு..." அப்போதாவது வாஞ்சி சும்மா இருந்திருக்கலாம்.

"ஐயா அந்த டேபிள்ல இன்னும் ரெண்டு பேரும் சாப்பிட்டுக்கிட்டிருந்தாங்க. அவரு முதலில் ஆர்டர் பண்ண அயிட்டத்தைக் கான்சல் செய்துட்டு வேறே கேட்டாரு. அவரு கேட்டதைப் பக்கத்து ஆளுக்குக் கொடுத்தேன். அப்போ நடந்த குழப்பத்துல இப்படியாகிடுச்சு..."

இவ்வளவு பேசியிருக்க வேண்டாமோ என இப்போது தோன்றுகிறது.

"ஏலேய்... கஷ்டப்படுற குடும்பமாச்சேன்னு உங்கொப்பன் முகத்துக்காக வேலை கொடுத்தா செய்த தப்புக்கு விளக்கம் கொடுக்கற.... போதும்... இன்னையோட நீ வேலையிலேர்ந்து நின்னுடு...."

மேற்கொண்டு அவனால் ஏதும் செய்ய இயலவில்லை.



கிளாஸைக் கொடுத்து விட்டு படி வாங்குவதற்காக இரயில் நிலையத்திற்கு அருகே இருந்த பெட்டிக் கடைக்குப் போனான் வாஞ்சி. அங்கேதான் அந்த விளம்பரம் கண்ணில் பட்டது.

'வேலைக்கு ஆட்கள் தேவை. உடனே அணுகவும்...' முகவரியைக் குறித்துக் கொண்டான்.

ஜோலார்பேட்டைக்கும், சென்னைக்குமாய்ப் போய் வந்து கொண்டிருக்கும் எக்ஸ்பிரஸ் ரயிலில் அமர்ந்திருந்தார் தனபாலன்.

"இட்லி... வடை... பூரி... பொங்கல்..." எனக் கூவியபடி இவனைக் கடந்து போனவனைப் பார்த்ததுமே புரிந்து போனது அது வாஞ்சிதானென்று.

'இவன் எங்கே இப்படி....?' அவனை அழைத்தார். இவரிடம் வந்தவன் தன்னிட

மானஸா

மிருந்த கூடையை ஆராய்ந்தபடியே 'என்ன சார்... வேணும்?' என்றான்.

"தம்பி.. நீ வாஞ்சிதானே...?"

அவரைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டவன், "சார்... நீங்க எப்படி இதுல வரீங்க...?" என்றான்.

தான் கேட்க வேண்டிய கேள்வியை அவன் கேட்டது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்குள் பெட்டியின் மறு முனையிலிருந்து அழைப்பு வர, "கொஞ்சம் இருங்க சார்... இன்னும் ஆறேழு பொட்டலம்தான் இருக்கு.. வித்துட்டு வந்துடறேன்.." என அகன்றான்.

எல்லாம் விற்று விட்ட மகிழ்ச்சியில் இவரருகே வந்து அமர்ந்தான். தனக்கென வைத்திருந்த பொட்டலத்தை எடுத்து, "பொங்கல்... வடை... சாப்பிடறீங்களா... சார்" என்றான்.

"வேணாம்பா... திருப்பத்தூரிலே இருக்கற என்னோட பொண்ணைப் பார்த்துட்டு வரேன்... அவ டிபன் கட்டிக் கொடுத்திருக்கா... அது கிடக்கட்டும். நீ ஏன் இந்த வண்டியிலே அலைஞ்சுகிட்டிருக்கே...



மறந்த பெயர்களும் மறக்காத பெயர்களும்!

எஸ்மி, முத்தையா.
ஈஸ்வர், காபரேல்
என்று ஏதேதோ
பெயர்களை வாசிக்க
முடிகிற
கல்லறைகளைச் சுற்றிலும்
லில்லியும், காட்டுரோஜாவும்
வாடாமல்லியும்
ஊமத்தம் பூக்களும்
பூத்துக்கிடந்தாலும்
சுடுகாட்டுப் பூக்கள்
என்றுதானே
சொல்லிவிட்டுப் போகிறோம்?

— தேன்மொழி

உன்னோட ஆவடி ஓட்டல் வேலை என்னாச்சு...?"

உண்மையைச் சொல்ல விருப்பமின்றி, "நிறுத்திட்டாங்க..." என்றான்.

"அப்ப பொழப்புக்கு என்ன செய்றே...?"

"இதோ பார்த்திங்களே... இந்த வியாபாரம்தான்.. இப்ப காட்பாடியிலே இருக்கேன்... ஒரு வீட்டிலே இதெல்லாம் செய்து கொடுத்து வித்துட்டு வரச் சொல்றாங்க... வருமானத்துக்கோ, சாப்பாட்டுக்கோ குறைச்சல் இல்லே. எந்த வண்டியிலை யாவது, எதையாவது நாள் முழுக்க வித்து கிட்டேயிருக்கேன்..."

"பரவாயில்லேப்பா. ஆண்டவன் ஒரு கதவை 'மூடினா இன்னொரு கதவைத் திறந்து விடுவான்னு' சொல்வாங்க. அது உன் விஷயத்துல எவ்வளவு நிஜமாகி இருக்கு... பார்த்தியா...?"

சாப்பிட்டு முடித்தவன் "நீங்க சொல்றத என்னால ஒத்துக்க முடியாதுங்க..." என்றான்.

"என்னப்பா... சொல்றே...?"

"பின்னே என்ன சார்... கதவைச் சாத்தி, மூடறதுக்குக் கடவுள் என்ன பெரிய ஓட்டல் வாசலிலே நிற்பாங்களே அப்படிப்பட்ட ஆளா.. சார்... அவர் என்னவோ எப்பவும், எல்லாத்தையும் திறந்துதான் வச்சிருக்கார். நாமதான் பார்த்து நுழைஞ்சிக்கணும்."

சமயங்களில் வாழ்க்கையில் மிகப் பெரிய தத்துவங்கள் மிகச் சாதாரண மனிதர்களிடமிருந்துதான் வெளிப்படுகின்றன.

"பெரம்பூர் வரப் போகுது. நான் இறங்கணும். என்னைப் பத்திக் கவலைப்படாம போங்க சார். இந்த வேலையே நாளைக்கு இல்லைன்னாலும் நான் வேற எதையாவது தேடிப் போய் பிழைச்சுடுவேன். உழைக்கணும்னு நினைக்கறவனை ஆண்டவன் கைவிட்டுட மாட்டாரு..."

அவன் இறங்கி போன பின்பும் தாக்கப்பட்டவராய் உறைந்து நின்றார் அவர்.

யாருக்குத் தெரியும்... அவன் சொன்னது போல் பின்னாளில் அவனுக்கு வேறு வாய்ப்புகள் கிடைத்து, அதில் உயர்ந்து, அவன் ஒரு பெரிய ஓட்டல் முதலாளியாக ஆகக்கூடும். அவனை அப்படியொரு நிலையில் சந்திக்க வேண்டும். அந்த 'மூன்றாவது சந்திப்பு'க்காக காத்திருக்கிறார் அவர். ○

ஒப்பனையை ஒப்புக்குத்தான் போட்டுக் கொள்வேன். புடைவை, சுடிதார் மட்டுமே அணிவேன். தேவையிருந்தால் மட்டுமே ஜீன்ஸ். அதிலும் 'இன்' பண்ணச் சொன்னால் நோ. இப்படி எந்த நடிகையாவது நிபந்தனை விதித்தால் கோடம்பாக்கத்திலோ, மும்பையிலோ மூட்டைகட்டி வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். ஆனால் சம்யுக்தாவர்மாவின் மேற்படி அவசரகால நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு, அவரை நம்பர் ஒன் நாயகியாகவும் கிரீடம் சூட்டியிருக்கிறது மலையாளப் படவுலகம்.

கேரளத்தின் கலாசார மையமான திரிச்சூரில் அம்மா, அப்பா ஒரே தங்கையோடு அரண்மனை வீட்டில் வாசம். அசப்பில் ஒரு இராஜகுமாரியைப் போல தோற்றமளிக்கும் சம்யுக்தா, 'பாலுசேரி ராரோத்துகோவிலகம்' அரசபரம்பரையைச் சேர்ந்தவர்.

ப்ளஸ் டூ முடித்து, எப்படியும் ஒரு 'டீச்சர்' ஆகிவிட வேண்டும் என்ற கனவோடு, ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்த சம்யுக்தாவை, 1998-ல் கண்டுபிடித்த சேட்டன்கள், 'சன் மனசு உள்ளவர்க்குச் சமாதானம்' படத்தில் நாயகியாக்கி விட்டார்கள். இந்த மூன்று வருடத்தில் இவர் நடித்த மொத்த படங்களே பத்து தான். ஆனால் திரிச்சூர் சாந்தி நகரில் இருக்கும் இவரது வீட்டிற்குத் தினசரி ரசிகர்கள் வந்து போகிறார்களாம்.

மோகன்லால், மம்மூட்டி என்று முன்னணி ஹீரோக்களோடு நடித்து விட்டாலும், கேரளத்தின் இடது சாரி இயக்குனரான லெனின் ராஜேந்திரன் இயக்கத்தில் வெளிவந்த 'மழா'(மழை) படத்தில் நடித்த பின்பே, சம்யுக்தாவின் மதிப்பு இன்னும் ஒரு படி உயர்ந்தது. உடன் தமிழ், கன்னடம், தெலுங்கு என்று தென்னக சினிமாக்களில் இருந்து அழைப்பு.

'மழா மாதிரி தரமான கதை என்றால் கூப்பிடுங்கள், இல்லையென்றால் ஆளை விடுங்கள்' என்று மறுத்து விட்டது இந்த மலையாள நிலவு. திருமணத்திற்குப்



வெள்ளித்திரையில் இளையராணி!

பிறகு, நிறைவேறாத தன் காதல் நினைவுகளை, அடிக்கடி அசை போட்டுப் பார்த்து, அதைக் கணவனிடமும் துணிச்சலாய்ப் பகிர்ந்து கொள்ளும் ஒரு இளம் டாக்டராக 'மழா' படத்தில் நடித்ததற்காக மாநில அரசின் விருது வாங்கிய சம்யுக்தா, "விரைவில் தேசிய விருது வாங்குவேன், பணம் சம்பாதிக்க நான் சினிமாவுக்கு வரவில்லை" என்று துணிச்சலாய்ப் பேட்டி தருகிறார்.

பிடித்த நடிகர் யார்? என்றால் ஒளிவு மறைவு இல்லாமல் அறுபது வயது நடிகரான திலகனைக் காட்டுகிறார். பிடித்த பெண்கள் என்று முன்னாள் நக்சல்பாரி அஜிதாவையும், அந்தோணியின் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் இன்னாள் பெண் அமைச்சர் கே. ஆர். கௌரியையும் குறிப்பிடுகிறார். வேறு என்ன பிடிக்கும் என்றால், மழை பெய்யும்போது கடலைப் பார்க்கப் பிடிக்குமாம். 'எல்லாம் ஓகே; 'தமிழில் எப்போது நடிக்கப் போகிறீர்கள்?' என்றால் "நடித்துக் கொண்டு இருக்கிறேனே" என்று 'ஷாக்' கொடுக்கிறார்.

அன்பாலயா பட நிறுவனம் தயாரிக்கும் "இயக்குனர் ஷாஜிகைலாஷ் அடுத்து இயக்கும் 'அசோகா' படத்தில் அர்ஜுனுக்கு ஜோடியாக நடிக்கிறேன். இந்தப் படத்திலும் ஃபேமிலி பாத்திரம்தான். ஆனால் பவர்புல் ரோல்" என்கிறார்.

"சினிமாவிற்கு ஏன் வந்தோம் என்று வருத்தப்பட்டதுண்டா?" என்றால் கொஞ்சம் வருத்தத்தோடு பதில் சொல்கிறார்.

"சினிமாவுக்கு அப்பா அம்மா ஓகே சொன்னாலும், என்னோட பள்ளித் தோழிகள் வேண்டவே வேண்டாம், அது மோசமான உலகம் என்று எச்சரிக்கை செய்தார்கள். இங்கே வந்த பிறகுதான் தெரிகிறது, அவர்கள் பயப்படுகிற மாதிரி இங்கே டயனோசரோ, காட்ஸில்லாவோ கிடையாது. எல்லோரும் இதயமுள்ள மனிதர்கள். திறமையை மதிக்கிறவர்கள். அவர்கள் சொல்லியும் நான் கேட்கவில்லை என்பதால், இப்போது என் பள்ளித் தோழிகள் யாரும் என்னிடம் இல்லை. ஐந்து வருட நட்பைச் சுலபமாய் வெட்டிக் கொண்டு போய் விட்டார்கள். சினிமாவிற்கு வந்த நான் இழந்தது இதைத்தான். இப்போது என் தங்கை 'சங்கமித்ராவுக்கு' நடிக்க வாய்ப்புகள் வந்தன. என்னைப் போல் அவளும், தன் தோழிகளை இழந்துவிடக் கூடாது என்பதால் மறுத்துவிட்டேன்" என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவரை, உசுப்ப நினைத்து, "மலையாள ஹீரோ பிஜுமேனனோடு உங்களுக்குக் காதல் என்று செய்தி வெளியானதே" என்றோம்.

"அவர் நல்ல திறமையான நடிகர். அவரும் நானும் மூன்று படங்களில் சேர்ந்து நடித்தோம். பரபரப்பான செய்தி தேவைப்பட்ட, ஒரு பாவப்பட்ட நிருபர் அப்படி எழுதி விட்டார் அவ்வளவுதான்."

சந்திப்பு: **விஷ்ணுவல்தாசன்**
படங்கள்: **கோழிக்கோடு பிரவீண்**

ஆசைக்கும் ஆஸ்திக்கும்!



டீவி நியூஸ் வரதராஜனின் யுனைடெட் விஷுவல்ஸ் நாடகம், வேதம் கே. கண்ணனின் கதை – வசன – இயக்கத்தில், சபா நாடக ரசிகர்களை மேடை நாடகங்கள் பக்கம் ஈர்த்திருக்கிறது. (இந்தப் பிராமணக் குடும்பங்கள் இன்னும் எத்தனை காலத்துக்குச் சபா நாடகங்களில் மேடைகளில் தோய்த்து அலசிப் பிழியப்படப் போகின்றனவோ!)

முதலில் வைரத்தோடு. அப்புறம் மாருதி கார். பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீடு (அடுத்த தெருதான்!) போகும் பெண் ஒவ்வொன்றாக கேட்டு வந்து நிற்கிறாள். சம்பந்தி அம்மாள், 'நீங்கள் நிறையவே செய்து விட்டீர்கள்; உங்கள் பெண்ணே வந்து கேட்டாலும் எதுவும் கொடுக்க வேண்டாம்' என்று சொல்கிறபோது, பிள்ளையைக் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறாரோ என்ற பெற்றோரின் குழப்பம்தான் நாடக முடிச்சு.

சந்தேகத்தைப் போக்க, தன் பிள்ளை – மருமகளைத் தனியே மும்பைக்குப் போய்த் தனிக்குடித்தனம் வைக்கச் சொல்லி விடுகிறார் சம்பந்தி.

ஆசைக்கொரு பெண்ணின் கதை இப்படி என்றால், ஆஸ்திக்கு ஒரு பிள்ளையின் கதை வேறு. பி.ஈ. படித்திருந்தும், பெரிய பாடகன் ஆகிப் பெயர் பெற வேண்டுமாம். ஆனால் டாலர் கனவுகளில் கரைந்து அம்மா அவனை வலுக்கட்டாயமாக அமெரிக்காவுக்கு வேலைக்காக அனுப்பி வைக்கிறாள்.

இரண்டு வருடத்துக்குப் பிறகு, சம்பந்தியம்மாளுக்கு மும்பை போய் மகனுடன் தங்கி விட வேண்டும் என்று பிடிவாதம். 'எங்கள் பெண் – உங்கள் பிள்ளையிடம் பேசி உங்கள் இரண்டு பேரையும் மும்பையில் அவர்களுடன் விட்டு விட்டு வருகிறோம்' என்று வாக்குறுதி தர, நால்வரும் மும்பை போகிறார்கள்.

அங்கே, வைரத் தோடு, கார் என்று டிமாண்ட் செய்தது பெண்ணேதான் என்ற உண்மை அதிர்ச்சி தருகிறது என்றால், 'நீங்கள் இங்கே நிரந்தரமாகத் தங்க முடியாது' என்று பிள்ளை (அதாவது மாப்பிள்ளை) சம்பந்தியிடம் முகத்திலடிக்கிற மாதிரி சொல்லுவது அடுத்த அதிர்ச்சி!

அமெரிக்கா போன பிள்ளை திடீரென்று திரும்பி வருகிறான், பெர்மூடாவும் ஒற்றைக் காதில் வளையமுமாக. அங்கேயே ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள பெற்றோரின் ஆசியை வேண்டுகிறான்.

'எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' என்று வரதராஜன் வெறுத்துப் போய் காமராஜரின் கொட்டேஷனைச் சொன்னதோடு நாடகம் முடிந்தது என்று பலரும் எழுந்து போக ஆரம்பித்தார்கள்.

'நீங்கள் இல்லாமல் கல்யாணம் இல்லை' என்று மறுபடி பிளேன் பிடித்து வந்து நிற்கிறான் பிள்ளை. அவன் எப்படி மனசு மாறினான் என்பதற்கு ஒரு சின்ன சம்பவம் கூடக் கிடையாது!

தான் கருவுற்றிருப்பதாகவும், எல்லாரும் வந்து அவளுடன் இருக்க வேண்டும் என்றும் மும்பையிலிருந்து பெண் ஃபோன்!

எத்தனை நன்றாக வசனம் பேசி, இயல்பாக நடித்து என்ன! சபா நாடகம் என்றால் கடைசியில் 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது அல்லாமல் வேறு அறியாத' ஓர் ஆன்ட்டி-கிளைமாக்ஸ் ரொம்ப ரொம்ப அவசியம்' என்று, எப்படி 'வேதம்' கண்ணனுக்குத் தோன்றிற்றோ, யாமறியோம் பராபரமே!

— சித்தார்த்

'சி'க்'கென்று நிலைப்படியில் எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்ட நாலுக்கு மூணு அடி (சென்ட்டி மீட்டர் வேணாம்டா சாமி) ஃபாரின் மெகா சைஸ் டீவியை, வெளியே இருந்து தாமு உட்பட நான்கு பேர் தள்ள, வீட்டுக்குள்ளிருந்து ஒரு பக்கம் குடும்பத் தலைவர் சீனிவாசனும் மகள் வத்சலாவும் சற்றுத் தளவி ராமநாதன் தாத்தாவும் இழுக்க – ம்ஹூம்... ஊசிமுனை அளவுக்கும் வாசல்விட்டு நகராமல், அந்தரத்தில் அடம் பிடித்தது டீவி.

படம் போடுறான்... குடும்பக் கதை" தன் ஒரே தங்கையின் ஞாபகத்தில் கண் கலங்கி சொன்னார் சீனிவாசன். அனைவரின் ஆசையையும் அலட்சியம் செய்து – அந்த ரத்தில் அசையாமல் இருந்த அந்த ராட்சத டீவியைப் பார்த்து ஆத்திரத்தின் உச்சியைத் தொட்டான் தாமு.

"தாத்தா... சும்மா இருக்க மாட்டீங்களா... இதை உடைக்கலாமான்னு தோணுது. உள்ளேயும் போகாம வெளிலேயும் வராம... ச்சை...!"

ஒடுங்கப்பா..!

பேசாமல் அதே இடத்தில் ஒப்புக்கு, டீவிக்குக் கீழே ஸ்டாண்ட்டைப் போட்டுவிட்டு வேறு பக்கம் தலைவாசலைப் பிரதிஷ்ட்டை செய்வது உத்தமம்!

டாபர்மென் சீஸரும் என்னவோ ஏதோவென்று 'லொள்லொள்'லை மிஷின் கன்னாய்ச் சீற, ரொம்பவும் எரிச்சலாகி வியர்வையைத் துடைத்தான் தாமு. "இருந்தாலும் ரொம்ப பெரிசு...!"

"தாமுவின் தங்கை வத்சலா நேரந்தெரியாமல் சிரித்தாள். "அண்ணா... மதியம் பன்னிரண்டுக்கு, விஜய்யில் விஜயகாந்தின் புலன்விசாரணை போடறாங்க..." அவள் சொல்லும்போதே பக்கத்திலிருந்த தாத்தா ராமநாதன் – தம் கைத்தடியால் டீவியின் மேல் 'டொக் டொக்'கென்று நீதிபதி மாதிரி தட்டினார்.

"அடேய் தாமு... இரண்டு முப்பதுக்கு 'சன்'லே ஹரிதாஸ் போடுறாங்களாம்..." தாத்தாவின் மனத்தில் எம்.கே.டி 'வாழ்விலோர் திருநாள்' பாடி – வெள்ளைக் குதிரையில் போனார்.

"அதெல்லாம் வேணாம்... பாசமலர்

விஜயபாரதி

அந்த இக்கட்டான சூழலில் – தள்ளலில் இருந்த ஒருவர், ஒரு கொழ கொழா யோசனை சொல்ல – பத்தாவது நிமிடம் அது நிறைவேற்றப்பட்டது. சரியாக அரை லிட்டர் விளக்கெண்ணெயை நிலைப்படியை ஒட்டி டீவி உரசும் இரண்டு பக்கமும் மேலே, கீழே, தரை, நின்றவர்கள் கைகால் எல்லாம் ஊற்றியதில், ஒரே விளக்கெண்ணெய் கிரீடை!

இரண்டு கைகளால் தள்ளியவர்கள் – இப்போது ஒரே கையால் தள்ளினர். மற்றொரு கை, 'அவரவரின் மூக்கை இறுக்கிப் பிடித்திருந்தது.

"ம்... இப்ப எல்லாரும் ஒரே மூச்சா தள்ளுங்க..."

"ஒரே மூச்சில்தானே தள்ளுறோம், விட்ட மூச்சை வாங்கவா முடியும்...? ங்க்சுப்பா!"

"சரி... தள்ளுங்க..."

"கண்டாங்கி சேலை வாங்கித் தாரேன்... கண்ணாத்தா உனக்கு... ஏலேலோ ஐலசா... ஐலசா..."

"யோவ்... யாருய்யா அது...?"

"இப்படிப் பாடிக்கிட்டே தள்ளுனாத் தான் தம்பி வசதிப்படும்..."

டீ.வியை ட்ரைசைக்கிளில் கொண்டு வந்த முண்டாசுக்காரர் சொன்னதும் தாமு தவிர – எல்லோரும் ஆமோதிக்க, மறுபடி அதே பாட்டு ரீவைண்டிங் ஆனது.

"கண்டாங்கி சேலை வாங்கித் தாரேன்...

கண்ணாத்தா உனக்கு...'' உலகத் தொழிலாளர்கள் தின பலத்தையெல்லாம் ஒன்று திரட்டித் தள்ள – உள்ளே இருந்தவர்கள் இழுக்க –

'தொபுக்கடீர்ர்ர்...!' அத்தனைபேரையும் ஜில்லென்று இழுத்துக் கொண்டு டீ.வி - கமலின் விக்ரம் பட அக்னி புத்திரனாய் வீட்டுக்குள் பாய்ந்ததில் பிடித்திருந்தவர்கள் அப்படியே போய் எதிரில் இருந்த பெரிய சோபாவில் உட்கார – அவர்களின் மடியில் டீவி பந்தோபஸ்தாக உட்கார்ந்துகொண்டது. ஓரமாய் டீ.வியைப் பிடித்திருந்த ராமநாதன் தாத்தாதான் பாவம். சூப்பர் சுப்பராயனாக ஒரு அந்தர்பல்டி



அடித்து, உருண்டு சுவரில் 'டணார்' என்று மோதி - மெதுவாக நடுங்கியபடி எழுந்து உட்கார்ந்தார்.

கண்கள் ஒரு வினாடி நிலை குத்திப் பார்த்த பின்பு இலேசாக அசைந்தார். நல்லவேளை உயிர் இருந்தது! ஹரிதாஸ் ஞாபகந்தான் அடியோடு நாசமானது!

“தாத்தா... பார்த்து பார்த்து...” எல்லாரும் கோரஸில் கத்தியபோது கிச்சனிலிருந்து பார்வதம்மாள் கரண்டியோடு வந்தவள்,

வீடெல்லாம் கொழ கொழவென்று இருந்ததைக் கவனிக்காமல் கால் வைத்து - பனிச்சறுக்கு விளையாட்டில் 'சர்'ரென்று போய், ஜன்னலைப் பிடித்துக்கொண்டாள்.

“ஏண்டா தாமு... இந்த டீவியை வீட்டுக்குள்ளாற கொண்டு வர்றதுக்கா இந்த ரகளை...?''

“இதாம்மா டீ.வி...? பீரோம்மா...!'

டீ.வியைப் பிடித்தபடி சோபாவில் உட்கார்ந்திருந்த முண்டாசுக்காரர் சொன்னதும் – புன்னகையோடு வழிந்தாள் பார்வதம்மாள்.

''இல்லப்பா... இது டீ.விதான்... லாஸ்ஏஞ்சல்ஸ்ஸில் இருக்கிற என்னோட

> ''தலைவர் சரியான தொலைநோக்குப் பேர்வழி!''
> ''என்ன விஷயம்?''
> ''கண்டனப் பேரணியை அண்ணா சாலைல துவக்கி ஜி.ஹெச்சுல முடிச்சுட லாம்ங்கறாரே!''
>
> – அம்பைதேவா

தம்பிதான் அனுப்பி வெச்சான். அங்கே அவன் பில்கேட்ஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறான். இதைவிட பெரிசெல்லாம் இருக்காம்...''

பெரிசு என்ற சொல்லில் டீ.வியைப் பிடித்திருந்தவர்கள் தற்போது அலர்ஜி ஆனாலும் 'அப்படி என்னதான் இந்த டீ.வியில் விசேஷமாகத் தெரியப் போகிறது...?' என்ற ஆவலில் அதைத் தடவிப் பார்த்துக்கொண்டனர்.

பழைய ஒனிடாவை ஓரங்கட்டிவிட்டு – மெகா சைஸ் நடுஹாலில் பெரிய ஸ்டீல் மேஜையில் கம்பீரமாய் ஆரோகணித்தது. வீடுதான் ஏதோ விசேஷம் போல தெரு சிறிசுகள், பெரிசுகள் என்று ஒரு கணிசமான கூட்டத்தோடு கலகலத்தது. தெருவில் போவோர் வருவோர் வேறு வீட்டிற்குள் தலையை நீட்டி பயமுறுத்தினர். தன்னி உட்கார இடமில்லாததால் டீவியின் பக்கத்தி லேயே ஸ்டூலில் உட்கார்ந்தபடி ரிமோட் டைத் தாமு தட்டியதில், டிஸ்கவரி உயிர் பெற்று - மலையில் வெடி வைத்து தகர்க் கப்பட்ட பெரிய பாறாங்கல் உருண்டு விழும் பின்னணி ஓசையில் பெரி...ய்...ய காண்டா மிருகம் ஓடி வந்தது.

ஓரத்தில் கட்டப்பட்டிருந்த டாபர் மென் சிஸர் பார்த்ததும், லொள்லொள்ளென்று ரொம்பவும் ஓரத்தில் பதுங்கிக் கொண்டது.

அடுத்து விஜய் –அஜீத் - ரஜனி - விஜய காந்தின் படங்களின் விதவிதமான காட்சி கள். ஒவ்வொருவரின் மண்டையும் குளோ சப்பில், விளைச்சலில் உலகளவில் பரிசு பெற்ற பெரிய பெரிய பூசணிக்காய் மாதிரி யும் – சிரித்தபோது பல்வரிசை உடைத்த அரைத்தேங்காய் வரிசையாகவும் பயமுறுத்த, கவுண்டமணி செந்தில் காமெடி-வடிவேலு தன் பெரியவாயைப் பெரிதாகத் திறந்து, பல் குத்திய குச்சி - கடப்பாரையாய்த் தெரிய... அதை அப்படியே இருக்கச் சொல்லி, ஹேண்ட்ஸ் அப் போஸில் கூட்டத்தின் ஒரு ஓரத்திலிருந்து கையைத் தூக்கிக் காட்டினார் சீனிவாசன்.

''ஏண்டா தாமு... கரண்ட் செலவு ரொம்ப இழுக்குமோ...?'' என்றாள் சத்தமாக பார்வதம்மாள்.

"ஏண்டி கவலைப் படுறே? மின்சார வாரி யத்தில்தானே உன் தூரத்து மாமா ஒருத்தர் வேலை பார்க்கிறார். இனிஅவரை நெருக்கத்தில் கண்டு கொண்டால் போச்சு" என்றார் சீனிவாசன்.

''அதிகமான கரண்ட் செலவானால், ஏதோ ஒர்க்ஷாப் ஓடுதுன்னு... யாராவது அதிகாரிங்க...'' பார்வதாம்மாள் பதறும் போதே- உண்மையில் ஒரு போலீஸ்காரர் வீட்டிற்குள் தலை நீட்டினார்.

தன் சர்வீஸில் பெரிய கேஸ் பிடித்த மாதிரி உதட்டில் ஓர் இறுக்கம். வகையாக மாட்டிக் கொண்ட பாவனையில் கைகால் களில் பார்வதம்மாளுக்கும் சின்ன நடுக்கம்.

டீ.வியில் நாட்டின் அக்கிரமங்களை விளாசிக் கொண்டிருந்த விஜயகாந்தைப் பார்த்த போலீஸ்காரர், டீ.வியை விட கண் களைப் பெரிதாக்கினார். "அடேங்கப்பா...! எவ்வளவு பெரிசு...! என்னடா கூட்டமா இருக்குதேன்னு பார்த்தேன்... சரி சத்தத்தைக் குறைங்க..." அடுத்து விஜயகாந்த் போலீஸ் டிபார்ட்மெண்ட்டை சோப் இல்லாமல் துவைக்கும் காட்சியைக் கண்டதும் – காணாதவர் போல் வெளியே போனார் போலீஸ்காரர். அவர் போனதும் திடுதிடு வென்று பக்கத்து வீட்டு காலேஜ் லெக்சரர் – கூட்டத்தை விலக்கி வீட்டிற்குள் ஓடி வந்தார்.

"சீனிவாசன் சார்... இப்படி டீ.வி – வரப் போறதா சொல்லவே இல்லையே – சப்தம் டி.டி.எஸ் மாதிரின்னா இருக்கு. எங்க டீ.வியைப் பார்த்தாலே எரிச்சலா இருக்கு. ஒண்ணு செய்யுங்கோ. சாயந்தரம் ரெடியா இருங்க. சி.டி. கேசட் போட்டு இந்த டீப் புளு சீ... டைட்டானிக், அனகொண்டா எல் லாம் இதுல பார்ப்போம்... இதுலதான் பார்க் கணும். ஹையா...!"

நாளடைவில் நொந்தும் வெந்தும் போனார்கள் சீனிவாசன் குடும்பத்தினர். நேரத்துக்குச் சாப்பிட முடியாமல் – அப் படியே சாப்பிட்டாலும் அழையா விருந் தாளிகளுக்கும் கொடுத்து நேரத்துக்குத் தூங்கவும் முடியாமல், காபி சப்ளையி லிருந்து டிபன் வகையறாவோடு – முழுச்

சாப்பாடுவரை தாறுமாறாய்ப் பரிமாறியதில் அரண்டு - மிரண்டு போனார்கள். கூட்டத்தினர் அவரவர்க்குப் பிடித்த படங்களைச் சொல்லி - காச்மூச்சென்ற ரகளையில் வாண்டுகள் விசில் அடித்துக் கைதட்டி, கிட்டத்தட்ட வீடு - ஒரு மினி தியேட்டர் மாதிரி ஆனது. சாட்சி- வீட்டுப் பக்கத்தில் கடலை மிட்டாய், முறுக்கு, பாப்கார்ன் என்று நொறுக்கு சங்கதியுடன் நடமாடும் வண்டி ஒன்று பிரசன்னமாயிருந்தது. வெளியே எட்டிப் பார்த்த தாமு வெலவெலத்துப் போனான். நிலைமை நீடித்தால் காபி பார், ஸ்நாக் பார் என்று 'பார்கள்' பல முளைத்தாலும் ஆச்சர்யமில்லை. கதவைச் சாத்தலாம் என்றால் எல்லாரும் தெரிந்தவர்கள். வீட்டின் பழைய அமைதி அந்தர்தியானமானது. இந்தச் சூழ்நிலையில்தான் 'அது' நடந்தது.

அந்த மெகா சைஸ் திடீரென்று ஒரு நாள் புகையைக் கக்கி - ஸ்...ஸ்...ஸ் என்று இரைச்சலோடு பளிச் பளிச்சென்று சில பல மின்னல் வெட்டி உயிரைச் சுத்தமாய் நிறுத்திக்கொண்டது. தனக்குத் தெரிந்த கரண்ட் வித்தையெல்லாம் செய்து பார்த்த தாமு, உதட்டைப் பிதுக்கிவிட்டு வெளியே போனான். மறுபடி திரும்பி வரும்போது அவனோடு கையில் டூல்ஸ் பேக் - அரைத் தாடி, கண்ணாடியுடன், டோர் சர்வீஸராக ஓர் இளைஞரும் வீட்டிற்குள் கால் வைத்தார். எங்கிருந்துதான் மோப்பம் பிடித்ததோ சீஸர்! லொள்... லொள்...லொள்!

இளைஞர் காலை வெளியே எடுப்பதற்குள் 'டர்'ரென்ற சப்தம். பேண்டின் கால் பகுதி கால்மீட்டர் துணியைக் காணோம்!

அது சீஸரின் வாயில் இருந்தது!

"சீஸர்...! விடுடா... விடுடா..." தாமுவின் கத்தலுக்கு எப்படியோ கீழ்ப்படிந்து இளைஞரை விட்டு விட்டு - கிடைத்த வரை லாபம் என்பது போல் துணியுடன் மூலைக்குத் தாவியது சீஸர்.

"நாயிருக்குன்னு சொன்னீங்க தாமு...?" நடுங்கிப் போய் காலைத் தடவினார் இளைஞர். நல்லவேளை கடி எதுவும் இல்லை.

"எப்பவும் கட்டிப் போடுவோம்... யாரோ அவுத்து விட்டுட்டாங்க போலிருக்கு..." ஒரு வழியாய்ச் சமாதானம் ஆன இளைஞருடன் வீட்டிற்குள் நுழைந்த தாமு டீ.வியைக் காட்டினான்.



ஒரு மணி நேரம் ஆராய்ந்துவிட்டு " ஐசியும் போச்சு... கண்டன்ஸரும் வீக்கா இருக்கு. இந்த ஏரியாவிலே ஓவர்லோட் கரண்ட் திடீர்னு சப்ளையாகும் போலிருக்கு" என்று சொல்லியபடி ஒரு பேப்பரில் எழுதி தாமுவிடம் நீட்டினார் இளைஞர். "ஸ்பேர் பார்ட்ஸ் இங்கே கிடைக்காதுன்னு நினைக்கிறேன். எதுக்கும் வெளிநாட்டுலே இருக்கிற உங்க மாமாவுக்கு லெட்டர் எழுதி, சாமான்களை வரவழையுங்க... அப்புறமா எனக்குத் தகவல் கொடுங்க..."

இளைஞர் போனதும் டீவியைச் சுற்றி சீனிவாசன் குடும்பத்தினர் கூடினர்.

நேற்றுவரை தெருவையே ஒரு கலக்கு கலக்கிவிட்டு இன்று கப்சிப் என்று பரம சாதுவாய் இருந்ததைப் பார்த்தபோது பளிச்சென்று ஒரு நினைவு வர, வீட்டைக் கண்களால் ஒரு ரவுண்டு துழாவினர். ஒரு ஈ காக்கா இல்லாத அமைதி. சில நாட்களுக்கு முன்பு காணாமல் போன அமைதி மறுபடி வீடு தேடி வந்திருந்தது. தாமு அந்த பெரிய டீ.வியை, பெரிய சால்வையைப் போட்டு மூடினான்.

''பர்வதம்... இப்பத்தான் வீடு, வீடா இருக்கு'' சந்தோஷமாய்ச் சொன்னார் சீனிவா சன். தாமுவுக்கு எதையோ இழந்த ஏக்கம் இருந்தாலும்... ஒரு நிம்மதி எட்டிப் பார்க்க, ஸ்பேர்பார்ட்ஸ் சீட்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு பேண்ட்டின் பின் பக்க பாக்கட்டில் வெறுப்பாய்ச் செருகினான். மூலையில் ஒதுங்கி இருந்த பழைய ஒனிடாவைத் தூக்கி - தூசி தட்டி துடைத்தான். ஸ்டாண்டில் உட்கார வைத்து உயிர் கொடுத்தான். அதே டிஸ்கவரி சானலில் சிங்கம் ஒன்று கர்ஜித்து பாய்ந்து வந்தது.

சீஸரும் பயப்படவில்லை. கூட்டமும் இப்போது இல்லை. ○

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

உலகமாக விரிந்து நிற்கிறான் பரமாத்மா; இவ்வளவும் அவன் ஸ்வரூபம். அதனால் அவனுக்கு 'விச்வம்' என்கிற நாமம். விச்வஸ்ய நம: என்று மந்திரம்– இது ஒரு விளக்கம். உபநிஷத் 'விச்வம் பரம்' என்று காட்டுவதனாலே விச்வ சப்தத்தால் பரவாசுதேவனே காட்டப்படுகிறான் என்றும் தெரி கிறது.

அவனே பூத பவ்ய பவத் பிரபு: –வஷட்கார: என்று அனைத்தை யும் தன் வசத்திலே உடையவ னாய் இருக்கிறான்.

பாஞ்சராத்ர ஆகமத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது இந்த விஷயம்: பூத பவ்ய பவத்பிரபு: – காலத்தினால் அடக்க முடியாத எம்பெருமான் உயர்ந்த திருப்பாற் கடலிலே சயனித்துக் கொண்டி ருக்கிறான்.

விஷ்ணு: என்கிற சப்தமா னது அவதாரத்தைக் காட்டுகிறது.

ஏஷ: நாராயண ஸ்ரீமான் என்ற புராண ஸ்லோகத்தை நன்றாக கவனிக்க வேண்டும்.

ஏஷ: என்றால் அருகில் இருப் பவன். இதோ இருந்து கொண்டே இருக்கிறானே இந்த கிருஷ்ணன், அந்த நாக பரியந்தத்தை விட்டு விட்டு அந்த ஸ்ரீமன் நாராயண னான எம்பெருமான்... அவன் தான் மதுரா நகரிலே வந்து பிறந் தான்' என்கிறது.

பூத க்ருத் பூத ப்ருத் பாவ: என்பது உயர்ந்ததான அவனு டைய அர்ச்சாவதார சௌலப் யத்தைக் காட்டுகிறது.

தானே வெளிவந்து தன்னைக் காட்டுகிறான் அர்ச்சாவதார காலத்திலே.

பூதாத்மா பூத பாவன: – அந்தர்யாமியாய், சர்வ சராசரங் களுக்கும் அந்தர்யாமியாய் பகவான் எழுந்தருளியிருக் கிறான்.

எல்லா இடத்திலேயும் பகவான் வாஸம் பண்ணுவதாலே அப்படிப் பட்ட நாராயணனை யார் விபு என்று நினைக்கிறார்களோ, விபு என்ற யக்ஞத்தால் யார் ஆராதிக்கிறார்களோ, (அச்வமேத யக்ஞத்துக்கு விபு என்று பெயர்) எங்கும் பரந்து காணப்படும்படியான அந்த எம்பெரு மானை யார் ஆராதிக்கிறார்களோ அவர்கள் அத்தனைபேரும் 'விபு' ஆகிறார்கள்!

இப்போது நாம் ஞான சங்கோசத்தோடு சம்ஸார வாழ்க்கையில் இருந்து கொண்டி ருக்கிறோம். பரிமிதமான வரையறுக்கப் பட்ட ஞானம்.

அதுமட்டுமல்ல... ஒருத்தருக்கு இருக்கிற ஞானம் இன்னொருத்தருக்கு இருப்பதில்லை. "ஓஹோ! அவரா? மஹா ஞானி ஆயிற்றே!" என்கிறோம் ஒருத்தரை. இன்னொருத்தர் அறிவிலியாய் இருக்கிறார். இன்னும் ஒருவர் கொஞ்சம் நடுத்தரமாய் இருக்கிறார் – இப்படியெல்லாம் வித்தியாசம்.

ஆத்மா, அப்படியில்லை – ஸ்வரூபத்தில் ஒன்றாகவே இருக்கும். ஒரு ஆத்மாவைப் பார்த்தால் மற்றொன்றைப் பார்க்க வேண் டாம். ஆனால் சுவபாவத்தினால் வேறு பட்டிருக்கும். அதனுடைய ஞானம் சுவாபாவிக ஞானம். அந்த ஞானத்தின் காரணமாக விசேஷமான விஷயங்களைத் தெரிந்து கொள்கிறது ஓர் ஆத்மா. மற் றொன்று எதுவுமே தெரியாமலிருக்கிறது.

கூரத்தாழ்வார் என்ற ஆசார்யார் ஸ்ரீ ஸ்தவம் என்று மஹாலக்ஷ்மியைக் குறித்து ஸ்தோத்திரம் எழுதினார். அவ்வளவு உருக்க மாக இருக்கும் அந்த ஸ்தோத்திரம். ரொம்ப அழகான வார்த்தைகள்.

'லோகே ப்ருஹஸ்பதி வனஸ்பதி' என்ற வாக்கியம் அதிலே வருகிறது.

லோகத்திலே ஒருத்தரைப் பார்த்து பிருஹஸ்பதி என்று சொல்கிறோம். 'பிருஹஸ்பதி சமோ புத்யா!'– 'பிருஹஸ்பதிக் குச் சமமான ஞானம் படைத்தவன் ராமன்' என்கிறார் வால்மீகி.

நல்ல தெளிவான ஞானம் பெற்றவர் தேவ குருவான ப்ருஹஸ்பதி.

வனஸ்பதி...?

வனஸ்பதி என்று மரங்களுக்குப் பெயர். 'நிற்கிறது பார் மரம் போல!' என்கிறோம். கூரத்தாழ்வாரும் அப்படியே சொல்கிறார்! ஞானமின்றி இருப்பவர்களைத்தான்

வனஸ்பதி என்று சொல்கிறார்.

இந்த இரண்டு வார்த்தைகளுமே வேத்தில் வருகிறபோது ஒரே ஸ்வரத்தில் வருகின்றன. இந்த இரண்டு மட்டும் வேதத்தில் எந்த இடத்திலே வந்தாலும் ஒரே மாதிரி ஸ்வரத்தில்தான் வரும்.


ஆனால் ஸ்வரம் ஒன்றுதான் என்றாலும் அர்த்தத்தில் ஏகப்பட்ட வேறுபாடு!

வனஸ்பதி என்றால் ஒன்றும் தெரியாத மரம்; பிருஹஸ்பதி என்றால் புத்திசாலி!

இவ்வாறு ஏன் சொல்கிறோம்- ஒருத்தரை பிருஹஸ்பதி என்றும் மற்றவரை வனஸ்பதி என்றும் எவ்வாறு பிரிக்கிறோம்? 'அன்னை உன்னுடைய கடாக்ஷத்தின் மாறுபாட்டினாலேதான் அது அமைகிறது' என்கிறார் கூரத்தாழ்வார் ஸ்ரீ ஸ்தவத்திலே.

மஹாலக்ஷ்மி எங்கே கடாக்ஷிக்கிறாளோ அங்கே ஞானம் பிரகாசிக்கிறது. எங்கே

31



அவன் பார்வை இல்லையோ அங்கே குறைவாய்க் காணப்படுகிறது! அந்த மஹாலக்ஷ்மியோடு சேர்ந்திருக்கும்படியான எம்பெருமானை யாரெல்லாம் நினைக்கிறார்களோ, அவன் எங்கும் நிறைந்துள்ளான் என்பதை யாரெல்லாம் உணர்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் விபுத்துவத்தைக் கொடுக்கிறான் பரமாத்மா. அவனைப் போலவே, சத்யகாமத்துவத்தில் ஆரம்பித்து, சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்ட எண் குணங்களும் இந்த ஆத்மாவுக்குச் சித்திக்கிறது.

வைகுண்டத்திலே எப்படி எம்பெருமான் விபுவாய் எங்கும் பரந்து இருக்கிறானோ, அந்த மாதிரி சர்வத்தையும் கிரஹிக்கும்படியான சர்வக்ஞத்வம் என்கிற உயர்ந்த குணம் ஆத்மாவுக்கு ஏற்படுகிறது.

எம்பெருமானை யக்ஞத்தினால் யார் ஆராதிக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேரும் விபுவாக ஏற்றமடைகிறார்கள்.யக்ஞ சதஸிலே வந்து அமர்கிறார்களே... அவர்கள் அத்தனை பேரும் தக்ஷிணைக்கு உரியவர்கள். தக்ஷிணை பெற்றுக் கொள்ளாமல் யாரும் போகக் கூடாது.

பகவானும் ஒரு யக்ஞம் பண்ணுகிறான். சரணாகத ரக்ஷணம் என்பதே அந்த யக்ஞம். அவனைத் தவிர யாரும் பண்ண முடியாது அந்த யக்ஞத்தை! அப்படிப்பட்ட யக்ஞத்தில் எல்லோருக்கும் தக்ஷிணை கொடுக்கிறான் பரமாத்மா. - மோக்ஷமாகிற தக்ஷிணை. நாமெல்லாம் சாதாரண இரும்புபோலத்தான். துரு பிடித்துக் கிடக்கிறோம். ஆனால் சரணாகதி என்று பகவானை அடைய, அவன் நம்மைத் தங்கமாக்கி ஆபரணமாக்கி அணிந்து கொள்ளுவான்.

அருள்வாக்கு

ஈச்வர பக்தியாகட்டும், குருவிடம் விநயமாகட்டும் இவை எதற்கு என்றால் படிக்கிறவனின் அஹங்காரத்தை அடக்குவதற்குத்தான். அஹங்காரம் போகாத வெறும் படிப்பு ஆபத்தைத்தான் உண்டாக்கும். மதாநுஷ்டானம், ஈச்வர பக்தி, குரு ஸேவை ஆகியவற்றுடன் கூடிய ஸரியான கல்வி ஒருத்தனுக்கு இயற்கையாக உள்ள அஹங்காரத்தைத் தேய்த்து அகற்றி சுத்தப்படுத்தும்; மாறாக இவை இல்லாவிட்டாலோ அதே கல்வி, "நான் எவ்வளவு படிச்சிருக்கேன் பார்த்தியா?" என்று அஹங்காரத்தைத் தலைக்கேற்றி விடுகிறது. வித்யா கர்வம் என்றே சொல்வார்கள்.

வெளிப்பார்வைக்கு அநுஷ்டானம், பக்தி,

ஆகையினாலே, அவனை உணர்ந்து, அவன் விபு அவன் பிரபு, அவன் வீரமுடையவன், சர்வத்தையும் தரிக்கிறவன், அவனிடத்தில் எல்லாமும் இருக்கிறது என்று அறிபவன் தேஜஸ்வீயாகவும் யஜஸ்வியாகவும் பிரும்மவர்ச்சஸ்ஸாகவும் இருக்கிறான்.

பகவானை யக்ஞத்தினால் ஆராதிப்பதனாலே இவை எல்லாமும் கிடைக்கிறது. உலகத்துக்கும் க்ஷேமம் கிடைக்கிறது. மனித வர்க்கம் மட்டும் அல்ல, பிராணி வர்க்கங்கள், தாவரம், சர்வசராசரங்களும் ஆனந்திக்கின்றன - இதை வேதமே சொல்கிறது!

உபநிஷத்தும் சொல்கிறது. யக்ஞத்தினால் அவனை ஆராதிப்போமானால் ஐந்து



"அந்த டாக்டருக்கு ரொம்ப கிண்டலா போச்சு!"
"எப்படி?"
"கண்ணுல பூ விழுந்துச்சுன்னு சொன்னா எத்தனை முழம்னு கேக்கறார்!"

– எஸ். தமிழ்மணி

"எழுத்தாளரா இருந்துகிட்டு எதுக்கு 'ஜாக்கி'னு புனைபெயர் வச்சுருக்கீங்க?"
"அது தான் என்னோட கற்பனைக் குதிரையின் விருப்பம்!

– அம்பை தேவா





குருஸேவை நன்றாயிருந்தால் போதாது. ''பக்திமானாக, அநுஷ்டாதாவாக இருந்தும், 'தான் வித்வான்' என்கிற தாட் பூட் இருக்கிறதே!'' என்று பிறர் சொல்லும்படி இருப்பவர்களுண்டு. அநேக பண்டிதர்கள் இப்படித்தான் ஆஸ்திகராகப் பார்வைக்கு இருந்து கொண்டும், தான் அறிவாளி, படிப்பாளி என்பதில் அஹங்காரத்தவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் நிலையில் தம்மை வைத்துக் கொண்டுதான் தாயுமான ஸ்வாமிகள் கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்! என்று ஒரு தரத்துக்கு இரண்டு தரமாகச் சொல்லி, கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை என் சொல்கேன்? என்று புலம்பி வைத்து விட்டுப் போயிருக்கிறார். வெளிமட்டத்தில் மட்டுமில்லாமல் உண்மையான உள்ளூறிய பக்தியோடு, ஸமய ஆசரணையோடு, குரு விச்வாஸத்தோடு கல்வி பயின்றால் இப்படி இருக்காது. கல்லாதபேர் பொதுவாக ஓரளவுக்கு நல்லவர்களாயிருக்கிறார்களென்றால், இப்படி உண்மையான அர்த்தத்தில் கற்றவர்களோ மஹா உத்தமர்களாகவே இருப்பார்கள்.

கல்லாத காட்டுவாஸியைவிடப் படித்தவர் அதிகம் தப்பில் போவதற்குக் காரணம் படிப்புமுறை அஹங்காரத்தை அதிகமாக்குவதாயிருப்பதுதான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

இடங்களிலே அவன் இருப்பதை நாம் தெரிந்து கொள்ளலாம் என்று காட்டுகிறது.

ஸ்வாமி தேசிகன் சொல்கிறார்: "ராமாவதாரத்திலே அவன் ஜங்கம பாரிஜாதன். க்ருஷ்ணாவதாரத்தில் அவன் தாவர பாரிஜாதன்.

ஜங்கமம் என்றால் நடந்து போவது. ஓரிடத்தை விட்டு ஓரிடம் நடந்து சென்று எல்லா இடத்திலேயும் சஞ்சாரம் பண்ணினான். அப்போது ஜங்கம பாரிஜாதனாக, கல்பக விருக்ஷமாக இருந்தான். இப்போது, ஸ்ரீரங்காதி சமஸ்த க்ஷேத்திரத்திலேயும் எப்படி இருக்கிறான்...? தாவர பாரிஜாதனாக இருக்கிறான். ஒரு இடத்தைவிட்டுப் பிறழாமல் அங்கேயே இருக்கிறான்.

'நம்மைத் தேடி வருபவர்கள் எப்போது வருகிறார்களோ வரட்டும்' என்று அப்படியே இருக்கிறான்!

கம்பராமாயணத்திலே சொல்கிறார்–'இன்றைக்குத்தானே வந்தான் இத்தனை நாளாக வரவில்லையே' என்று எங்காவது உண்டா...? இல்லவே இல்லை. பகவான் அந்த கணக்கெல்லாம் பார்ப்பதில்லை. வருகிறவன் அக்கிரமங்கள் பல பண்ணி விட்டு வரட்டுமே... அப்பா அம்மாவையே கொன்று குவித்துவிட்டு வரட்டுமே... அவன் அப்படி வந்தானே என்று பாராமல், இன்றைக்கு வந்திருக்கிறான்; பாவத்தையே பண்ணிவிட்டு வந்திருக்கிறான், இன்றைக்காவது வந்தானே! என்று பரமாத்மா சந்தோஷப்பட்டு அனுக்கிரஹம் பண்ணுகிறார்.

பாவம் மொத்தத்துக்கும் பரிகாரம் பண்ணி முடித்துவிட்டு பிறகு நாம் பகவானிடத்தில் போவது என்றால் அது எப்போது சாத்தியப்படும்! அலை எப்போது ஓய்வது? நாம் எப்போது சமுத்திர ஸ்நானம் செய்வது?

அதனால் நாம் விரைந்து பகவான் திருவடியைப் பற்ற வேண்டும். பற்றிய கணமே ஆட்கொள்வான். அப்போது நெல் செய்ய புல் தேயுமா போலே, நம் பாவங்களும் தாமே விலகும்.

'நெல் செய்ய...' என்றால்...? நெல்லைப் பயிரிட்டால் அந்த இடத்தில் புல் முளைப்பது தானாக நின்று போய்விடும். மீண்டும் விளையாது. அந்த மாதிரிதான் பகவான் திருவடியை நாம் பற்ற பாபங்கள் விலகும்.

– இது மந்திர ரூபமாக உபநிஷத்தில் இருக்கிறது. இதுவே 'விச்வம் விஷ்ணுர் வஷட்காரோ' என்று ஆரம்பித்து, 'பூதாத்மா பூத பாவன:' என்பது வரையிலே சஹஸ்ர நாமத்திலும் சொல்லப்படுகிறது.

பரப்ரும்மம்! அதைப் போன்று மற்றொன்று இல்லாததனாலே சர்வசராசரங்களுக்குள்ளேயும் இருக்கிறது. அதனால், மகான்களுக்கெல்லாம் எந்த வஸ்துவிலும் உள்ளே இருக்கிற பகவான்தான் புலனாவான். அஞ்ஞானிகளான நமக்குத்தான் வெளி வஸ்துக்கள் மட்டும் தெரியும்.

(வளரும்)

ஹீரோக்களைத் துரத்தி, துரத்திக் களைத்துப் போன மெழுகு பொம்மை ஹீரோயின்களைப் பார்த்துப் பார்த்து, கண்கள் களைத்துப் போய்விட்டது தமிழ் ரசிகர்களுக்கு. இதைப் புத்திசாலித்தனமாக மோப்பம் பிடித்து, களத்திலும் இறங்கிவிட்டார் லூட்டி படத்தை இயக்கிய பரமேஷ்வர்.

"கவர்ச்சி என்றால் ரம்பா, குறும்பு என்றால் ஜோதிகா, குழந்தை என்றால் லைலா என்று தமிழ் ரசிகர்கள் மனப்பாடமாகச் சொல்லுவார்கள். இந்த மென்மையான ரோஜாக்களின் கையில் கூர்மையான வாளையும், ஏ.கே. 47 எந்திரத் துப்பாக்கியையும் கொடுத்து ஆக்ஷன் ரோஜாக்களாக ஆக்கினால் என்ன என்று யோசித்தேன். 'த்ரீரோஸஸ்' படத்துக்கான கரு கண் இமைப்பதற்குள் கிடைத்துவிட்டது'' என்கிறார் பரமேஷ்வர்.

முழுக்கதையையும் தயார் செய்துகொண்டு முதலில் ரம்பாவிடம் கால்ஷீட் வாங்குவதற்காகக் கதை சொல்லப் போயிருக்கிறார் இயக்குனர். கதையைக் கேட்ட ரம்பாவின் சகோதரர் வாசு, 'இந்தப் படத்தை நானே தயாரிக்கிறேன்' என்று ஒப்புக்கொள்ள, கோடம்பாக்கத்தில் இப்போது த்ரீரோஸஸ் பற்றித்தான் பேச்சு.



"மூன்று துறுதுறு கல்லூரி மாணவிகள். வகுப்புகளுக்கு மட்டம் போட்டுவிட்டு இண்டர்நெட்டிலும் டிஸ்கோத்தேவிலும் லூட்டி அடிக்கும் இவர்களுக்குத் தேசப்பற்று இருக்கக்கூடாது என்று யார் சொன்னது! எனவே வில்லனிடமிருந்து தாய்நாட்டைக் காக்க ஆயுதம் ஏந்தி, அதிரடி சாகஸங்களைச் செய்து அசத்துகிறார்கள்'' என்று கதைச் சுருக்கத்தைக் சாதோரமாய்க் கடித்த இயக்குனர். "படம் முழுவதும் வரும்படி ஒரு முன்னணி ஹீரோவும் உண்டு. அவர் யார் என்பது கடைசிவரை சஸ்பென்ஸ், முடிந்தால் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள்'' என்று சவால்விடவும் செய்கிறார்.

முப்பது நிமிடம் கிராபிக்ஸ் காட்சிகள் இடம் பெறும் இந்தப் படத்தில், 'ஆளவந்தான்' படத்திற்கு உருவாக்கப்பட்டதைப் போல, 'ஹாலிவுட் சாஃப்ட்வேர்களை' வைத்து, ஹாலிவுட் தொழில் நுட்பக் கலைஞர்கள் மூலமே அவற்றை உருவாக்கப் போகிறார்களாம். படத்தின் க்ளைமாக்ஸ் முழுவதையும் நடுக்கடலில் படமாக்க



இருக்கும் 'த்ரிரோஸஸ்' படக் குழு. இதற்காக விஷேச படப்பிடிப்பு சாதனங்களையும் ஹாலிவுட்டிலிருந்து குத்தகைக்கு எடுக்கிறதாம்!

என்னையா இது, ஹாலிவுட் ஹாலிவுட் என்று கிட்டத்தட்ட எல்லா தமிழ்ப் படங்களுக்கும் விளம்பரம் செய்கிறார்கள். கடைசியில் கொடைக்கானலிலும், சுவிட்சர்லாந்திலும் பாடல் காட்சியைப் படம் பிடித்து வந்து காட்டுகிறார்கள் என்று எரிச்சல் வருகிறதுதானே?

'த்ரிரோஸஸ்' நெசமாலுமே ஹாலிவுட் தொடர்பு உள்ள படம் என்பதை நீங்கள் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். பின்னே... ஹாலிவுட்டின் கறுப்பு வெள்ளை காலத்தில் ஆரம்பித்து, இன்று வரை 'சார்லீஸ் ஏஞ்சல்ஸ்' என்றால் ரசிகர் அடம் பிடித்துக்கொண்டு போய் விழுந்து விழுந்து பார்ப்பார்கள். காரணம் ஆக்ஷன் மற்றும் மலிவான கவர்ச்சியுடன் சார்லீஸ் ஏஞ்சல்களாக மூன்று ஹீரோயின்கள் 'கலைச் சேவை' செய்வதுதான் ஹாலிவுட் பாரம்பரியம்.

ஆக்ஷன் ரோஜாக்கள்!

அதைத் தமிழுக்கு அப்படியே ஈ அடிச்சான் காப்பியாக கொண்டு வருகிறீர்களா? என்று கேட்டதும் பரமேஷ்வருக்குச் சுள்ளென்று கோபம்.

"சத்தியமா இல்லீங்க... இது இளைஞர்கள், பெரியவர்கள் என்று யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். நாகரிகமாய் எடுப்போம்' என்று உறுதி தருகிறார்.

படத்தில் சூப்பர் ஸ்பெஷல் என்று ஏதாவது உண்டா? என்றால் ஆமாம் என்கிறார். ஒற்றைப் பாடலுக்கு நடனமாடத்தான் இதுவரை பாலிவுட் ஹீரோயின்களைத் தமிழுக்கு அழைத்து வந்திருக்கிறோம். நாங்கள் நடிகர் கோவிந்தாவை ஒரு பாடலுக்கு (ரசிகர்கள் பயப்பட வேண்டாம். மூன்று நாயகிகளுடன் சேர்ந்துதான் ஆடப் போகிறார்) நடனமாட அழைத்து வருகிறோம்'' என்கிறார்.

பிரகாஷ் ராஜ், விவேக், தேவன் என்று ஒரு முன்னணிப் பட்டாளம் புகுந்து கலக்கும் இந்தப் படத்திற்கு, 'லகான்' படத்திற்குப் பின்னணி இசை அமைத்த ரஞ்சித்பரோட் இசை அமைக்கிறார். பி.சி. ஸ்ரீராமின் அசோசியேட் ஒளிப்பதிவாளர் நிரவ் படம் பிடிக்கிறார். கடைசியாகக் கிடைத்த தகவலின்படி, அந்த ஹீரோ 'அர்ஜுன்' என்று கேள்வி! நெசமா?

— சக்கரத்தாழ்வார்



சுமி சூப்பர் மார்க்கெட்

எனக்கு 'நோஸ் கட்' ஏற்பட்டதிலே ரொம்ப பேருக்கு ஏக சந்தோஷம். 'அமெரிக்காவைப் பத்தி உல்லால் சக்ரபாணியுடைய ஜோசியமெல்லாம் சரி... பின்லேடன் தாக்குதலை முன் கூட்டியே ஏன் அவர் கண்டறியலை? ஆகவே உனக்கு நோஸ் கட். இதுதான் அவங்களோட விளக்கம்.

இதிலே எனக்கெங்கே நோஸ்கட்...? உ.ச.பாணி சொன்னதைச் சொன்னேன். அவ்வளவுதானே? நடந்தே தீரும்னு அவருக்கு நான் ஒத்தூதலையே. மேலும் 2033ல நடக்கப் போகற ஆன்மிகப் புரட்சியைப் பார்த்து உறுதி செய்ய நாம இருப்போமா மாட்டோமான்றது அந்த பின் லேடனுக்குத்தானே வெளிச்சம்.

எனி ஹௌ... நம்ப மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சின்னா என்னுடைய சப்பை மூக்கு இன்னும் கொஞ்சம் சப்பையாகறதுல எனக்கொண்ணும் அப்ஜெக்ஷனே கிடையாதுப்பா.

அடுத்த மெயில் ஹரி கிட்டேயிருந்து... சுமின்ற பேருக்கு என்ன விளக்கம்னு எழுதியிருந்தாரில்லையா... இப்போ ஜகா வாங்கறார். சுமி என்றால் சுத்தம் கிடையாது. சுசி என்றால்தான் சுத்தம்னு திருத்தம் அனுப்பிருக்கார். இதிலே பரமாச்சார்யார் பெயரை வேற இழுத்து... ஹரி, டோன்ட் பீ இன் எ ஹரி! ஆர, அமர யோசிச்சு நிதானமா எழுதுங்க.

சின்ன கல்யாணி

'பாத்திரப் படைப்பு' பத்தி எழுதியிருந்ததுக்குக் கொஞ்சம் லேட்டா ரியாக்ட் பண்ணிருக்காங்க திருச்சி மன்ற உறுப்பினர் சாமனி.

'யானை மண்டை' மட்டுமா..? ஜஸ் டம்ளர், கமலத்தட்டு, ரயில் அடுக்கு, கோதாவரி குண்டு, இப்படி நிறைய இருக்கு சுமி. தூக்குகளிலேயே மல்லிகைப்பூ தூக்கு, பீப்பாய்த் தூக்கு, குண்டுச்சட்டித் தூக்கு எல்லாம் உண்டு' அப்படின்னு எழுதிருக்காங்க.

எல்லாத்தையும்விட தமாஷ், இவங்க ஒரு ஃப்ரெண்ட் வீட்டிலே கேட்டதாகச் சொல்லியிருக்கிற உரையாடல் :

"சின்ன கல்யாணி எங்கே...?"

"மேடையிலே..."

"பெரிய கல்யாணி...?"

"அடுப்பிலே..."

பரத நாட்டியத்துல தாமரைப்பூ முத்திரை பிடிப்பாங்களே, அப்படி ஒரு ஷேப்ல இருக்கற பாத்திரம்தான் கல்யாணியாம்.

வாங்கித் தந்தவர் பெயராலேயே விளங்கும் கிரிஜா ஆன்ட்டி தூக்கு ஒன்று, சாமனி வீட்டில் இருக்கிறதாம்.

பின் லேடன் வால்தனமெல்லாம் பண்றதுக்கு முன்னால ஒரு நாள் மயிலாப்பூர் கபாலி கோயில் போயிருந்தேன். செருப்பு வைக்கற இடத்துல பக்கெட்டுல தண்ணியிருந்தது - கை கழுவிக்கறதுக்கு. செருப்பைத் தூக்கி கவுன்டர் மேல வைச்சுட்டுக் கை கழுவிக் கொள்ளலாம். ரொம்ப தாட்ஃபுல். செருப்புக்கு டோக்கன் கொடுக்கிற எல்லா இடங்களிலேயும் இப்படித் தண்ணி வசதி செய்து வைக்கலாம்.

ரொம்ப சாதாரண எளிமையான பிஸினஸ் பண்றவங்க இப்படி இருக்க, நல்ல ஏ.ஸி. கடையிலே ஒரு சி.டி. 'வாங்கப்போன எக்ஸ்பீரியன்ஸையும் சொல்லணும்.

ஒரு குறிப்பிட்ட சி.டி. வேணும்னு கேட்டதுமே 'ஸ்டாக் இல்லை'ன்னுதான் முதலில் பதில் வந்தது. அப்புறம் ஒரு சுத்து சுத்தினார் கடைக்காரர். பின்னால் இருந்த கடைச்சிப்பந்தி ஓடிப்போய் ஸ்டாக் ரூம்ல சரிபார்த்து நான் கேட்டதைக் கொண்டு வந்துட்டாங்க. என்ன விலைன்னு கேட்டதும் கம்ப்யூட்டர் தட்டிப் பார்த்துச்

சொன்னார். அப்படியே பில்லும்... விலையை கம்ப்யூட்டர்ல பதிவு பண்ணி வைச்ச மாதிரி ஸ்டாக் பொஸிஷனையும் பண்ணிக்கலாமே. 'இல்லை பாட்டு' - அதுவும் தப்பான டியூன்ல - பாட வேண்டாமில்லையா!

'மன்ற உறுப்பினர்களுக்கு இது பத்தி ஏதேனும் கருத்து இருந்தா பகிர்ந்துக்கலாம். 'ஆளைவிடு' சுமி. 5.20 பஸ் இன்னிக்கு ஏன் வரலைன்னு நீ முதல்ல சொன்னா உன் கேள்வி களுக்கு நாங்க பதில் யோசிக்கறோம்'ன்னு சொல்றீங்களா...! நான் சரண்டர் ஆறேன்பா!

- சுமி

பெரிய கில்யாணி!



கொஞ்சம் சீரியஸ் விஷயங்களுக்கு வருவோமா..? யெஸ்; அமெரிக்கா நிலை மையைத்தான் சொல்றேன். பின் லேடனோ அவரோட 'அறிவுப்படை'யோ ஏதோ ஒன்று படு சாமர்த்தியமான திட்டம் தீட்டி உழைச்சிருக்கு. இப்போ தற்கொலைப்படை யிலே இடம் பெற்று செத்துப் போனவங் களை விடுங்க. இந்தத் திட்டத்தை இவ்ளோ கச்சிதமா நிறைவேத்தணும்னா அதுக்காகப் பாடுபட்ட கும்பல் ஏற்கெனவே பல தியாகங் களைச் செஞ்சிருக்கும் இன்க்லூடிங் உயிர்த் தியாகம். இல்லாது போனா அரசு ராணுவம் ஒற்றர்படைன்னு ஒண்ணுவிடாம எல்லாத்துக் கண்ணுலயும் மண் தூவ முடியுமா?

சாமர்த்தியம் மட்டுமில்லாம, கஷ்டங் களைத் தாங்கிக்கற சக்தி, ஒரு குறிக்கோளுக் காக உயிரைக் கொடுக்கிற வெறி... எல்லாமே இருந்திருக்கு. அத் தனையும் ஆக்கபூர்வமா பயனாகறதுக்குப் பதிலா அழிவுக்கு உபயோகிக்கப்பட்டிருக்கு.

ஏன் இது நடக்குது...? மனுஷன் நாகரிகத்துல முன்னேற முன்னேற இப்படிப்பட்ட நீசத்தனங்களைக் குறைச்சிட்டு வரவேண்டாமா...

பின்லேடனோ இன்னொரு தலைவரோ வகுக்கிற திட்டத்தை நிறைவேற்றக் காத்திருக்கறவங்க என்ன ஆதாயம் கருதி அதைச் செய்யறாங்க? தற்கொலைப் படையா மாறிடறதுல என்ன பெருமை இருக்கு..?

பதிலே கிடைக்காத கேள்விகள் அலை மாதிரி கிளம்பிக்கிட்டே இருக்கு.

வெற்றியின் சிகரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போதே, ஓய்வு பெறும் மனப் பக்குவம் எல்லோருக்கும் வந்து விடாது. அந்த விஷயத்தில், ஓட்டப்பந்தயக் களத்தின் சூப்பர் மேன் ஆன மைக்கேல் ஜான்சன் சிம்ப்ளி கிரேட்!

ஐந்து தடவை ஒலிம்பிக்கில் உலக சாம்பியன் பட்டம் வென்றவர். இவரது உலக சாதனைகளை முறியடிக்க, இவரேதான் மறுபடி பிறவி எடுத்து வரவேண்டும். நானூறு மீட்டர், இருநூறு மீட்டர் இரண்டிலுமே ஒரே நேரத்தில் தங்கம் வென்ற ஒலிம்பியன். அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற தடகளப் போட்டியில் தமது வெற்றிக் கொடியை உயரப்பறக்க விட்டு, அதே சமயம், தாம்

ஓட்டத்துக்கு குட்பை!



தடகள ஓட்டத்திலிருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்துவிட்டார்.

ஓட்டம் மற்றும் கால்பந்து இரண்டிலும் ரொம்ப ஆர்வம் காட்டியவர் இந்த ஹீரோ. இரண்டு வருடங்களில் கால்பந்து வேண்டாம் என்று முடிவெடுத்து, தடகளத்தில் இறங்க, வெற்றிமேல் வெற்றி!

ஓட்டப்பந்தயங்களில், வழக்கமாக இருநூறு மீட்டர் ஓடுகிறவர்கள், நூறு மீட்டர் ஓட்டத்திலும் கலந்து கொள்வார்கள். ஆனால், மைக்கேல் ஜான்சன், இருநூறு மீட்டரில் ஆரம்பித்து, அடுத்து நானூறுமீட்டருக்குப் போனார்.

காயம் காரணமாக 88ம் வருடம் ஒலிம்பிக்ஸில் ஜெயிக்க முடியவில்லை. அடுத்த தடவை பார்சிலோனாவில், கண்ட தோல்விக்குக் காரணம் சற்று விசித்திரமானது. ஒலிம்பிக்கில் பங்கேற்க சென்ற ஜான்சன் தன் மேனேஜருடன் சாப்பிட ஓட்டலுக்குப் போனார். அந்த உணவு ஒத்துக் கொள்ளவில்லை. உடல் நலம் குன்றி, செமி பைனல் ரவுண்டிலேயே தகுதி இழந்தார்.

1996 ஒலிம்பிக்ஸின்போது, 200மீ, 400மீ இரண்டிலும் தங்கம் வெல்வது தமது லட்சியம் என்று அறிவித்தார். உலகமே புருவம் உயர்த்தியது. காரணம், அதற்கு முந்தைய இரண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் அவரால் ஜெயிக்க முடியவில்லை. இப்போது எப்படி சாத்தியம்? ஒலிம்பிக்ஸில் இவர் ஜெயித்துக் காட்டியபோது புருவம் உயர்த்தியவர்களின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

"ரிடையர்மெண்ட்டுக்குப் பின், தடகள கோச் ஆவீர்களா?" என்றால், "நமக்கு என்னதான் திறமை இருந்தாலும், அடுத்தவருக்குப் பயிற்சி கொடுக்க, தனித் திறமை தேவை. அது என்னிடம் இல்லை என நினைக்கிறேன்" என்று பதில் அளிக்கிறார் மைக்கேல் ஜான்சன்.

— எம். பாரதி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

அறிமுகம்
ஹோம்மேட் தேங்காய் பால்.
கெட்டியான, முதல் பிழியப்பட்ட பால்.



ஹோம்மேட் தேங்காய் பால். நயமான தேங்காய்களின் முதல் பிழிந்தெடுக்கப்பட்ட பால். உங்கள் விரலால் தொட்டு பார்த்தாலும், கீழே சொட்டி விழ மறுக்கும் கெட்டியான படிவமாக அது படிந்திருப்பதைப் பாருங்கள்.

ஹோம்மேட் தேங்காய் பால் உங்கள் சமையலுக்கு தனிப்பட்ட, அருமையான சுவையை அளிக்கிறது. அதிகமாகவே சமையுங்கள்- உங்கள் குடும்பத்தினர் இன்னும் வேண்டும் என கேட்டுக் கொண்டேயிருப்பார்கள்...

HOMMADE
COCONUT MILK

Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a newspaper in Srilanka



"உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் மட்டுமே துணிகளுக்கு இணையற்ற வெண்மையின் ஜொலிப்பை தரும்"

INSTA-WHITENING SYSTEM

ஜோதி லேபின் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சி மூலம், பரிசுத்தமான, துணிகளை, சேதப்படுத்தும் இரசாயனக் கூறுகள் எதுவும் இதில் இல்லை என நிரூபணம் பெற்ற மிக சிறப்பான ஃபார்முலாதான் உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம். தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளினுள் ஆழ்ந்து உளடுருவி, துரிதமாக செயல்பட்டு, துணிகளில் வெண்மையின் வெளிச்சத்தை கொண்டு வருவது உஜாலா **சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டத்தால்** மட்டுமே முடிந்த ஒன்று.


விஞ்ஞான ஆதாரமற்ற முறையில் அல்லாத சாதாரணமான தயாரிப்புகளில் உள்ள தரங்குறைந்த இரசாயனங்கள் நாளடைவில் துணிகளில் நூலிழைகளை பாதித்து, வலுவற்றதாக்கிவிடும் துணிகளில் கறைகளை ஏற்படுத்தும்போது, உஜாலா சுப்ரீம் துணிகளுக்கு வலிமை குறையாதிருக்கச் செய்து வெண்மையை நிலை நிறுத்துகிறது.

விஞ்ஞான உண்மைகளை அறியாத ஒரு சிலர் உஜாலாவின் வாக்குறுதிகளையும் அதன் செயல்திறனையும் நம்ப மறுக்கலாம். அவர்கள் அறியாதது அதன் சிறப்பான ஃபார்முலாவையே.

நீங்களே சந்தேகங்களை போக்கிக் கொள்ள சுயமாக சோதித்துப் பாருங்கள்.



சாதாரண தயாரிப்புகளில் உள்ள தரம் குறைந்த இரசாயனங்கள் துணிகளில் நூலிழைகளை சேதப்படுத்துகின்றன



உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் துணிகளில் இணையற்ற **வெண்மையான வெளிச்சத்தை** தருகிறது



UJALA *Supreme*

வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.